DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1359 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 22, 2022

## "உலகெங்கும் வாழும் எழுத்தாளர்களின் பரிசுச் சிறுகதைகளை தொகுத்துள்ள கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் பாராட்டுக்குரிய ஒரு இலக்கிய அமைப்பாகும்"

### ஸ்காபுறோ நுல் வெளியீட்ட விழாவில் 'சிந்தனைப் பூக்கள்' பத்மநாதன் புகழாரம்



"கனடாவில் கடந்த 29 வருடங்களாக இயங்கிவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் உலகெங்கும் இயங்கும் இலக்கிய அமைப்புக்களின் மத்தியில் தனித்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இந்த வெற்றிகரமான அமைப்பு உலகின் பல நாடுகளிலும் வாழும் எழுத்தாளர்களின் பரிசு பெற்ற சிறுகதைகளை தொகுத்து சாதனை புரிந்துள்ளது. இதற்காக கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் பாராட்டுக்குரிய ஒரு இலக்கிய அமைப்பு என்ற வகையில் கனடா வாழ் தமிழ் மக்கள் அமைப்புக்கள் அதனைப் பாராட்ட வெண்டும்"



இவ்வாறு கடந்த ஞாயிற்றுக் நடைபெற்ற கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் நூல் வெளியீட்ட விழாவில்" உரையாற்றிய சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் புகழாரம் சூட்டினார். *(தொடர்ச்சி உள்ளே 13ம் பக்கத்தில்)*

## கனடாவில் 'குட்டீஸ் ஆடலாமா' சீசன் - 4 நடனப்போட்டியில் சாய்கவின் ஸ்ரீதரனுக்கு முதற்பரிசு

### கொரொனா காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த இறுதிப் போட்டிக்கு ஆர்வத்துடன் மண்டபத்தை நிறைத்த ரசிகர்கள் கூடி மகிழ்ந்தனர்





கடந்த சனிக்கிழமை 16ம் திகதி கனடாவில் மார்க்கம் நகரில் அமைந்துள்ள " மார்க்கம் தியேட்டர்" என்னும் அற்புதமானதும் நவீன வசதிகள் கொண்டதுமான மண்டபத்தில் நடைபெற்ற "குட்டீஸ் ஆடலாமா" சீசன்-4 நடனப்போட்டியில் சாய்கவின் ஸ்ரீதரன் முதற்பரிசைத் தட்டிக் கொண்டார். இவருக்கு உலகெங்கும் இருந்து பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன. வெற்றியாளன் சாய்கவின் ஸ்ரீதரன் அவர்களுக்கு பாராட்டுக் கேடயங்கள் மற்றும் 2000 டாலர்களுக்கான காசோலை ஆகியன வெற்றி மேடையில் வைத்து வழங்கப்பெற்றன. *(தொடர்ச்சி உள்ளே 11ம் பக்கத்தில்)*

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE AGENT
Mortgage Alliance RIGHT TEAM
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ KUMAR 416.843.3333 416.453.7777

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX BLUE FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CASH JOBS! CASH JOBS!
Cleaning வேலை வாய்ப்புக்கள்
Full time -Part time
Cleaners and Subcontractors wanted for Aurora/New Market areas.
Biweekly Payments.
அழையுங்கள்:
Raj @ 647-302-5324 Call or Text

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

MONEY PROBLEMS?
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.







## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Cleaning வேலை வாய்ப்பு

Richmond Hill, Vaughan நகரங்களில் Cleaning வேலை செய்வதற்கு ஆட்கள் உடனடியாகத் தேவை. காலை. மாலை. நள்ளிரவு ஆகிய 3 Shifts களில் வேலை செய்யலாம்.
Full Time and Part- Time.

தொடர்புகளுக்கு: சங்கர்
(416) 305-0264

### Help Wanted

**East end restaurant needs cook and helpers on full time basis Tuesday to Sunday. Accomodation Sunday night or Monday morning drop off is available. Wages details will be discussed with the interested candidate.**

**Please contact 416-294-7887 for further details**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
**Office: (416) 613 8998**
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

**Requirements:**
- **Minimum 3-4 years experience**
- **Cross Border experience**
- **Good Communication Skills**
- **Clean Abstract**

**Please Contact 416-835-6701**

### COMPUTER REPAIR

**Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.**

**VARUNAN: 416-894-6244**

### Office Assistant Wanted

ஸ்காபுறோவில் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றிற்கு பகுதி நேர உதவியாளர் தேவை.
தமிழ் மற்றும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
**Computer skills and strong communication skills are required.**

**For more details call: 416-752-1524**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் மூவினங்கள் சார்ந்த உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும்

நீலக் கடல் நீரால்சூழப்பட்ட இலங்கைத் தீவின் உள்ளே வீதிகளில் தீச் சுவாலைகள் பற்றி எரிகின்றன. வீடுகளில் 'அடுப்பை' எரிக்க முடியாதவர்கள் வீதிகளுக்கு வந்து எரிந்த நெஞ்சங்களோடு போராடத் தொடங்கியுள்ளனர். அவர்களது வயிறுகளும் பசியால எரிகின்றன என்பதை அவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் நன்கு அறிவார்கள்.

ஆனால் வீதிகளில் இறங்கியுள்ள அந்த அப்பாவிகள் மீது பழியைப் போடுவதற்காக ஆயுதப் படையினரும் பொலிசாரும் பொது மக்களின் வாகனங்களுக்கு தீவைக்கின்றனர்.

இவ்வாறாக இலங்கை என்னும் அழகிய தேசம் அழுக்கானவர்களின் கைகளுக்குள் அகப்பட்டு அலங்கோலமாகத் தெரிகின்றது. அவர்குளை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவதற்காகவே இடம்பெறுகின்ற போராட்டங்கள் அரசின் காவலர்களான 'காடையர்களால் அடக்கி ஒடுக்கப்படுகின்றன.

இன்னொரு பக்கத்தில் தேசம் ஊழல் பேர்வழிகளின் ஆட்சிக்குள் அகப்பட்டு தற்போது, பொருளாதாரச் சுமையில் சிக்கித் தவிக்கின்ற இந்த நேரத்தில அமைச்சரவையில் அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் நியமனம் வழங்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆட்சி பீடத்தை ஆட்டும் வகையில் மக்கள் எழுச்சியுடன் போராடுகின்ற இந்த நெருக்கடியான வேளையில் கற்றவர்களையும் ஊழல் அற்றவர்களையும் அமைச்சர்களாக ஏற்றிருக்க வேண்டும். ஆனால்

ஆனால், வியாழேந்திரன் சிவநேசத்துரை சந்திரகாந்தன் என்னும் பிள்ளையான் போன்றவர்கள் இராஜாங்க அமைச்சர்களாக பதவியேற்றுள்ளார்கள் என்கின்ற விடயம் மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

கோத்தபாய என்னும் ஆட்சி பீடக் கொள்ளையர்களின் தலைவன் பதவி-யை விட்டு நீங்கிச் சென்று விட வேண்டும் என்றும் நான்கு பக்கங்களிலிருந்தும் எழுச்சிக் கோசங்கள் எழுந்து நிற்கையில். அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் சொகுசுக் கார்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த பொருளாதார நெருக்கடிகள் நிறைந்த நாட்களில் வியாழேந்திரனும் பிள்ளையானும் நாடு முழுவதற்கு எதைச் செய்து 'சாதிக்கப் போகின்றார்கள்' என்று மக்கள் கேள்விகளை முன்வைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இவ்வாறிருக்கையில் சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற றம்புக்கனை சம்பவத்தின் போது தீப்பற்றி எரிந்த முச்சக்கர வண்டிக்கு பொலிஸார் தீ வைத்த காணொளி தன்னிடம் உள்ளதாக நேரில் பார்த்த ஒருவர் நீதிபதி ஒருவரிடம் நேரடியாகத் தெரிவித்துள்ள சம்பவம் எதைக் காட்டுகின்றது என்பதை நாம் சற்று யோசிக்க வேண்டும்.

ஆட்சியாளர் எவ்வளவு கொடியவர்களாக இருப்பினும், அவர்கள் தங்கள் பதவியில் தக்க வைக்கப்பட வேண்டும் என்பதையே முப்படைகளும் உறுதி செய்ய வேண்டும் என்பதான ஏற்பாடுகள் உள்ளன. உழைப்பவர்கள் அல்லாதவர்களால் நிரப்பப்பட்டுள்ள ஆட்சி அதிகாரம் கொண்ட மாளிகைகளில் உள்ள ஆடம்பர மண்டபங்களில் இடம்பெறும் அவர்களது கலந்துரையாடல்களில் இந்த வகையான தீர்மானங்கள் அவர்களது நலனைக் காப்பதற்காய் எடுக்கப்பெறுகின்றன.

ஆனால் ரம்புக்கனைச் சம்பவம் இடம்பெற்ற போது இரண்டு பொலிஸாரும்,இராணுவத்தினர் ஒருவரும் வருகை தந்தனர்.பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்கு உயரமான,மெலிந்த பொலிஸ் ஒருவரே தீ வைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளினால் யாழ்ப்பாணம் வன்னி போன்ற பகுதிகளிலிருந்து பெருமளவு தமிழ் மக்கள் தமிழ்நாட்டை நோக்கி படகுகளில் பயணிக்கும் 'பயங்கரப் பயணம் அந்த ஆழக்கடலின் மேலாக இடம்பெறுகின்றது.

ஒரு பக்கம் ஆழக்கடலின் அலைகளின் அகோரம். மறுபக்கம் இலங்கை இந்த கடலோரக் காவல் படையினரின் ரோந்து நடவடிக்கைகள். இவ்வாறான நெருக்கடிகளுக்குள்ளும் எமது மக்கள் தமிழகம் நோக்கிச் செல்லுகின்றார்கள் என்றால் அதன் சிரமங்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறாக மாங்கனித் தீவாம் இலங்கையில் தற்போது யதார்த்தமாகத் தெரியும் அரசியல் மற்றும் சமூகக் கொந்தளிப்பில் இருந்து விடுதலை பெற அங்குள்ள மூவின மக்களை உள்ளடக்கிய உழைக்கும் பிரிவினர் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர்களுக்குள் அடங்கியுள்ள புத்திஜீவிகள் அரசியல் நாற்காலிகளை கைப்பற்ற வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

# மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 18 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் — இதுவரையில் இலங்கையிலிருந்து தற்போது வரை 60 பேர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம்

இலங்கையிலிருந்து மேலும் 4 குடும்பத்தைச் சேர்ந்த 17 நபர்களும் தனி நபர் ஒருவர் உள்ளடங்களாக 18 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது

மன்னாரைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும்,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் 4 நபர்கள், தனி நபர் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

. கடந்த புதன்கிழமை வரை 42 இலங்கை தமிழர்கள் இலங்கையில் இருந்து புறப்பட்டு தனு'கோடி வழியாக தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்று முகாம்களில் தங்கியுள்ள நிலையில் தற்போது நான்கு மாத கர்ப்பிணி,ஒன்றரை வயது குழந்தை உட்பட 4 குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 18 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தனு'கோடியில் தஞ்சமடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தனு'கோடி இலங்கைக்கு அருகே உள்ளதால் இலங்கையில் ஏற்பட்ட இறுதிக்கட்ட போரின் போது இலங்கை தமிழர்கள் தங்கள் உயிர்களை காப்பாற்றி கொள்ள அகதிகளாக தனு'கோடி வழியாக தமிழகத்திற்கு வந்து இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று 21ம் திகதி வியாழக்கிழமை காலை மன்னார் மாவட்டம் பேசாலை கடற்கரையில் இருந்து இரண்டு படகுகளில் மன்னார் அடம்பன் மற்றும் உயிலங்குளம் பகுதிகளைச் சேர்ந்த பிரதீப், கஸ்தூரி, சுமித்ரா, நகுலன்,பியோனா, நகுலேஸ்வரன் என நான்கு மாத கர்ப்பிணி பெண் ஒன்றரை வயது சிறுவன் உட்பட மூன்று குடும்பத்தை சேர்ந்த 13 இலங்கை தமிழர்கள் வியாழக்கிழமை இரவு 10 மணி அளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு பயணித்து அங்கு இறங்கினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மரைன் போலீசார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசார-ணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியை சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 நபர்களும்,அப்பகுதியைச் சேர்ந்த தனி நபர் ஒருவர் உள்ளடங்களாக 5 பேர் இன்று (22) வெள்ளிக்கிழமை அதிகாலை தனு'கோடியை சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரண-மாக தற்போது அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை, விலை கடுமையாக உயர்ந்துள்ளது அத்துடன் மருத்துவ பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே தனது நான்கு மாத கர்ப்பிணி மனைவிக்கு பாதுகாப்பாக குழந்தை பிறப்பதற்காக தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாக பாதுகாப்பு அதி-காரிகள் நடத்திய விசாரணையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பால் மாவு மற்றும் கோதுமை யின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் தனது ஒன்றரை வயது குழந்தையை வைத்து இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வரும் நாட்களில் உணவு பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளதால் குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தான் தமிழகத்திற்கு குடும்பத்துடன் அகதியாக வந்ததாக தெரிவித்துள்ளனர். பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைக்குப் பின் இந்த 18 இலங்கைத் தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

மேலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ம் தேதி முதல் இன்று வரை 60 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.


INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome
Personal Tax -No slip charge $30.00
Pension Welfare Student $20.00
Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting ntax 24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.



# கோட்டபாய ராஜபக்சவின் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் இல்லை - நாமல் ராஜபக்ச

இலங்கை செய்திகள் Sri Lanka News

கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் இருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச, அரச தலைவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றி தனது திட்டங்களை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டு ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மக்கள் ஏன் அரசாங்கத்தின் மீது கோபமாக உள்ளனர் என்பது எனக்கு புரிகிறது இருப்பினும், இப்போது கோபத்திற்கான நேரமல்ல, தீர்வுக்கான நேரம்.

அரச தலைவரும் அரசாங்கமும் நாட்டிற்கான திட்டங்கள் குறித்து வெளிப்படையாக குரல் கொடுத்திருக்க வேண்டும்.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அதைச் சமாளிப்பதற்கான அவரது திட்டங்கள் குறித்து விளக்கமளித்திருக்க வேண்டும்.

மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பது அவர்களின் உரிமை என்றாலும் அத்தகைய கோபம் பயனற்றது என்பதுடன், நெருக்கடியை உருவாக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தமைக்காக கைதான பொலிஸ் உத்தியோகத்தருக்கு பிணை!!

## சட்டத்தரணிகள் இலவசமாக ஆஜர்..!





ஜனாதிபதிக்கு எதிராக காலிமுகத்திடலில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தில் அதற்கு ஆதரவாக பொலிஸ் உத்தியோகத்தர் கருத்து தெரிவித்தார். பின்னர் அவரை விசாரணைக்காக பொலிஸ் திணைக்களம் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்ததுடன் அவரை கைதுசெய்தது.

04-15-2022 அன்று பொலிஸ் உத்தியோகத்தரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை அவருக்காக 12 சட்டத்தரணிகள் கட்டணம் எதுவுமின்றி ஆஜராகினர். மக்கள் நலனிற்காக இந்த நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டனர்.

தற்போது இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் கைது செய்யப்படுபவர்களின் சார்பில் சட்டத்தரணிகள் இலவசமாக ஆஜராகிவருகின்றனர்.

பொலிஸ் உத்தியோகத்தருக்காக ஆஜராகிய நாங்கள் ஒருவர் தனது கருத்தை தெரிவிப்பது குற்றமில்லை - அது ஒருவரின் அடிப்படை உரிமை என நீதிமன்றத்தில் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

அரசாங்கமே இந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது - நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தனது கவலையை வெளியிடுவது குற்றமில்லை என தெரிவித்தோம் எனவும் அவர் குறிப்பிட்டார். இதனை தொடர்ந்து நீதிமன்றம் பிணைவழங்க முன்வந்தது என அவர் குறிப்பிட்டார்.

# தமிழ் தரப்பிற்கு ஆட்சியினை வழங்குங்கள் என்கிறார் செல்வம் எம்.பி!



நாட்டின் ஆட்சியை ஒரு வருடத்திற்கு தமிழ் தரப்பிற்கு வழங்குங்கள். ஒரு வருடத்தில் இந்த நாட்டினை நிமிர்த்தி காட்டுகின்றோம். என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சனிக்கிழமை (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.

ஜனதிபதியாகும் தகுதி கோட்டாபயவிற்கு இல்லை என்று எமது மக்கள் வாக்குகள் மூலம் அன்றே ஆருடம் சொல்லியிருந்தார்கள். கோட்டாவும், மகிந்தவும் ஆயுதப்போராட்டத்தை மௌனிக்க செய்ததாக வெற்றி விழா கொண்டாடினார்கள்.

ஆனால் சர்வதேசத்தின் உதவியுடன் தான் எமது போராட்டத்தை மௌனிக்க செய்தார்களே தவிர இவர்களது திறமையால் மௌனிக்க வில்லை என்பதை இன்று விளங்கிக்கொள்ள முடியும்.

இன்று சிங்கள மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இதன் மூலம் எமது போராட்டம் நியாயமானது என்பதை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் போராட்டக்காரர்களால் வெளிப்படையாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இதை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஈழத்தை கொடுத்திருந்தால் அது பணத்தை தந்திருக்கும் என்று முன்னாள் ராணுவ வீரர் ஒருவர் சொல்கிறார்.

அன்று இரத்தினபுரியில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட போது விடுதலைப் புலிகள் சிங்கள மக்களுக்கு உதவிகள் வழங்கியிருந்தனர். அந்த வரலாற்றை நாம் மறக்க முடியாது.

எனவே அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற சிந்தனை ஓட்டத்தை நாங்கள் இன்று செய்தாக வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் சிங்கள மக்களிடம் ஒரு வேண்டு கோளை விடுக்கின்றேன். தமிழ் தரப்பிற்கு ஆட்சியினை ஒரு வருடம் வழங்குங்கள் ஒரு வருடத்தில் இந்த நாட்டினை நிமிர்த்தி காட்டுகின்றோம்.

தமிழ் சிங்கள மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கும் படியாக எமது செயல்பாடு இருக்கும். அதை நாங்கள் எமது போராட்ட காலங்களில் நிரூபித்து காட்டியிருக்கின்றோம்.

அத்துடன் இந்த ஜனாதிபதி முறையால் தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னுடைய அதிகாரத்தை தமிழ் மக்களிற்காக ஒருமுறையும் பயன்படுத்தவில்லை. குறிப்பாக ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கூட பயன்படவில்லை. இதுதான் இலங்கையின் நியதி.

எனவே ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைக்க வேண்டும். அதற்கான சரியான பேரம் பேச லுக்கான சந்தர்ப்பம் இன்று ஏற்பட்டுள்ளது. எனவே பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ் கட்சிகள் ஒன்றாக இணைந்து இதற்கான முடிவுகளை எடுக்க வேண்டும்.

அரசியல் மாற்றம் தொடர்பாக செய்பவர்களுடன் நாம் நிபந்தனையை முன்வைக்கவேண்டும். உடனே சென்று கையெழுத்து போடும் நிலை இருக்க கூடாது. என்றார்.



# அமைச்சுப் பதவிகளை பெற்று முஸ்லிம் மக்களை தலை குனிய செய்து விட்டார்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹீனைஸ் பாரூக் குற்றச்சாட்டு

04-16-2022 அன்று இந்த அரசாங்கத்துக்கு எதிராக பாமர மக்கள் படித்த மக்கள் என்று அனைவரும் அரசாங்கமும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக கோ'மிட்டு கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் விட்ட தவறுகளை அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்த மக்களே சுட்டிக் காட்டக் கூடிய ஒரு நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் அமைச்சுப் பதவிகளை பெற்று முஸ்லிம் மக்களை தலை குனிய செய்து விட்டார்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹீனைஸ் பாரூக் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (19) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் இந்த அரசாங்கமும் அரசாங்கத்தைச் சார்ந்தவர்களும் செய்த அடாவடித்தனங்கள் அட்டூழியங்களுக்கு கடவுள் கொடுக்கும் சாபமாக இந்த பிரச்சனை எழுந்திருக்கிறது. அதனை இன்று பெரும்பான்மை இன மக்களே மேடை போட்டு சொல்கிறார்கள்.

ஆனால் குறிப்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை எடுத்திருப்பது என்பது முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு தலைகுனிவை ஏற்படுத்தி இருக்கிறது. வெட்கம், ரோசம், மானம் இருந்தால் இந்த அமைச்சுப் பதவிகளை அவர்கள் எடுத்திருக்க மாட்டார்கள்.

பள்ளிவாசலுக்குள் நோன்பிருந்த பொது பன்றி இறைச்சியினை வீசி எறிந்தார்கள். அதேபோல் கிறிஸ்தவ தேவாலயங்களில் குண்டு வைத்து தங்களது ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் ஆட்சி பீடம் ஏறுவதற்கு சதி செய்தார்கள்.

இதனால் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் இன்னும் சிறை வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவ்வாறு அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் என்று யார் யாரெல்லாம் அரசாங்கத்துக்கு எதிராக செயல்பட்டு கேள்வி கேட்டார்கள் அவர்களை அடையாளம் கண்டு இந்த அரசாங்கம் அடக்கி ஒடுக்கி வைத்தது.

எமது வன்னி மாவட்டத்தை பொறுத்த மட்டில் மீன் பிடி விவசாயம் பிரதான தொழிலாக இருக்கிறது. அதற்கு எரிபொருள் விலையேற்றம் பசளை தொடர்பாக இந்த அரசாங்கம் கொண்டு வந்த கொள்கைகளினால் மக்கள் அன்றாடம் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பல காரணங்களுடன் முஸ்லிம்களுக்கு இந்த அரசாங்கம் செய்த அட்டூழியங்களை சுட்டிக்காட்டி ஆர்ப்பாட்டங்கள் செய்கின்ற இந்த நேரத்தில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை எடுத்து இருக்கின்றார்கள்.

அவர்கள் இந்த அரசாங்கத்தின் ஆட்சியை பாதுகாக்கவும் அவர்களுடைய சொகுசு வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் அமைச்சுப் பதவிகளை பெற்றிருக்கிறார்கள். இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் அவர்களைப் பொறுத்தமட்டில் இவரை அரசியலுக்கு கொண்டு வந்து அரசியலில் அறிமுகப்படுத்தினேன்.

பாராளுமன்ற தேர்தலில் பாராளுமன்றத்தில் எனக்கும் சதி செய்து அவர் பாராளுமன்றத்திற்கு சென்றார். இவ்வாறான ஒருவரை யா நான் பாராளுமன்றம் செல்வதற்கு உதவி செய்தேன் என்று நானே வெட்கி தலை குனிகிறேன்.

அதே போல் இந்த நாட்டில் வாக்களித்த மக்களுக்கு மக்களின் உணர்வுகளை மதிக்காமல் தங்களுடைய சொகுசு வாழ்வையும் தங்களுடைய தொழிலையும் தக்க வைத்துக் கொள்வதற்காக இவ்வாறு அமைச்சுப் பதவிகளை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு, எரிபொருட்கள் இல்லை, அத்தியாவசிய பொருட்களுக்கு விலை ஏற்றம் என ஏங்கி எங்களுக்கு ஒரு புதியதொரு அரசாங்கம் வராதா? என்று மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வன்னி மாவட்டத்தில் அமைச்சுப் பதவியை எடுத்திருக்கும் மஸ்தான் பெரும்பான்மையாக வாக்களித்த முஸ்லிம் மக்களுக்கு துரோகம் செய்துள்ளார்.

இதனால் முஸ்லிம் மக்களுக்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹீனைஸ் பாரூக் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மண்டபம் வந்துள்ள இலங்கை தமிழர்களுடன் முதல்வர் ஸ்டாலின் கலந்துரையாடல்

## அத்தியாவசியத் தேவைகளை கேட்டறிந்தார்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள தீவிரப் பொருளாதார நெருக்கடியினால் தமிழகம் வந்து, மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுடன் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக கலந்துரையாடினார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள தீவிரப் பொருளாதார நெருக்கடியினால், அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக இலங்கைத் தமிழர்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு தமிழகத்தை நோக்கி வரத் தொடங்கி உள்ளனர்.

இந்நிலையில், முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் அவ்வாறு வரும் இலங்கைத் தமிழர்கள் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

### பிரதமரிடம் கோரிக்கை

சொந்த நாட்டில் வாழ முடியாமல் தங்களுடைய வாழ்வை இழந்து, இந்தியாவிற்குள் அடைக்கலம் தேடி வரும் இலங்கைத் தமிழர்களை சக மனிதர்களாகக் கருதி, அவர்களை அரவணைக்க வேண்டியது நம்முடைய கடமை என்றும், தற்போது இலங்கையிலுள்ள அசாதாரண சூழ்நிலையில், இந்தியாவிற்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கும், ஏற்கெனவே தமிழக முகாம்களில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போன்று, தற்காலிகப் புகலிடம் வழங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகளை வழங்கிட அனுமதி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி கடந்த ஏப்ரல் 1-ம் தேதியன்று தமிழக முதல்வர், பிரதமரிடம் கேட்டுக் கொண்டார்.

பின்பு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருடனான தமது தொலைபேசி உரையாடலின்போது, பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கைத் தமிழர்கள் தங்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் தமிழகத்திற்கு வந்து கொண்டிருப்பதை தான் தெரிவித்தபோது, இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் உரிய ஆலோசனை செய்து, அதற்குப் பிறகு இது தொடர்பான நடவடிக்கைகள் குறித்துப் பரிசீலிக்கலாம் என்று மத்திய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

### தூத்துக்குடியில் இருந்து உணவு அனுப்பத் தயார்

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து உணவு தானியங்கள், காய்கறிகள், மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை, கடுமையான உணவுத் தட்டுப்பாட்டால் சிக்கித் தவிக்கும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும், தலைநகர் கொழும்பில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும், தோட்டங்களில் பணிபுரிந்து வருவோருக்கும் பொருட்களை அனுப்புவதற்கு தமிழக அரசு உறுதியோடு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதோடு, இலங்கையில் நிலவும் இத்தகைய மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு விரைவில் பொருட்களை அனுப்புவதற்கான வசதியை உடனடியாக செய்து தருமாறும் தமிழக முதல்வர் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இலங்கைத் தமிழர்களுக்குத் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து உணவு தானியங்கள், காய்கறிகள், மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கு விரைவில் உரிய வசதியை செய்து தருமாறும், யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை முன்கூட்டியே விடுதலை செய்வதற்குத் தேவையான சட்டப்பூர்வ உதவிகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

### மண்டபம் முகாம்

இந்நிலையில், 13 குடும்பங்களைச் சார்ந்த 39 இலங்கைத் தமிழர்கள் கடல் வழியாக தமிழகம் வந்துள்ளனர், இவர்களில் 11 ஆண்கள், 11 பெண்கள் மற்றும் ஒரு கைக்குழந்தை உட்பட 17 குழந்தைகள் உள்ளனர். இவர்கள் அனைவரும் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அவர்களுக்கு தமிழக அரசு சார்பில் உணவும் வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே, 19,223 இலங்கைத் தமிழர் குடும்பங்களைச் சார்ந்த 58,547 நபர்கள் ராமநாதபுரம் மற்றும் திருச்சி உட்பட தமிழகத்தின் 29 மாவட்டங்களில் உள்ள 108 மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசு மறுவாழ்வு முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு தங்குமிடம், குடிநீர் வசதி, மின்சார வசதி, ஒவ்வொரு மாதமும் கருணைத் தொகை, குழந்தைகளுக்கு இலவசக் கல்வி மற்றும் கல்வி உதவித் தொகை, அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குதல், மானிய விலையில் ஓராண்டுக்கு ஐந்து எரிவாயு உருளைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் தமிழக அரசால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக அவர்களுடன் நேற்று கலந்துரையாடினார். அவர்களது அத்தியாவசியத் தேவை மற்றும் நலன் குறித்தும் விசாரித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், செஞ்சி. கே. எஸ். மஸ்தான் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் டி. ஜகந்தாதன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குமாவத் மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# காக்கி என்பது காக்கும் கரங்களும் கூட!

வே பாலகிருஷ்ணன் இ.கா.ப -- மண்டல காவல்துறைத் தலைவர், திருச்சி, தமிழ்நாடு



அன்று வேதாரண்யம் கடற்கரையில் Olive Ridley Turtle கடல் ஆமைக் குஞ்சுகள், நண்டுகள் ஊர்வது போல், லத்தியும், துப்பாக்கியும் பிடித்த எங்கள் கைவிரல்களில் இருந்து மெதுவாக நழுவி கடல் அலைகளை நாடிச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வருடந்தோறும் நடக்கும் நிகழ்வாக இது இருந்த போதிலும் இம்முறை காவல் அதிகாரிகள் கைகளில் இருந்து கடற்கரை வாயிலாக கடலுக்குள் சென்ற ஆமைக் குஞ்சுகள் நம் வாழ்க்கையின் ஆதாரமான சுற்றுச்சூழல் சுகாதாரத்திற்கு அச்சாரமாக இருக்கிறது என்றால் உண்மை.

சுற்றுச்சூழல் என்பது மனித உயிர்களின் வாழ்க்கைக்கும், பாதுகாப்புக்கும் மட்டுமே முக்கியமானது அல்ல. மனிதர்களின் வாழ்வோடு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பின்னிப்பிணைந்து இருக்கும் ஒன்று. மற்ற உயிர்களின் வாழ்விடமும் அதை ஒட்டி இருக்கும் சுற்றுச்சூழலும் அந்த உயிரினங்களின் வாழ்க்கைக்கு மட்டுமில்லாமல் மனிதனின் வாழ்க்கைக்கும் இந்த அண்டத்தின் உயிருக்கும் அடிப்படையாகும். சுற்றுச் சூழலில் சிறிய சிறிய மாற்றங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்படும்பொழுது அந்த உயிரினங்கள் தங்கள் வாழ்க்கையில் அந்த மாற்றங்களை உள்வாங்கி சரிபடுத்திக் கொள்கின்றன. ஆனால் அந்த மாற்றங்கள் திடீரென பெரிய அளவில் வரும்பொழுது அதை உள்வாங்கும் சக்தியும், அதற்கேற்ற மாறுதல்களை உருவாக்கும் சக்தியும் இருப்பதில்லை.

அந்தத் தருணங்களில் ஒரு உயிரினத்தின் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றம் மற்ற உயிரினங்களின் வாழ்க்கையையும் பெருமளவில் பாதிக்கிறது. பெரும்பாலும் திடீரென ஏற்படும் இயற்கை மாற்றங்களும், மனிதர்களால் நீண்டகால விளைவுகளை கருத்தில் கொள்ளாமல் உடனடி தேவையை மனதில் கொண்டு படைக்கப்பட்ட கண்டுபிடிப்புகளும் தான் மற்ற உயிரினங்களின் வாழ்க்கையிலும் அவற்றின் சுற்றுச் சூழலிலும் மீளமுடியாத மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. ஒரு சில நேரங்களில் தெரியாமல் நடக்கும் விளைவுகளை சரியான நேரத்தில் கண்டுபிடித்து அதனை சரி செய்வது புத்திசாலித்தனம். அது மனிதகுலத்தின் நிலைத்திருத்தலுக்கும் அவசியமாகும். எப்படி குற்றச் சூழல் அல்லது குற்றம் புரிவதற்கான காரணங்களை நியாயப்படுத்தும் வகையில் ஒருவரின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து அவைகளை சரி செய்வது குற்றங்களைத் தடுப்பதற்குத் தேவையோ, அதேபோல் சுற்றுச்சூழலில் ஏற்படும் குறைபாடுகளைக் கண்டுபிடித்து அவற்றைச் சரிசெய்வது நம்முடைய வாழ்க்கையை நிலைப்படுத்த முக்கியமானதாகும். குற்றங்களை தடுப்பதற்கு எந்த அளவிற்கு சமூகச்சூழல் பங்கு வகிக்கிறதோ அதற்கும் அதிகமாக சுற்றுச்சூழல் மனிதர்கள் மற்றும் உயிரினங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிறது.

காவல்துறையின் கடமை என்பது குற்றங்களை தடுப்பது மற்றும் கண்டுபிடிப்பதோடு இல்லாமல் விலங்கின மற்றும் தாவர உயிர்களை காப்பதும் கூட கடமையாக உள்ளது. 2016 ஆம் ஆண்டு சென்னையில் “வரதா” புயல் தாக்கியபோது, சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலான மரங்கள் கிளைகளை இழந்ததும், உயிரை இழந்ததும் என்னைப் போன்ற காக்கிகளின் உயிரை உருக்கியது. பெரிய பெரிய வலிமையான மரங்களே வேரோடு விழுந்த போது சிறுசிறு மரங்கள் சாய்ந்து விழுவது தவிர்க்க முடியாத இயற்கை நிகழ்வு. ஆகவே மனிதர்களை காக்கும் பணி முடிந்தவுடன் மரங்களை காக்கும் பணியை ஆரம்பித்தோம்.



மயிலாப்பூரில் நடைப்பயிற்சி மேற்கொள்வோரின் உயிர்கூடமாக அமைந்த நாகேஸ்வரா பூங்கா மற்றும் மெரினா கடற்கரை பூங்காவில் விழுந்திருந்த சிறு சிறு மரங்களை என்னுடன் 25 காவலர்கள் இணைந்து அந்த மரங்களை தூக்கி நிறுத்தி அவற்றிற்கு முட்டுக்கொடுத்து 500-க்கும் மேற்பட்ட மரங்களை உயிர்ப்பித்தோம்.

அதுபோல் PEOPLE FOR CATTLE அமைப்பு மூலம் எல்லாக் காவல் நிலையங்களிலும் பறவைகள் மற்றும் விலங்குகள் கோடைக்காலத்தில் பயன் அடைவதற்காக தண்ணீர் வசதி செய்து ஏற்பாடு செய்யப்பட்டது.

வாடின பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்பது வள்ளலாருடைய வாக்கு; அந்த வாக்கு என்பது நம்முடைய தமிழ் பரம்பரையில் ஒரு வேதவாக்காக கருதப்பட்டு தமிழர்கள் தன்னுயிரை இன்னுயிராக காப்பதோடு விலங்குகளையும், இன்னும் சொல்லப்போனால், தாவரங்களையும் ஒரே போல பாவித்து அவற்றை பாதுகாப்பதில் அக்கறை செலுத்தி வருகின்றார்கள்.

தமிழகக் காவல்துறை அத்தத்துவதின் நீழ்ச்சியாக, இந்த எண்ணங்களை பிரதிபலித்து நடந்து வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மனிதர்களில் பல்வேறு சூழல்களில் இருப்பவர்களுக்கு அவருடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு காவல்துறை நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் வாய் பேச முடியாத, தங்களுடைய பிரச்சனைகளை சொல்ல முடியாத விலங்குகளுக்கும் ஏதேனும் தீங்கு ஏற்படாதவாறு விலங்குகள் பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்தி நடவடிக்கை எடுத்துவருகிறது.

Olive Ridley Turtle என்னும் ஆமை வகை பல வருடங்களுக்கு முன்பு அழிந்துவிடும் சூழலில் இருந்த போது இந்திய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் அதாவது ஒரிசா, தமிழ்நாடு, ஆந்திரா போன்ற கிழக்கு கடற்கரை ஓரம் உள்ள மாநிலங்களும் ஒன்றிணைந்து அந்த ஆமை இனத்தை பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை ஆரம்பித்தன. அந்த ஆமைகள் எதனால் அழிந்து போகக் கூடியச் சூழலில் உள்ளன என்பதை சுற்றுப்புறச் சூழல் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்து அதன்பின் அவை முட்டையிடுவதற்கு ஏதுவான சூழல் கடற்கரைகளில் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டு அதற்கான நடவடிக்கைகளில் இறங்கினர்.

தமிழ்நாட்டில் காவல்துறை மற்றும் வனத்துறை இரண்டுக்கும் அணிந்திருக்கும் உடையில் மட்டுமல்ல ஒற்றுமை மனதளவிலும் ஒற்றுமை இருக்கின்றது என்பதை நிரூபிக்கக் கூடிய வகையில் காட்டு விலங்கினங்களை பாதுகாப்பதற்கும், காட்டில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும் இணைந்து செயல்பட்டு வருகின்றனர் என்பது உண்மை.

இந்த Olive Ridley Turtle ஆமை வகை பொதுவாக முட்டையிடுவதற்கு கடலை விட்டு வெளியே வந்து கடற்கரையில் மணல் குவியல்களில் முட்டையிடுகின்றன. பின்னர் கடலுக்குள் சென்று விடும். சுமார் 60 நாட்களில் அந்த முட்டை குஞ்சுகளாக பொரித்து பின் தண்ணீருக்குள் செல்லும். இதுதான் இயற்கையாக நடக்கக்கூடிய வாழ்க்கைச் சுழற்சி. இந்த வாழ்க்கைச் சுழற்சி தடைபடும் விதமாக இந்த ஆமைகள் கடல் நீரில் இருந்து வெளியே வரும்போது மனித செயல்களால் ஒரு சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக நாம் பயன்படுத்தப்படும் நெகிழி (Plastic) மற்றும் கடற்கரையில் மீனவர்கள் பயன்படுத்தும் வலைகள் சில நேரம் அறுந்து விட்ட வலையாகக்கூட இருக்கலாம், அல்லது வலைகளைக் காய வைப்பதற்காக கடற்கரையில் போட்டிருக்கலாம் அதுபோன்ற சூழ்நிலைகளில் ஆமை இனங்கள் தண்ணீரிலிருந்து கடற்கரையில் வந்து முட்டையிடுவதற்கு தடை ஏற்படுகிறது. சில நேரம் அந்த வலைகளில் சிக்கி உயிரிழப்பும் ஏற்படுகின்றது. பொதுவாக நூறு முட்டைகள் பொரித்தால் அதில் பத்துக்கும் குறைவான முட்டைகள் மட்டுமே குஞ்சுகளில் இருந்து வளர்ந்து பெரிய ஆமைகளாக ஆவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இடைப்பட்ட காலத்தில் அவை மற்ற உயிரினங்களால் உணவாக உட்கொள்ளப்பட்டு மிஞ்சியிருக்கும் குஞ்சுகள் மட்டுமே வளர்கின்றன.



ஆகவே தமிழக வனத்துறை கடந்தப் பல வருடங்களாக நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் கடற்கரையில் இந்த ஆமை இனங்களுடைய எண்ணிக்கையை பராமரிப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் முட்டை இடக்கூடிய Olive Ridley Turtle வகை ஆமைகளை பாதுகாப்பான சூழலில் முட்டையிடவைத்து, அந்த முட்டைகளை சரியான வகையில் சேமித்து பொரிக்க வைக்கின்றனர். இதற்காக அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் மூலம் மணல் குவியல்களை ஏற்படுத்தி 60 நாட்கள் அந்த முட்டைகளை பாதுகாப்பு வேலிக்குள் வேறு எந்த உயிரினமும் சாப்பிட்டு விடாமல் பாதுகாக்கின்றனர். பின், அவை பொரித்தவுடன் ஒரு சில மணி நேரத்திற்குள் கடல்நீரில் அவைகளை விடுதலை செய்வது வழக்கம். அதை ஒவ்வொரு வருடமும் வனத்துறை செய்து வருகிறது.

இந்த வருடம் காவல் துறையும், வனத்துறையும் இணைந்து இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்தது Olive Ridley Turtle-இன் முக்கியத்துவம் சுற்றுப்புறச் சூழலில் எவ்வளவு முக்கியமானது என்பதை காவலர்கள் உணர்ந்து கொள்ளமுடிந்தது. மேலும் காவல் அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்ததால் இது பெரிய அளவில் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டு பொதுமக்கள் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, வனவிலங்கு பாதுகாப்பில் குறிப்பாக Olive Ridley Turtle பாதுகாப்பில் அவர்களின் கடமையை உணர்த்தவும் உதவியது.

மேலும் இந்நிகழ்வு கடல் உயிரினங்களை பாதுகாப்பதில் காவல்துறையினர் வனத்துறையோடு சேர்ந்து செயல்படுவதற்கு ஒரு உதாரணம். மேலும் பொதுவாக வனவிலங்குகளை காப்பதற்கும் காவல்துறை துணை நிற்கும் என்பதை உணர்த்துகின்ற நிகழ்வாக இருந்தது.

கடலோரக் காவல் நிலையங்கள் சார்பாக கடலோர கிராமங்களில் கடலோரக் கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு மாதந்தோறும் அவர்களுக்கான கூட்டங்கள் நடத்தப்படுகிறது. கடலோரப் பாதுகாப்புக்கு அம்மக்கள் எப்படி உதவ முடியும் என்பதைப் பற்றி தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு கடற்கரையில் நடக்கக்கூடிய குற்றங்கள் பற்றிய தகவல்களை உடனடியாக காவல்துறைக்கு தெரிவிப்பதற்கும் உதவுகிறது. சந்தேகப்படக்கூடிய நபர்கள் யாரேனும் தென்பட்டால் அவர்களைப் பற்றிய தகவலை உடனடியாக காவல்துறைக்கு பரிமாறுவதற்கும், போதைப் பொருட்கள் கடத்துவதை தடுப்பது தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான குற்றவாளிகள் பற்றிய தகவல்கள் என கடலோரக் கண்காணிப்பு குழுக்கள் காவல் துறையினருக்கு பல்வேறு வகையிலும் உதவி வருகிறன்றன.

அதே போல் மீனவர்களுக்கு உள்ள குறைகள் பற்றிய தகவல்களையும் அந்த கூட்டத்தில் காவல் அதிகாரிகளுக்கு எடுத்து சொல்லும் போது அந்த குறைகளை களைவதற்கு காவல்துறை நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கிறது. ஆகவே கடலோர கண்காணிப்பு குழுக்கள் Olive Ridley Turtle ஆமைகளைப் பாதுகாப்பதில் அதனுடைய பங்கை இந்த நிகழ்ச்சியின் மூலம் நாம் இனிவர இருக்கின்ற கடலோர காண்காணிப்பு குழு கூட்டங்களில் சொல்ல இருக்கின்றோம்.



# எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கையின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஹிங்குராங்கொடை, பத்தேகம, திகன, காலி, மாதம்பே, கம்பளை, கண்டி, கேகாலை மற்றும் மத்துகம ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, ரயில் மார்க்கத்தை மறித்து ரம்புக்கனை நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள எதிர்ப்பு நடவடிக்கையினால் குறித்த பகுதியூடான ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரம்புக்கனை - மாவனெல்ல, ரம்புக்கனை - கேகாலை, ரம்புக்கனை - குருணாகல் வீதிகளை மறித்தும் ரம்புக்கனை நகரில் தற்போது ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனிடையே, ரம்புக்கனை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியையும் மறித்து மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால், அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியூடான வாகன போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸா ர் தெரிவித்தனர்.

இதேவேளை, அனுராதபுரம் புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கண்டி - மஹியங்கனை பிரதான வீதி தெல்தெனிய நகரில் மறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காலி பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள சுற்றுவட்டம் அருகே பஸ்கள் நிறுத்தப்பட்டு வீதி மறிக்கப்பட்டுள்ளது. மாத்தறை நகரிலும் வீதி மறிக்கப்பட்டு மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

எரிபொருள் விலையேற்றம், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க நேரிட்டுள்ளமையால் மக்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

திங்கட்கிழமை (18) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# தமிழர்களை ஏற்று சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத வரை இந்த தேசத்தை அறம் நின்று கொல்லும் என்பதை நீங்கள் இப்போதே உணர்வீர்கள்

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் காலி முகத்திடல் போராட்டம் குறித்து திறந்த மடல்




சிங்களவர்கள் தமிழர்களை எதிரிகளாகவும், விரோதிகளாகவும் நோக்கியதாலேயே தமிழர்கள் சிங்கள தேசத்தை அயல்நாடாக உணர்ந்தனர். உண்மையும், நீதியும், சத்தியமும் அறவுணர்வும் தமிழர்களின் கோரிக்கையில் இருந்த போதும் சிங்கள தேசம் அதை முழுமையாக புறக்கணித்தது என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் போராட்டம் குறித்து தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் புதன்கிழமை (20) விடுத்துள்ள திறந்த மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மடலில் மேலும் குறிப்பிடுகையில், தங்களின் ஜனநாயகப் போராட்டம் கடந்த பத்து நாட்களுக்கு மேலாக தன்னெழுச்சியாக நடப்பதை யிட்டு நாமும் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில் ஜனநாயகப் போராட்டம், ஆயுதப் போராட்டம் என கடந்த 70 ஆண்டுகளாக எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் நீங்கள் நடாத்துவது வாழ்தலுக்கான போராட்டம்.

நாம் நடத்தியது வாழ்வுரிமை இருப்பிற்கான போராட்டம் இரண்டிற்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு.

தமிழ் மக்கள் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு விதமான அடக்குமுறைக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். இனக் கலவரங்களான 1956, 1958, 1977, 1983 நான்கு கட்ட ஈழப்போர் என வார்த்தையில் வர்ணிக்க முடியாத துயரத்தை எதிர்கொண்டோம்.

சமத்துவமான வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்டதன் விளைவே வன்முறையாக தோற்றம் பெற்றுள்ளது.

சிங்களவர்கள் தமிழர்களை எதிரிகளாகவும், விரோதிகளாகவும் நோக்கியதாலே தமிழர்கள் சிங்கள தேசத்தை அயல்நாடாக உணர்ந்தனர். உண்மையும், நீதியும், சத்தியமும் அறவுணர்வும் தமிழர்களின் கோரிக்கையில் இருந்த போதும் சிங்கள தேசம் அதை முழுமையாக புறக்கணித்தது.

அடிமையாக இரண்டாந்தர மனிதர்களாக நடத்தியதன் விளைவே ஆதிக்க எதிர்ப்பின் குறியீடாகவே தலைவர் பிரபாகரன் தோற்றம் பெற்று யுத்தம் உருவெடுத்தது அழகிய தேசம் உருகுலைந்து, பொருளாதரமின்மையிலும் சிக்குண்டு சின்னாபின்னமாக சிதைவுற்று இனவாதிகளே, இனவாதிகளை அகற்றும். ஜனநாயக யுத்தத்தில் ஈடுபடுகிறீர்கள்.

ஆனால் நாம் மகிழ்ச்சியடையவில்லை. நிலப்பறிப்பு குடிப்பரம்பல் மாற்றம் மொழிச்சிதைப்பு, பண்பாட்டுச்சிதைப்பு, பொருளாதார அழிப்பு உயிரிழப்பு தனிச்சிங்கள சட்டம் இது மட்டுமா? பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், சந்திரிக்கா பிரபாகரன் ஒப்பந்தம், ரணில் பிரபாகரன் ஒப்பந்தம் என பலவற்றால் ஏமாற்றப் பட்டுள்ளோம் “இறப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல” என்பதே தமிழர்கள் மனோநிலை.

ஆகவே இந்த ஜனநாயகப் போராட்டத்தை நடாத்துவது யார்? உங்கள் அடிப்படைக் கொள்கை என்ன? 225 பேரும் வேண்டாம் என்றால் நீங்கள் கோரும் இடைக்கால அரசை நடத்துவது யார்? ஆட்சி மாற்றத்தாலோ அல்லது ஜனாதிபதி மாற்றத்தாலோ தற்போதைய பிரச்சினை தீர்ந்து விடுமா? உங்களிடம் என்ன திட்டம் இருக்கிறது? உங்களை பின்னுக்கு இருந்து இயக்குவது யார்? அரச சார்பற்ற நிறுவனங்களா? அல்லது பன்னாட்டு தூதரகங்களா? அல்லது சிங்கள பெருவர்த்தகர்களா? இதுவரை இந்தப் போராட்டத்தின் தலைமை யாரென வெளிப்படையாக உணர முடியவில்லை “புரட்சி என்பது மாலை நேரத்து விருந்தல்ல” என்றார் மாவோ.

ஆகவே இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று சிங்கள கலைஞர்கள் அழைத்துள்ளனர். நல்லது வரவேற்கின்றோம். ஆனால் நாம் ஏன் வரவேண்டும்? எதற்காக வரவேண்டும்? உங்கள் போராட்டத்திற்கும், எமக்கும் என்ன சம்பந்தம் உண்டு. இதற்கு வருவதால் தமிழர்களுக்கு என்ன நன்மை பயக்கும்?.. போராட்ட இடத்தில் தமிழில் தேசிய கீதத்தை பாடவே முடியவில்லை இனி இழப்பதற்கு ஏதுமற்ற ஏதிலியாய் உள்ள நாம் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேல் அனுபவித்தவற்றில் சில விடயங்களை நீங்கள் இப்போது எதிர்கொள்கிறீர்கள்.

முதல் முறையாக எதிர்கொள்வது என்பது கடினம்தான். அதை நாமும் உணர்ந்து கொள்கிறோம். எம்மை தமிழனாக அல்ல மனிதனாக கூட நீங்கள் நினைக்கவில்லையே! மனிதாபிமானத்திற்கு கூட பயங்கரவாத முத்திரை பதித்து பொருளாதார தடை விதித்து எம்மை நசுக்குவதில் கூட்டாக இன்பம் நுகர்ந்தவர்கள் நீங்கள்.

எமது நிலமையை புரிந்து கொண்ட ஒரு சில சிங்கள முற்போக்காளர்களும் உள்ளனர் என்பதையும் நாம் புரிந்து கொள்கின்றோம்.

குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் என எந்த விதமான பாகுபாடும் இன்றி கொலை, கைது, கடத்தல், என வகை தொகையின்றி உங்கள் வஞ்சத்தை தீர்த்துக் கட்டினீர்களே! 2009 இறுதி யுத்தத்தில் 146,679 பேரை இனப்படுகொலை செய்தீர்களே! உணவு, மருந்து உறைவிடம் இல்லாமல் கொத்துக் குண்டுகளும், பொஸ்பரஸ் குண்டுகளும் வீசி எம்மை அழித்தீர்களே! பல ஆயிரம் பேரை காணாமல் போகச் செய்தீர்களே உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை இன்றுவரை காணவில்லையே!..

ஒரு இனத்தை அழித்துவிட்டு அவர்கள் தெருவில் நின்று ஓலமிடும் போது நீங்கள் பட்டாசு கொளுத்தி பால்சோறு உண்டு மகிழ்ந்தீர்களே! இது தானா பௌத்தத்தின் பஞ்சசீல தம்பதக் கோட்பாடு “ஊழிற் பெருவலி யாவுழ மற்றொன்று சூழினும் தான் முந்துறும்” என்றான் வள்ளுவன். இப்போது அறம் உங்களை விரட்டுகிறது.

கல்வி அறிவுடைய முற்போக்கு சிங்களவர்கள் கூட தமிழர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளவில்லை. பௌத்த மகா சங்கங்கள் கல்வியியலாளர்கள் கூட வகுப்புவாத இனவாதத்தையே முன்னிலை படுத்துகிறீர்கள். சமஸ்டியை தமிழீழம் என்று சாதாரண சிங்கள மக்களுக்கு இனவாதத்தை ஊட்டுகிறீர்கள்.

சிங்கள இனவாத ஊடகங்களும், அரசியல் வாதிகளும் சொல்வதையே தாரக மந்திரமாக ஏற்றுக் கொள்கிறீர்கள். யுத்தம் முடிவடைந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை எத்தனை சனநாயகப் போராட்டங்கள் நடத்தி விட்டோம். அவையெல்லாம் உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா? அல்லது எமது கோரிக்கைதான் நியாயமில்லையா? இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் தமிழர்களை ஒரு கனம் நினைத்துப் பார்த்தீர்களா? தமிழரின் பூர்வீக மரபுவழி தாயக நிலத்தை அபகரித்து புதிய வரலாறு உருவாக்குவது எல்லாம் உங்கள் பார்வையில் சரிதானா?

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால தடைச்சட்டம் இரண்டையும் வைத்து எவ்வளவு நசுக்குகிறீர்கள். நீங்கள் போராடினால் ஜனநாயக உரிமை அதற்கு பொலிசாரும், இராணுவத்தினரும், நீதிமன்றமும் எவ்வாறு நடந்து கொள்கிறது? நாங்கள் போராடினால் அது பயங்கரவாதம் ஒரு சிவில் செயற்பாட்டாளனாகிய நானே கடந்த பத்து ஆண்டுகளில் சிறை, பொலிஸ் நிலையம், நீதிமன்றம் 23 தடவைகள் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை இவ்வாறு என்னைப்போல் பலர் உண்டு.

இது எல்லாம் உங்களுக்கு புரியாது! இப்படி இருக்கையில் நாம் எப்படி இலங்கையராய் சிந்திக்க முடியும்? இலங்கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சனை உண்டு என்பதை ஆவது புரிந்து கொண்டீர்களா? குறைந்த பட்சம் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பதையாவது ஏற்றுக்கொள்வீர்களா? இனியாவது உணர மாட்டீர்களா?

எதுவும் இல்லாமல் வெறுமனே ஆட்சி மாற்றத்திற்கு குடும்ப ஆட்சியை அகற்றுவதற்கு எம்மோடு கை கொடுங்கள் என்பது எந்த வகையில் நீதியானது. யுத்த வெற்றி நாயகர்கள் என மகுடம் சூடி பௌத்த தேசியவாத மேட்டிமைத்தனத்துடன் ஏகோபித்து வாக்களிக்கும் போது உங்கள் பகுத்தறிவு எங்கே போனது?

தமிழ் மக்கள் இராஜபக்ச களுக்கு ஒரு போதும் வாக்களிக்கவில்லை (2005, 2010, 2015, 2019 ஜனாதிபதி தேர்தலிலும்) 2009ல் தமிழினத்தை அழித்த போது உங்களை மெருகூட்டிய சிங்கக் கொடியுடனே இன்றும் நீங்கள் காலிமுகத்திடலில் நிற்கின்றீர்கள். எங்களுக்கு அதைப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

இந்த இலட்சணத்தில் நாம் எப்படி உங்களுடன் கை கோர்த்துக் கொள்வது.

தமிழர்களின் நீதி பூர்வமான வாழ்வியல் சுய இருப்பின் சமாந்தர சமத்துவ இருப்பை ஏற்றுணர்ந்து இந்த தேசத்தில் உரிமையுள்ள நீண்ட வரலாற்று பாரம்பரியம் உள்ள இனக்குழுமமாக தமிழர்களை ஏற்று சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத வரை இந்த தேசத்தை அறம் நின்று கொல்லும் என்பதை நீங்கள் இப்போதே உணர்வீர்கள் என்பதே மறுக்க முடியாத உண்மை.என குறித்த மடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடிய செய்திகள்
Canadian News

# ரஷ்யா செல்வதால் ஏற்படும் எமக்கு எந்த ஆதாயமும் இல்லை என்கிறார்கள் ரஷ்யாவினால் தடை விதிக்கப்பட்ட அரசியல் பிரமுகர்கள்





“ரஷ்யா செல்வதால் ஏற்படும் எமக்கு எந்த ஆதாயமும் இல்லை. எனவே நாம் எதற்கு அந்த நாட்டுக்குச் செல்ல வேண்டும். அந்த பைத்தியக்காரர்களின் தடை எம்மை ஒன்றும் செய்யாது” இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்.

ரஷ்யாவினால் தடை விதிக்கப்பட்ட கனடாவின் அரசியல் பிரமுகர்கள் பலர். இவர்களில் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களும் ஒருவர் என அறியப்படுகின்றது.

கனடாவில் தற்போது பல்வேறு பதவிகளில் உள்ள முதல்வர்கள், நகர மேயர்கள், உளவுத்துறை மூத்த அதிகாரிகள் உட்பட பல எண்ணிக்கையிலான பிரமுகர்களுக்கு ரஷ்யா தடை விதித்து அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

வியாழக்கிழமை ரஷ்ய வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. மொத்தம் 61 கனேடியர்களின் பட்டியலை வெளியிட்டுள்ள ரஷ்ய வெளிவிவகார அமைச்சகம், பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்கள் ரஷ்யாவுக்கு செல்ல தடை விதித்துள்ளதாக அறிவித்துள்ளது.

மேலும், ரஷ்யாவின் வளர்ச்சிக்கு எதிராகவும் ரஷ்யாவுக்கு எதிரான வெறுப்பை செயல்படுத்துவதில் கனடா நிர்வாகம் முனைப்பு காட்டிவருவதாலும் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில் மேற்படி தடை உத்தரவு காரணமாக தடைவிதிக்கப்பட்டவர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒட்டாவா மேயர் Jim Watson தெரிவிக்கையில், எப்போதும் ரஷ்யாவுக்கு செல்ல தாம் திட்டமிட்டதில்லை எனவும், அவ்வாறான ஒரு முடிவுக்கு தாம் எப்போதும் வரப்போவதில்லை எனவும், ரஷ்யா செல்வதால் ஏற்படும் எந்த ஆதாயமும் தேவை இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அல்பர்ட்டா முதல்வர் Jason Kenney, கனடா மத்திய வங்கியின் ஆளுநர் Tiff Macklem, Saskatchewan முதல்வர் Scott Moe, ஐக்கிய நாடுகள் சபைக்கான கனேடிய தூதரான பாப் ரே, நிதித்துறை துணை அமைச்சர் மைக்கேல் சபியா.

மேலும். மனிடோபா மாகாண முதல்வர் ஹீதர், ரொறன்ரோ நகர மேயர் ரோறி ஒன்றாறியோ முதல்வர் டக் ஃபோர்ட் உட்பட மொத்தம் 61 முக்கிய கனடிய அரசியல் தலைவர்களுக்கு ரஷ்யா தடை விதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எரிபொருள் விலையேற்றம் : யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டியில் பாடசாலைக்கு சென்ற ஆசிரியர்கள்!!!





எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து யாழ்ப்பாணம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர்கள் புதன்கிழமை (20) மாட்டு வண்டியில் பாடசாலைக்குச் சென்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளினால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள பட்டுள்ளதாகவும், இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை எதிர்த்து இன்று முதல் ஒரு வாரம் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாகவும் 300-க்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் சம்மேளனம் என்பன அறிவித்துள்ளன.

ஆசிரியர் தொழிற்சங்கங்களும் இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. பெரும்பாலான ஆசிரியர்கள் இன்று பாடசாலைகளுக்கு செல்லாமல் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே பெற்றோல் விலையேற்றத்தை கண்டித்து இன்றைய தினம் மாட்டுவண்டியில் பாடசாலைக்குச் சென்று தெல்லிப்பழை - யூனியன் கல்லூரி ஆசிரியர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

# இலங்கை தமிழர்கள் மூவர் அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்தனர்



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு பெண்கள், சிறுமி, நான்கு வயது சிறுவன் என ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 பேர் தனுஷ்கோடிக்கு அகதிகளாக புதன்கிழமை (20) அதிகாலை சென்றடைந்துள்ளனர்.

தனுஷ்கோடியை சென்றடைந்த குறித்த இலங்கை தமிழர்களை மீட்ட மெரைன் போலீசார் தனுஷ்கோடி மெரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவர்கள் மட்டக்களப்பில் இருந்து எவ்வாறு தனுஷ்கோடிக்கு சென்றார்கள் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# “மக்களுக்கு சேவை செய்வதே தலையாய கடமை. இதை அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் மனதில் கொள்ள வேண்டும்”

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!

மக்களுக்கு சேவை செய்வதே எமது தலையாய கடமை என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும், அதிகாரிகளும் மனதிற்கொள்ள வேண்டும் என மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் செவ்வாய்க்கிழமை (19) இடம் பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது, “தங்களது எதிர் காலத்துக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி உயிர்நீத்த இளைஞருக்கும், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

குறித்த, மக்கள் ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பயன் படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்ச படையணியினாலேயே ஓர் உயிர் காவு கொள்ளப்பட்டிருக்கின்றது என்றால், அதிகபட்ச படைகளை பயன்படுத்தி இருப்பின் என்ன நேர்ந்திருக்கும்?

ஆகையால், மக்களுக்கு சேவை செய்வதே எமது கடமை என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும், அதிகாரிகளும் மனதிற்கொள்ள வேண்டும்.” என்று கூறினார்.

- மன்னார் நிருபர்

# “நான் குடும்ப அரசியலுக்கு எதிரானவள். எனவே கோட்டாபாய கௌரவமான முறையில் பதவி விலக வேண்டும்”

## - சந்திரிகா வேண்டுகோள்



“நான் குடும்ப அரசியலுக்கு எதிரானவள், ஏனைய எனது குடும்ப உறுப்பினர்கள் அரசியலில் இல்லாத சூழ்நிலையில்தான் நான் முன்னர் தேர்தலில் போட்டியிட்டேன்.

எனது அம்மா ஸ்ரீமாவும் அரசியலிலிருந்து ஒதுங்குவேன் என்ற உறுதிமொழியை எனக்கு பல தடவைகள் வழங்கியிருந்தார். குடும்ப அரசியலுக்கு எதிர்ப்பு என்பதால்தான் எனது மகனைக் கூட அரசியலில் பிரவேசிக்க விடவில்லை. இந்த விடயம் கோட்டாபய ராஜபக்சவால் முடியாது. எனவே, அவர் கௌரவமாகப் பதவி விலக வேண்டும்” இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

மக்களின் கோரிக்கையை ஏற்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கௌரவமான முறையில் பதவி விலக வேண்டும். என இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார பெண் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தி உள்ளது உலக நாடுகளின் தலைவர்களின் காதுகளுக்கும் எட்டியுள்ளதாக கொழும்பில் உள்ள சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், சந்திரிகா அவர்கள் மேலும் தெரிவிக்கையில் ராஜபக்ச குடும்பமும் அரசியலிலிருந்து விரைவாக ஒதுங்க வேண்டும் எனவும் அவர் மிகவும் அழுத்தமாகத் தெரிவித்தார்.

# ரஷிய கப்பல் மூழ்கியபோதே "3 ஆம் உலகப்போர் தொடங்கிவிட்டது" என்கிறது, ரஷிய தொலைக்காட்சி

உலக செய்திகள் World News



ரஷிய போர்க்கப்பல் மூழ்கியபோதே "3-ஆம் உலகப்போர் தொடங்கிவிட்டது" என்று ரஷ்ய அரசு தொலைக்காட்சி கூறி உள்ளது.

கருங்கடலில் ரஷியாவின் முக்கிய போர்க்கப்பலான மொஸ்க்வாவில் வெடிமருந்துகள் வெடித்து தீப்பற்றியதாகவும், அதைத்தொடர்ந்து கப்பல் துறைமுகத்திற்கு செல்லும் வழியில் சூறாவளியில் சிக்கி கடலில் மூழ்கியதாகவும், அதில் பயணித்தவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும் ரஷிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

ஆனால் உக்ரைன் தனது நெப்டியூன் ஏவுகணை மூலம் மாஸ்கோவின் கருங்கடல் கடற்படையின் முதன்மைக் கப்பலான மொஸ்க்வா-யை அழித்ததாக கூறி வருகிறது.

இந்நிலையில், ரஷியாவின் ஊடகமான ரஷ்யா 1 தொலைக்காட்சி இப்போது நடப்பது உக்ரைனுக்கு எதிரான போர் இல்லை, நேட்டோ நாடுகளுக்கு எதிரான போர். அப்படியெனில், இது நிச்சயம் மூன்றாம் உலகப்போர் தான் என கூறியுள்ளது.

ரஷ்யா 1 தொகுப்பாளர் ஓல்கா ஸ்கபேவ் கூறுகையில் போர் தீவிரமடைந்திருப்பத்தை பாதுகாப்பாக மூன்றாம் உலகப் போர் என்று அழைக்கலாம், அது மட்டும் உறுதி" என்று கூறினார். அவர் பேசிய வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது.

# தென்மராட்சி கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி சார் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சி செயலமர்வு



தென்மராட்சி வலயத்தை சேர்ந்த 10 கிராமப்புற பாடசாலைகளுக்கு முதல் கட்டமாக தென்மராட்சி பவுண்டேசன் (Canada), IMHO-USA, ரட்ணம் பவுண்டேசன் (UK) என்பவற்றின் நிதிப்பங்கீட்டில் திறன் பலகைகளுடனான திறன் வகுப்பறைகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவற்றுள் ஓர் அங்கமாக மேற்படி வலயம் சார் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களையும் பயிற்றுவிக்கும் செயலமர்வு IMHO-USA, ரட்ணம் பவுண்டேசன் (UK) என்பவற்றின் அனுசரணையில் ஏப்ரல் 7ஆம், 8ஆம் திகதிகளில் மேற்படி வலயத்தின் முகாமைத்துவ கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இச்செயலமர்வில் இவ்வலயத்தின் பிரதிக்கல்விபணிப்பாளர்கள், உதவிக்கல்விபணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், ஆசிரிய மத்திய நிலைய அதிகாரிகள் மற்றும் வலயத்தின் கணனி கற்கை நிலைய வளவாளர்கள் என 30 பேர் வரையில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சியின் மூலம் திறன் பலகை வழங்கப்பட பாடசாலைகளில் அதன் பயன்பாடு தொடர்பான கிரமமான மேற்பார்வை அறிக்கைகள் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே மேற்படி பாடசாலைகளில் ஆரம்ப மற்றும் இடைநிலை வகுப்புக்களில் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் மூன்று நாடகள் கொண்ட பயிற்சி வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுமுள்ளன.

இவ்வகையிலான திறன் பலகைகளை பயன் படுத்தும் பயிற்சிகளினூடு ஆசிரிய-மாணவ இடைவினை செயற்பாடுகள், கற்றல்-கற்பித்தலில் பாரிய முன்னேற்றங்களுக்கு வித்திடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது மாணவர்களின் சுயசிந்தனை கிளர்வு மற்றும் அவர்களது தன்னம்பிக்கை போன்றவற்றை வளர்த்தெடுப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கும் என்பதும் திண்ணம்.







A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

## கனடா வெஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின்
இரண்டாவது கிழமையில் ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு
மூன்றாவது கிழமையில் திரும்பி வருதல்.

British Colombia, Alberta ஆகிய 2 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களைப் பார்வையிடலாம். Vancouver-Rockies-Banff-Lake Louise-Icefield-Vicoria-Chemainus-Whistler and More...

| | 7 Days | 8 Days | 9 Days | 10 Days | 11 Days | 12 Days | 13 Days | 14 Days | 15 Days |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Reg. Price | C$ 2500.00 | C$ 3000.00 | C$ 3500.00 | C$ 4000.00 | C$ 4500.00 | C$ 5000.00 | C$ 5500.00 | C$ 6000.00 | C$ 6500.00 |
| Sale Price | C$ 2250.00 | C$ 2500.00 | C$ 2750.00 | C$ 3000.00 | C$ 3250.00 | C$ 3500.00 | C$ 3750.00 | C$ 4000.00 | C$ 4250.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு இந்த விலை *3 to 4 Star Hotel or Motel *Including All Admission

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
விமான சீட்டு தங்குமிட வசதி பேருந்து சேவை காலை உணவு மதிய உணவு இரவு உணவு

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்புரிமை இலிருந்து சுரேன் ராகவனை நீக்குவதற்கு நடவடிக்கை

புதிதாக இராஜாங்க அமைச்சராக பொறுப்பேற்ற சுரேன் ராகவனை கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்து நீக்கியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவர் வகித்த உதவிச் செயலாளர், வன்னி மாவட்ட தலைவர் மற்றும் சர்வதேச உறவுகளுக்கான செயலாளர்கள் ஆகிய பதவிகளிலும் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்புரிமை இலிருந்து அவரை நீக்குவதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

# காய்ந்த வயிற்றில் இருந்து தான் புரட்சி பிறக்கின்றது – ரம்புக்கனை அசம்பாவிதத்துக்கு அசாத் சாலி கண்டனம்!



ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனவும், அமைதியான வழியில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு பொலிஸார் மேற்கொண்டு வரும் குறுக்கு நடவடிக்கைகளுக்கு இனியாவது முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல் மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

"மக்கள் பசியாலும் பட்டினியாலும் துன்பப்படுவதனால்தான் வீதிகளில் இறங்கி தமது மனக்கவலைகளை ஆர்ப்பாட்டங்களாகவும் கோஷங்களாகவும் வெளிப்படுத்துகின்றனர்.

காய்ந்த வயிற்றில் புரட்சி பிறக்கிறது என்பார்கள். அந்த வகையில், இன்று நாட்டு மக்கள் சமைப்பதற்கு எரிவாயு இல்லாமலும், தமது அன்றாடத் தொழில்களை மேற்கொள்வதற்கு எரிபொருள் இல்லாமலும் கஷ்டப்படுகின்றனர்.

நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் விண்ணைத் தொடுகின்றது. குறைந்தபட்சம் பான், மா, பேக்கரி பண்டங்களுக்குக் கூட பாரிய விலை ஏற்றப்படுகின்றது. உழைப்பதற்கு வழியின்றி வீடுகளிலே முடங்கிக் கிடைக்கும் இந்த மக்கள், அரசை எப்படியாவது விரட்ட வேண்டும் என வீதிகளிலே இறங்கி போராடி வருகின்றனர்.

அப்பாவி மக்களின் இந்த உணர்வுகளை புரிந்துகொள்ளாமல், காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தும் பொலிஸாரின் செயற்பாடுகள் உடனிறுத்தப்பட வேண்டும்.

முப்படைகளும் மக்களின் உணர்வுகளை மதித்து, தமது கடமைகள் மேற்கொள்ள வேண்டும்.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கும், காயமடைந்தவர்களுக்கும் எனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்" என்றார்.

# மக்களை கொன்று அரசியல் செய்யாதே – மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக கருப்பு பட்டி அணிந்து போராட்டம்




மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் வியாழக்கிழமை (21) காலை அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் 48 வது அமர்வு வியாழக்கிழமை காலை மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது சபையின் 25 உறுப்பினர்களில் 21 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது சபை உறுப்பினர்கள் சபையில் கருப்பு பட்டி அணிந்து அரசுக்கு எதிராக பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் சபை அமர்வில் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்து கொண்ட உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்திற்கு அமைவாக அரசுக்கு எதிராக மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் கருப்பு பட்டி அணிந்து பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரத்தவெறி பிடித்தவனே நாட்டை விட்டு வெளியேறு, மக்களை பட்டினிச்சாவில் தள்ளாதே, மக்களை கொன்று அரசியல் செய்யாதே, விவசாயத்தில் கை வைத்து நாட்டை அழிக்காதே, சொந்த மக்களை சுட்டுத் தள்ளாதே உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.



- மன்னார் நிருபர்



# இயற்கை முறையில் பயிரிடப்பட்ட பாரம்பரிய நெல் களஞ்சியப்படுத்தும் திட்டம் மன்னாரில் முன்னெடுப்பு

இயற்கை முறையில் நஞ்சற்ற விவசாய செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோவினால் கடந்த வருட இறுதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை மூலம் பெறப்பட்ட பாரம்பரிய நெல் வியாழக்கிழமை (21) வைபவ ரீதியாக மன்னார் முருங்கன் நெற்களஞ்சியத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக செய்கையின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விவசாயிகளுக்கு இலவசமாக மெசிடோ நிறுவனத்தால் பாரம்பரிய நெல் விதைகளான சீனட்டி, மொட்டக்கறுப்பன் போன்ற மரபணு மாற்றப்படாத விதைகள் மற்றும் நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டு இயற்கை முறையில் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட விவசாய செய்கையின் அறுவடை இவ்வாறு இடம் பெற்ற நிலையில் 10,000 கிலோ விதை நெல்கள் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப் பட்டு எதிர் வரும் போக செய்கைக்காக தயார் நிலையில் உள்ள விவசாயிகளுக்கு இயற்கை முறையில் செய்கைக்காக இலவசமாக வழங்குவதற்கு என களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் மெசிடொ நிறுவன பனிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ, மெசிடோ நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டு நெல் தூய்மைபடுத்தல் மற்றும் தொற்று நீக்குதல் ,களஞ்சியப்படுத்தல் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.



- மன்னார் நிருபர்



# ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி

உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) தாக்குதலின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வியாழக்கிழமை (21) மாலை 6 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது குறித்த தற்கொலை குண்டு தாக்குதலின் போது உயிர் நீத்த மக்களை நினைவுகூரும் வகையில் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது மத தலைவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய மை குறிப்பிடத்தக்கது.



- மன்னார் நிருபர்

# கனடாவில் நடைபெற்ற "குடடீஸ் ஆடலாமா" சீசன் – 4 நடனப்போட்டியில் சாய்கவின் ஸ்ரீதரன் முதற்பரிசைத் தட்டிக் கொண்டார்...

## கொரொனா காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த இந்த இறுதிப் போட்டி நிகழ்ச்சி.. மண்டபம் நிறைந்த ரசிகர்கள் ஆர்வத்துடன் கூடி மகிழ்ந்தனர். இவ்வாண்டு இடம்பெற்ற கண்கவர் நிகழ்வு எனப் புகழ்ந்த ரசிகர்கள் அமைப்பாளர் அர்யுன் அவர்களைப் பாராட்டினர்

கடந்த சனிக்கிழமை 16ம் திகதி கனடாவில் மார்க்கம் நகரில் அமைந்துள்ள “மார்க்கம் தியேட்டர்” என்னும் அற்புதமானதும் நவீன வசதிகள் கொண்டதுமான மண்டபத்தில் நடைபெற்ற “குடடீஸ் ஆடலாமா - சீசன் - 4 நடனப்போட்டியில் சாய்கவின் ஸ்ரீதரன் முதற்பரிசைத் தட்டிக் கொண்டார்...இவருக்கு உலகெங்கும் இருந்து பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. வெற்றியாளன் சாய்கவின் ஸ்ரீதரன் அவர்களுக்கு பாராட்டுக் கேடயங்கள் மற்றும் 2000 டாலர்களுக்கான கா-சோலை ஆகியன வெறறி மேடையில் வைத்து வழங்கப்பெற்றன.


கடந்தத இரண்டு வருடங்களாக கொரொனா காரணமாக











ஒத்திவைக்கப்பட்டிருந்த இந்த இறுதிப் போட்டி நிகழ்ச்சிக்கு மண்டபம் நிறைந்த ரசிகர்கள் ஆர்வத்துடன் கூடி மகிழ்ந்தனர். அவர்களில் வர்த்தகப் பெருமக்ககள் கலை ரசிகர்கள் என பலர் கூடி வந்து மண்டபத்தை நிறைத்திருந்தனர்.

“குடடீஸ் ஆடலாமா - சீசன் - 4” நடனப்போட்டி என்னும் இந்த அற்புதமான







நிகழ்வு இவ்வாண்டு இடம்பெற்ற கண்கவர் மேடை எனப் புகழ்ந்த ரசிகர்கள் அமைப்பாளர் அர்யுன் அவர்களையும் பாராட்டினர்.

மேற்படி நடனப் போட்டியில் இரண்டாவது பரிசை செல்வி நவீ-னாவும் மூன்றாவது பரிசை செல்வி சயானியும் தட்டிக்கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க மொன்றியால் ஒடடாவா மற்றும்வோட்டலூ ஆகிய நகரங்களிலிருந்தும் இளையவர்களும் அவர் தம் பெற்றோர்களும் வந்திருந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது. இங்கு காணப்படும் படங்கள் “குடடீஸ் ஆடலாமா - சீசன் - 4 நடனப்போட்டியில் எடுக்கப்பெற்றவையாகும்.

*- படங்களும் செய்தியும் சத்தியன் -*








## Canada Summer Job Program

Job Posting 1: Project Accountant    Job Posting 2: Computer Trainer

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors and others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active and healthy lifestyle by organizing weekly activities and health seminars.
The Project Accountant and Computer Trainer will report to the STSP Secretary.

**Project Accountant** will work on:

Ensuring the funds received for each project are spent to activities specified in the submitted proposals and within the approved amount.
Working with the STSP treasurer in maintaining all financial transactions and creating monthly financial report for all current projects.

**Computer Trainer** will work on:

Maintaining and updating the STSP web page periodically and helping seniors to solve basic computer issues.
Organizing and conducting hand-on basic computer training for seniors
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

**Required Qualification / Experience**

Project Accountant:

At least a Diploma in Accounting with a minimum of two years of work experience in a computerized accounting environment or three years of work experience in a computerized accounting field.
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

Computer Trainer

Basic computer skills with proficiency in Word, Excel and Power point.
Experience on designing, updating troubleshooting websites.
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages
Negotiable and according to the experience

**Salary & benefits:** Minimum wage according to the Government Summer Job Program
**Duration of engagement:** Three months    **Deadline for application**: April 25, 2022
Please forward your application with your updated resume by email to:
**info@peeltamilseniors.ca**

Nadarajah Moorthy    Cell: 416 473 5380
Secretary    nmoorthy10@gmail.com



# மக்கள் பிரதிநிதிகளா? தலைவர்களா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

புத்தாண்டு பிறந்த அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை கிளிநொச்சிக்கு போகும்பொழுது எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களும் திறந்திருந்தன. சிறிய மற்றும் பெரிய வரிசைகளில் நின்று எரிபொருளை நிரப்பக் கூடியதாக இருந்தது. ஆனால் மதியமளவில் ஒரு செய்தி வெளிவந்தது. மோட்டார் சைக்கிளுக்கு ஆயிரம் ரூபாய் வரையிலும் மோட்டார் கார்களுக்கு 1500 ரூபாய் வரையிலும் தான் பெட்ரோல் நிரப்பலாம் என்று அச்செய்தி தெரிவித்தது. அதன்பின் பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டேன். கிளிநொச்சியில் தொடங்கி யாழ்ப்பாணம் வரையிலும் பெரும்பாலும் எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களும் ஒன்றில் மூடப்பட்டிருந்தன. அல்லது பெட்ரோல் இல்லை என்ற அறிவிப்போடு காணப்பட்டன.

ஏன் அப்படி மூடினார்கள்? ஒரே நாளில் ஒரே நேரத்தில் எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எப்படி பெட்ரோல் தீர்ந்து போனது? சில நாட்களில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கலாம் என்பதை ஊகித்த முதலாளிகள் பெட்ரோலை பதுக்கினார்கள் என்ற பொதுமக்களின் குற்றச்சாட்டு சரியா?

எரிவாயு சிலிண்டர்கள் வினியோகம் தொடர்பாகவும் அவ்வாறு குற்றச்சாட்டுக்கள் உண்டு. ஒரு குறிப்பிட்ட தொகுதியினர் எரிவாயு சிலிண்டர்களை எப்படியோ பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் நாள் முழுக்க வரிசையில் நிற்பவர்களிற் பலர் அவ்வாறு அதிஷ்டசாலிகள் இல்லை. அதிலும் சிலர் எரிபொருளுக்காக காத்திருக்கும் பொழுது இறந்து போய்விட்டார்கள். வேறுசிலர் காத்திருந்த களைப்பில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துகளின் கீழ் உறங்கி விடுகிறார்கள். சாரதிகள் பேருந்துகளை இயக்கும் போது அவற்றுக்குக் கீழே உறங்குபவர்களைக் கவனிப்பதில்லை. அதனால் சிலர் பேருந்துகளில் நசியுண்டு இறந்து போகிறார்கள். இவ்வாறாக இதுவரையிலும் இலங்கைத்தீவில் எரிபொருள் எரிவாயு வரிசைகளில் நின்று இறந்தவர்களின் தொகை ஒன்பதுக்கும் அதிகமாக இருக்கலாம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் மட்டும் மக்களை மிதிக்கவில்லை. வர்த்தகர்களும் மக்களை மிதிக்கிறார்கள் என்று மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள். எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முன்னரே சித்ராப் பவுர்ணமியையொட்டி திருநெல்வேலி சந்தையில் மரக்கறிகள் அகோர விலைக்கு விற்கப்படுகின்றன. ஒரு கிலோ முருங்கைக்காய். 1,600 ரூபாய்க்கு மேல் போனது. ஒரு பிடி கீரை 160 ரூபாய் வரை போனது. ஒருவர் பகிடியாகச் சொன்னார்...ஆட்டு இறைச்சியும் 3000 ரூபாய் பாகற்காயும் 3000 ரூபாய் என்று. ஏன் இப்படி விலைகள் தாறுமாறாக இருக்கின்றன என்று கேட்டால் தம்புள்ளையில் இருந்து வாகனங்கள் வரவில்லை என்று கூறினார்கள். அப்படி என்றால் உள்ளூர் மரக்கறியின் விலையை தீர்மானிப்பது யார்?

முட்டையின் விலை இப்பொழுது இறங்கி வருகிறது. ஏன் என்று கேட்டேன். ஒரு கடைக்காரர் சொன்னார்...சாப்பாட்டுக் கடைகள் இயங்குவது குறைவு என்பதால் முட்டை நுகர்வு குறைந்து விட்டது, அதனால் தான் விலை இறங்கியது என்று. ஆனால் அவர் கூறிய அளவுக்கு சாப்பாட்டுக் கடைகள் மூடப்படவில்லை. முட்டை விலை இறங்கியது. ஆனால் கோழி இறைச்சியின் விலை இறங்கவில்லை. ஏன் என்று ஒரு இறைச்சிக் கடைக்காரரிடம் கேட்டேன். தெற்கிலிருந்து முட்டையைக் கொண்டு வருகிறார்கள், ஆனால் கோழியை கொண்டு வருவதில்லை என்று அவர் சொன்னார். இப்படி எத்தனையோ காரணங்களைக் கூறுகிறார்கள். காரணங்கள் சரியாகவும் இருக்கலாம் அல்லது புனையப்பட்டவைகளாகவும் இருக்கலாம். ஆனால் விலைகள் மட்டும் எந்த ஒரு தர்க்கத்துக்குள்ளும் அகப்படாமல் ஏறிக் கொண்டே போகி கின்றன. வியாபாரிகள் வைத்ததே விலை என்று வந்துவிட்டது. அதைக் கட்டுப்படுத்த யாருமில்லை.

பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிரான சிங்கள மக்களின் ஆர்ப்பாட்டங்களின் விளைவாக அரசியல் நெருக்கடியும் யாப்பு நெருக்கடியும் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் நாடு அரசற்ற ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. இந்த அரசற்ற நிலை காரணமாக விலைகளை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அருகருகே வாழும் அயலவர்கள் எரிவாயு வாங்கப் போகும்போது ஒருவர் மற்றவருக்கு சொல்லாமல் ரகசியமாக போகிறார்கள். ஏனென்றால் அப்படிச் சொன்னால் அரிதாக கிடைக்கும் அப்பொருளை நுகர்வதற்கு மற்றவரும் போட்டிக்கு வந்து விடுவார் என்பதே காரணம். ஒரு சமூகத்தின் கூட்டுணர்வையே சிதைக்கும் அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றனவா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை 6 கட்சிகள் யாழ் இளங்கலைஞர் மன்றத்தில் கூடிய பொழுது அதில் நான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். அதற்கு முன்னரும் எனது எழுத்திலும் பேச்சிலும் இதுபற்றி அதிகமாக குறிப்பிட்டிருக்கிறேன். தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசம் என்று நம்புகிறார்கள். ஆனால் அவர்கள் தேசமாகத் திரட்சியாக இல்லை என்பதைத்தான் வியாபாரிகளின் நடவடிக்கைகள் உணர்த்துகின்றனவா? அரசாங்கம் ஒருபக்கம் மக்களை வதைக்கிறது என்றால் இன்னொரு பக்கம் வர்த்தகர்களும் வதைக்க்கிறார்களா? இந்த விடயத்தில் வர்த்தகர்களை தட்டிக் கேட்பது யார்? அரசியல் கட்சிகளுக்கு இதில் பொறுப்பு கிடையாதா? மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள்,கட்சித் தலைவர்களாக இருப்பவர்கள்,இந்த விடயத்தில் வர்த்தகர்களோடு கதைத்து பொதுமக்களின் கஷ்டத்தை ஒப்பீட்டளவில் குறைக்க முடியாதா? நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவது என்பது அதுதானே?

அறிக்கை விட்டால் மட்டும் போதாது, நாடாளுமன்றத்தில் கூர்மையான உரைகளை நிகழ்த்தினால் மட்டும் போதாது, அதற்கும் அப்பால் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்பது நடைமுறையில் மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்பதே. எனவே தேசத் திரட்சியின் ஒரு கூறாக அமையும் வணிகர்களோடு இது தொடர்பில் ஏன் எந்த ஒரு அரசியல்வாதியும் உரையாடத் துணிய வில்லை? என்று அக்கூட்டத்தில் நான் கேள்வி எழுப்பினேன்.

மக்கள் பிரதிநிதிகளாக இருப்பது என்பது மக்களுக்கு தலைமை தாங்குவதுதான். மக்களுக்கு தலைமை தாங்குவது என்பது நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது. மக்களை அடுத்தகட்டத்துக்கு தயார்படுத்துவது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மக்களைத் தூண்டுவது. அதற்கு வேண்டிய கட்டமைப்புக்களை உருவாக்குவது. அதாவது மக்களை அமைப்பாக்குவது. திரள் ஆக்குவது.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பெரும்பாலான அரசியல்வாதிகள் இப்பொழுது மட்டுமல்ல இதற்கு முன்னரும் பெரும் தொற்று நோய் சூழலுக்குள் அவ்வாறு மக்களுக்கு தலைமை தாங்கவில்லை. இது தொடர்பில் நான் கட்டுரைகளை எழுதினேன். விக்னேஸ்வரன் ஒரு கேள்வி பதில் அறிக்கையில் அது தொடர்பான சில அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். அதற்குமப்பால் மக்களை அமைப்பாகும் செயற்றிட்டம் எதுவும் அவரிடம் இருக்கவில்லை.


இப்பொழுது பொருளாதார நெருக்கடி வந்திருக்கிறது. அரசாங்கத்தின் உரக் கொள்கை காரணமாக விவசாயம் பெரிய அளவில் வீழ்ச்சி அடைந்து விட்டது. இதனால் இன்னும் இரண்டு மாதங்களில் அரிசிக்கு தட்டுப்பாடு வரலாம் என்று எச்சரிக்கப்படுகிறது. அதனால்தான் அரசாங்கம் அரிசியை இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் இறக்க முயற்சிக்கிறது. அரசாங்கம் அதைச் செய்யட்டும். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் தமிழ் மக்கள் எப்படிப்பட்ட முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து ஏன் வழிகாட்டக் கூடாது? நெருக்கடியான காலகட்டங்களில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வழி காட்டுவதுதான் தலைமைத்துவம். அப்படிப்பட்ட தலைவர்கள் எத்தனை பேர் தமிழ் தேசிய அரங்கில் இப்பொழுது உண்டு?

அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல அவர்களுக்கு வெளியே இதுபோன்ற நெருக்கடியான தருணங்களில் மக்களுக்கு வழிகாட்டவல்ல சிவில் சமூகத் தலைமைகள் எத்தனை உண்டு? ஆன்மீக தலைமைகள் எத்தனை உண்டு?

இதுதொடர்பாக யாழ் வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவரிடம் உரையாடினேன். அவர் சொன்னார்....இப்போது நிலவும் விலை உயர்வை எந்த அரசியல்வாதியாலும் தீர்க்க முடியாது என்று. நாட்டின் பொருளாதார நிலைமை அந்தளவுக்கு மோசமான ஒரு கட்டத்தை அடைந்து விட்டது என்றும் அவர் கூறினார். இறக்குமதி செய்வதற்கு வணிகர்கள் பயப்படுகிறார்கள். யாராவது முன்வந்து இறக்குமதி செய்வார்களாக இருந்தால் அவர்களுடைய காலில் பூ போட்டுக் கும்பிடலாம் எனுமளவுக்கு நிலைமை காணப்படுகிறது. ஒரு தொகுதி பெரு வணிகர்கள் இறக்குமதி நடவடிக்கைகளை நிறுத்திவிட்டார்கள். இறக்குமதி குறைந்தால் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும். மேலும் பெரும்பாலான வணிகர்கள் ஆறுமாதக் கடனில்தான் பொருட்களை இறக்குவதுண்டு. அப்பொருளை விற்று கடனை அடைக்கும் காலகட்டத்தில் டொலரின் விலை எங்கேயோ போயிருக்கும். அதாவது பொருளை இறக்கும் போது இருந்ததை விட பலமடங்கு அதிகரித்திருக்கும். இதனால் வரக்கூடிய மேலதிக நட்டத்தையும் கவனத்தில் எடுத்தே வணிகர்கள் பொருட்களின் விலைகளைத் தீர்மானிக்கிறார்கள். எனவே இது விடயத்தில் டொலரின் பெறுமதியைக் கட்டுப்படுத்தும் சக்தியுள்ள அரசியல்வாதிகள்தான் விலைகளையும் கட்டுப்படுத்தலாம். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அப்படிப்பட்ட சக்தி இல்லை என்பதால் அவர்களில் யாராலும் விலை உயர்வை கட்டுப்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்தார்.

மேலும் எரிவாயு விநியோகத்தில் எரிவாயு கம்பெனிகளின் தலையீடு காரணமாக சில சீரற்ற விநியோகங்கள் இடம் பெற்றிருப்பதை அவர் ஒப்புக்கொண்டார். எரிவாயுவை அந்தந்தப் பகுதியில் உள்ள விநியோகஸ்தர் ஊடாக வழங்கினாலே போதும் அவர்கள் தங்கள் வாடிக்கையாளர்களை ஏதோ ஒரு விதத்தில் திருப்திப் படுத்துவார்கள். ஆனால் கிராம மட்ட விநியோகஸ்தர்களிடம் பகிர்ந்தளிப்பதற்கு பதிலாக வேறு சில நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டதால் அதிக முறைப்பாடுகள் வந்தன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும், எரிவாயுவும் உட்பட பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் சக்தி வர்த்தக சங்கங்களிடமும் இல்லை, எந்த ஒரு சமூக முகாமைத்துவத்திடமும் இல்லை என்று அவர் முடிவாகச் சொன்னார்.

அப்படியென்றால், பொருட்களின் விலைகளும் இறக்கப் போவதில்லை. ராஜபக்சக்களும் சிம்மாசனத்தை விட்டு இறங்கப் போவதில்லை. ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பும்வரை காலிமுகத்திடலில் கூடியிருக்கும் மக்களும் வீட்டுக்குப் போகப் போவதில்லை?



# "உலகின் பல நாடுகளிலும் வாழும் எழுத்தாளர்களின் பரிசு பெற்ற சிறுகதைகளை தொகுத்து சாதனை புரிந்துள்ள கனடா எழுத்தாளர் இணையம் பாராட்டுக்குரிய ஒரு அமைப்பாகும்"

## கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் நூல் வெளியீட்ட விழாவில் "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் புகழாரம்





"கனடாவில் கடந்த 29 வருடங்களாக இயங்கிவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் உலகெங்கும் இயங்கும் இலக்கிய அமைப்புக்களின் மத்தியில் தனித்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இந்த வெற்றிகரமான அமைப்பு உலகின் பல நாடுகளிலும் வாழும் எழுத்தாளர்களின் பரிசு பெற்ற சிறுகதைகளை தொகுத்து சாதனை புரிந்துள்ளது. இதற்காக கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் பாராட்டுக்குரிய ஒரு இலக்கிய அமைப்பு என்ற வகையில் கனடா வாழ் தமிழ் மக்கள் அமைப்புக்கள் அதனைப் பாராட்ட வெண்டும்".

இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை 17ம் திகதி கனடாவில் இயங்கிவரும் "பை-ரவி நுண்கலைக் கல்லூரி கலையரங்சில் நடைபெற்ற கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் நூல் வெளியீட்ட விழாவில்" உரையாற்றிய சீந்தனைப் பூக்கள் பத்மநாதன் புகழாரம் சூட்டினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தை 29 வருடங்களுக்கு முன்னர் நிறுவிய மொன்றியால் வாழ் எழுத்தாளர் "வீணைமைந்தன்" அவர்கள் உட்பட பலர் பாராட்டுக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் விதைத்த விதை இன்று ஒரு விருட்சமாக வளர்ந்துள்ளது. எனவே தற்போது எழுத்துலகில் கால் பதித்தவர்கள் இந்த அமைப்போது இணைந்து பணியாற்ற வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றேன்" என்றார்.

எழுத்தாளர் இணையத்தின் தலைவர் குரு அரவிந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வவேற்புரையை இணையத்தின் செயலாளர் ஆர். என். லோகேந்திரலிங்கம் நிகழ்த்தினார்.

இன்றைய தினம் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சிறப்புக் கௌரவத்தைப் பெற்ற திருவாளர்கள் கவிஞர் அகணி சுரேஸ், சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன் மற்றும் தமிழ் நாட்டிலிருந்து தற்பொழுது கனடாவிற்கு வருகை தந்துள்ள இலக்கியவாதி திருமதி அண்ணாமலை தமிழரசி ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் ஒன்றாரியோ மாகாண சபையின் ஸ்காபுறோ தென்-மேற்கு தொகுதியின் உறுப்பினர் - என்டிபி கட்சியின் பிரதான பேச்சாளர் (MPP Doly Begum) திருமதி டொலி பேகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார்.

விழாவில் மொன்றியால் மாநகரிலிருந்து வருகை தந்த "வீணைமைந்தன்" மற்றும் கவிஞர் கணபதி ரவீந்திரன் தமிழ் நாட்டிலிருந்து தற்பொழுது கனடாவிற்கு வருகை தந்துள்ள இலக்கியவாதி திருமதி அண்ணாமலை தமிழரசி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார். சிறுகதைத் தொகுதியின் முதற் பிரதியை கனடா கவிஞர் கழகத்தின் தலைவர் அவர்கள் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் குரு அரவிந்தன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பல அன்பர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் பிரதிகளைப் பெற்றனர்.

எழுத்தாளர் இணையத்தின் நிர்வாக சபை உறுப்பினர் அருட்கவி ஞானகணேசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.







2022 நகராட்சி தேர்தல்கள்

# தேர்தலில் நிற்பது பற்றி யோசிக்கிறீர்களா?

2022 ஆம் ஆண்டிற்கான நகராட்சி மற்றும் பள்ளி வாரிய தேர்தல்களில் போட்டியிட மே 2, 2022 முதல் ஆகஸ்ட் 19, 2022 பிற்பகல் 2 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

**தேர்ந்தெடுக்கபடவுள்ள பதவிகள்:**
மேயர், வார்டு கவுன்சிலர்/பிராந்திய கவுன்சிலர் மற்றும் பள்ளி வாரிய அறங்காவலர்கள்

**வேட்பு மனு தாக்கல் செய்யத் தேவையான மேலும் தகவல்களை அறிய வருகை தரவும்: mississaugavotes.ca**

உங்களுக்கு கேள்விகள் ஏதும் இருப்பின் நீங்கள் 905-615-VOTE க்கு அழைக்கலாம் அல்லது election.office@mississauga.ca க்கு மின்னஞ்சல் செய்யலாம்

vote mississaugavotes.ca

MISSISSAUGA



# Dr. புஸ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்


**New Patients Welcome**

Open 7 Days a week

Sunday by Appointment only

## Dr. Pushpa.V & Associates
**Dentist**

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)

**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)

**905-201-8900**



HELPING HANDS SENIOR CARE VILLA KARUNA

20 ஆவது ஆண்டு

# விலா கருணா முதியோர் இல்லம்

சந்தியாராகம் Santhiyaragam

# சந்தியாராகம் - 2022

ஏப்பிரல் 30, 2022 திகதிக்கு
முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
இம்முறை கனடாவிலும் You Tube ஊடாக உலகமெங்கும்
உள்ள அத்தனை தமிழ் மக்களும் பார்த்து ரசிக்கவுள்ள
அரிய வாய்ப்புடன் சாதனை படைக்க வருகிறது.



**Golden SUPER SINGER**

விண்ணப்பக் கட்டணம்: $35
விண்ணப்ப திகதி முடிவு: 30-04-2022

**Indrani 416-200-6971**
**Inthu/Para 416-282-4535**
**Kiruba 416-564-4366**

பங்கு பெறுவோர் எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால்
உடனடியாக உங்கள் பெயர்களை
பதிவு செய்யுங்கள்.

# இராசபக்ச குடும்பத்தில் விரிசலா?

- கனடா நக்கீரன்

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது பழமொழி. தனக்கு வேண்டும் பொருளை வென்று கொண்டபின், அதனை விடாது பற்றி நிற்பதில் முதலையும் மூர்க்கனும் ஒன்று என்பது இதன் பொருள்.

சனாதிபதி கோட்டாபய இராசபக்ச தனது பதவியைத் துறக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்துள்ளார். எனக்கு மக்கள் 5 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க ஆணை தந்திருக்கிறாகள் அந்தக் காலக்கெடு முடியு முன்னர் பதவியைத் துறக்க மாட்டேன் என அடம்பிடிக்கிறார். குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் பதவி துறக்குமாறு கேட்டால் தான் பதவி துறக்க அணியமாக இருப்பதாக நிபந்தனை வைக்கிறார். ஆனால் காலிமுகத் திடலில் கடந்த 10 நாட்களாக இரவு பகல் என்று பாராது போராடி வரும் இளைஞர்கள் விடுவதாக இல்லை. 1+225 ம் வீட்டுக்குப் போக வேண்டும் என்கிறார்கள்.



"கோட்டா வீட்டுக்குப் போ, கோட்டா ஒரு பயித்தியம், கோட்டா ஒரு திருடன், கொள்ளையடித்த எங்கள் பணத்தை திருப்பித் தா" என உரத்துக் குரல் கொடுத்த வண்ணம் காலிமுகத் திடலில் முகாமிட்டுள்ளார்கள்.

வி.புலிகளைப் புறம் கண்டு நாட்டைப் பயங்கரவாத்தின் பிடியிலிருந்து காப்பாற்றியவர், முப்பது ஆண்டு காலக் கொடிய போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்று புகழப்பட்ட கோட்டாபய இன்று பயித்தியக்காரன், திருடன் எனத் தூற்றப்படுகிறார். நொவெம்பர் 2019 இல் நடந்த சனாதிபதி தேர்தலில் 69 இலட்சம் (52.25%) சிங்கள - பவுத்த மக்கள் அவருக்கு எதிராக மட்டுமல்ல முழு இராசபக்ச குடும்பத்துக்கும் எதிராக அதே சிங்கள - பவுத்த மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள்.

கோட்டாபய தேர்தலில் போட்டியிட்ட நேரத்தில் அவர் மீது கொலை உட்பட எண்பிக்கப்படாத பல குற்றச்சாட்டுக்கள் இருந்தன. வெள்ளைவான் கடத்தலுக்குப் பின்னால் இருந்த சூத்திரதாரி கோட்டபாய என்ற எண்ணம் இருக்கிறது. குறிப்பாக சன்டே லீடர் பிரதம ஆசிரியர் லசந்தா விக்கிரமதுங்க, விளையாட்டு வீரர் வாசிம் தாயுதீன், ஊடகவியலாளர் எக்னேலிகொட போன்றவர்கள் கொலை செய்யப்பட்டதற்குப் பின்னல் அவர் இருந்தார் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

போர் முடிவுக்கு வந்த மே 18 அன்று சரண் அடைந்த நூற்றுக்கும் அதிகமான வி.புலிகள் சத்தம் சந்தடி இல்லாமல் கொல்லப்பட்டார்கள். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் தலைமையில் வெள்ளைக் கொடியோடு சரணடைந்த நூற்றுக் கணக்கான வி.புலிகள் சித்திரவதைக்குப் பின்னர் கொல்லப்பட்டதற்கு கோட்டாபய பிறப்பித்த உத்தரவு காரணம் என தமிழர் தரப்பு நம்புகிறது.

பா.நடேசன் மற்றும் அவரோடு சரணடைந்த வி.புலிகள் கொல்லப்பட்ட பின்னர் இராணுவம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் கடைசிப் பயங்கரவாதிகளோடு நடந்த சண்டையில் அவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது!

போரோடு எந்தவித தொடர்பும் இல்லாத தலைவர் பிரபாரனது 12 அகவை பாலச்சந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டது கோட்டாபய அவர்களது உத்தரவின் பேரில்தான் எனவும் தமிழர் தரப்பு நம்புகிறது.

கோட்டாபய இராசபக்ச மீது ஊழல் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டு வருகிறது. அவரது தந்தையார் டி.ஏ. இராசபக்சவுக்கு ஒரு நினைவாலயம் அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போது அரச வளங்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. அதற்கான மதிப்பீடு ரூபா 33.9 மில்லியன். ஆனால் கட்டிடத்தில் செய்த பாரிய மாற்றங்கள் காரணமாக அதைக் கட்டி முடிக்க ரூபா 81.2 செலவிடப்பட்டது. ஆனால் மிகுதி ரூபா 47.9 இன்றுவரை கட்டப்படவில்லை.

இப்படியான இலட்சணங்களைக் கொண்ட ஒருவருக்கு எப்படி 59 இலட்சம் மக்கள் வாக்களித்தார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. அதைவிட வியப்பு சிங்கள அறிவுப்பழைப்பார்களும் அவருக்கு ஆதரவாக தேர்தல் களத்தில் இறங்கி வேலை செய்தது. தன். விமானத்தில் பறந்து வந்து கோட்டாபயவுக்கு வாக்களித்தவர்களும் இருக்கிறார்கள்.

இன்றைய பாரிய நிதி நெருக்கடி ஏற்படாமல் இருந்திருந்தால் கோட்டாபய மற்றும் மகிந்த இராசபக்சாக்களது குடும்ப இராச்சியம் தொடர்ந்து இருந்திருக்கும். நாட்டில் ஏற்பட்ட டீசல், எரிபொருள், சமையல் எரிவாய்வு, பால் மா, மருந்து, மின்சார வெட்டு போன்றவை வழக்கம்போல் கிடைத்திருந்தால் மக்கள் பேசாமல் இருந்திருப்பார்கள்.

வெளிநாட்டு நாணய இருப்புக் குறைந்த காரணமாகவே நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் மக்கள் வீதியில் இறங்கி போராடிவருகிறார்கள். காய்ந்த வயிறில் இருந்துதான் புரட்சிகள் வெடிக்கின்றன என்பது இன்று எண்பிக்கப்பட்டுள்ளது.

இன்று இலங்கையின் வெளிநாட்டு நாணய கையிருப்பு சுமார் அ.டொலர் 2 மில்லியன் ஆக உள்ளது, அதேவேளை 2022 ஆம் ஆண்டில் மொத்தம் அ.டொலர் சுமார் 4 பில்லியன் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது. 2023 மற்றும் 2028 இல் முதிர்ச்சியடையும் இரண்டு பத்திரங்களில் 30 நாள் சலுகைக் காலம் இருந்தாலும், அ.மெடாலர் கூ78 மில்லியன் கூப்பன் செலுத்த வேண்டும். இதில், 1 பில்லியன் டொலர் மதிப்புள்ள பத்திரங்கள் யூலை 2022 இல் முதிர்ச்சியடைகின்றன.

2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் செங்குத்தான உயர்வைக் கண்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் அ.டொலர் 11.3 பில்லியன் ஆக இருந்த வெளிநாட்டு நாணய கையிருப்பு 2010 ஆம் ஆண்டில் அ.டொலர் 21.7 பில்லியன், 2015 ஆம் ஆண்டில் அ.டொ 43.9 பில்லியன் ஆகவும், 2020 ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுநோய்களின் போது அ.டொலர் 56.3 பில்லியன் ஆகவும் உயர்ந்துள்ளது. ஏப்ரில் 2021 நிலவரப்படி, சீனா 10 விழுக்காடு கடன்களைக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் இந்தியா 2 விழுக்காடு கடன் மட்டும் கொடுத்திருக்கிறது.

இலங்கை ரூபாவின் பெறுமதி 31.6%, யூரோவிற்கு எதிராக 31.5%, ஸ்ரேலிங் பவுண்ட் 31.1 %, யப்பானிய யென் 28.7 %, சனவரி 1 முதல் மார்ச் 31 வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இன்று ஒரு அ.டொலரின் பெறுமதி ரூபா 334.6 ஆக இருக்கிறது. ஆனால் வெளிச்சந்தையில் அதன் பெறுமதி 370 ஆக இருக்கிறது. அதே போல ஒரு கனேடியன் டொலரின் பெறுமதி ரூபா 255 ஆகவும் அதன் சந்தைவிலை ரூபா 290 ஆக உயர்ந்துள்ளது.

அரசு செலவினங்களை ஈடுசெய்ய நாணயத்தை திரில்லியன் கணக்கில் அடித்து அரச ஊழியர்களின் சம்பளத்தைக் அரசாங்கம் கொடுக்கிறது. இதனால் பணவீக்கம் (17%) ஏற்பட்டு பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. பெட்ரல் விலை (ஒக்ரோன் 92) ரூபா 338 ஆகவும் ஒக்ரோன் ரூபா 373 ஆகவும் டீசல் ரூபா 289 ஆகவும், ஸுப்பர் டீசல் ரூபா 329 ஆகவும் விற்பனை ஆகிறது. ஒரு இறாத்தல் பாண் விலை ரூபா 140 ஆக உயர்ந்துள்ளது. போக்குவரத்து வண்டிகளின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் அரசாங்கம் மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாகவும் சனாதிபதி கோட்டாபய அவர்கள் பதவி விலக வேண்டும் என்று கோரி நாடு முழுதும் நடக்கும் பரவலான போராட்டங்கள் காரணமாகவும் அரசாங்கம் தனது அ.டொலர் 51 பில்லியன் வெளிநாட்டுக் கடன்கள் உட்பட அனைத்து வெளிநாட்டுக் கடன்களையும் ஒத்திப் போடுவதாக 12 ஏப்ரில் மாதத்தில் தெரிவித்துள்ளது.

இதே நேரம் பன்னாட்டு நிதி நிறுவனத்திடம் எந்தக் கட்டத்திலும் போக மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்த அரசாங்கம் அதே நிறுவனத்திடம் அ.டொலர் 4 பில்லியன் கடன் கேட்டு ஒரு தூதுக் குழுவை கடந்த 18 ஏப்ரில் அன்று அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளது. "இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள், குறிப்பாக ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் அனுபவிக்கும் கட்ங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியம் மிகவும் அக்கறை கொண்டுள்ளது" என்று அதன் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஆனால், பன்னாட்டு நிதி நிறுவன அதிகாரிகள் கடந்த மாதம் இலங்கையின் பொதுக் கடன் தாங்கமுடியாது ஒன்று என ஆண்டு பொருளாதார மதிப்பாய்வில் தீர்மானித்துள்ளதாகவும், அவசரகால விரைவான நிதியளிப்பு கருவி **(RFI)** உட்பட எந்தவொரு கடனை வழங்குவதற்கு முன்னர் இலங்கை சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். கடன் வாங்கும் நாடு வருமான வரியை அதிகரிக்க வேண்டும் செலவைக் குறைக்க வேண்டும் என்பது வழக்கமான நிபந்தனைகள் ஆகும்.

பொருளாதார நெருக்கடி ஒருபுறம் இருக்க அரசியல் நெருக்கடியைக் குறைக்க பிரதமர் மகிந்த இராசபக்ச அரசியல் திருத்தம் 20 யை கைவிட்டு அரசியல் திருத்தம் 19 இல் உள்ள சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்குமாறு கேட்கும் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்மொழிய இருக்கிறார்.

ஆனால் இந்த முயற்சி சனாதிபதி கோட்டாபய இராசபக்சவிற்கும் பிரதமர் மகிந்த இராசபக்சாவிற்கும் இடையில் ஒரு இழுபறி நிலையைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரிகிறது. அண்மைய அமைச்சரவை நியமனங்கள் மற்றும் அரச அமைச்சு நியமனங்கள் அனைத்தும் சனாதிபதி தனது விருப்பப்படி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதாகவும், பிரதமருடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. பதவிப் பிரமாண நிகழ்வுகளில் பிரதமர் கலந்து கொள்ளவில்லை என்பதை சிலர் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சில மூத்த அமைச்சர்களை, அமைச்சரவையில் சேர்க்குமாறு பிரதமர் அழைப்பு விடுத்தார், ஆனால் சனாதிபதி இராசபக்ச இளைய மற்றும் புதிய அமைச்சரவையை வலியுறுத்தினார், இது எதிர்ப்பாளர்களை அமைதிப்படுத்தி நாட்டை மீண்டும் பாதையில் கொண்டு வரும் என்று நம்பினார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த வாரம் 19வது திருத்தத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்கும் என டெய்லி மிரர் அறியும் அதே வேளையில், 'ரத்துகளில் சில திருத்தங்களுடன் 19 ஆவது திருத்தத்தை விரைவில் பாராளுமன்றத்தில் பிரதமர் சமர்ப்பிக்க உள்ளார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, 19 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார். நெருக்கடிக்கு உடனடித் தீர்வு என்ன என்பது தொடர்பில் சர்வகட்சித் தலைவர்களுடன் இரண்டு நாள் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு முன்மொழிந்துள்ளார்.

வியாழனும் வெள்ளியும் கட்சித் தலைவர்கள் கூடி முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும், கோட்டாபய இராசபக்ச சனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டும் என்பதும் அந்த முன்மொழிவுகளில் ஒன்றாக இருக்கும் என டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒருமித்த கருத்து எட்டப்பட்டால், வெள்ளிக்கிழமைக்குள் முடிவு சபாநாயகரிடம் தெரிவிக்கப்பட்டு, பின்னர் அவர் சனாதிபதிக்கு தெரிவிப்பார். எனினும் சனாதிபதி பதவி விலகுவாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இதற்கிடையில் தன்னோடு பேச வருமாறு பிரதமர் இராசபக்ச விடுத்த வேண்டுகோளை ஆர்ப்பாட்டக்காரர்கள் நிராகரித்துள்ளார்கள். அவர்களைப் பொறுத்தளவில் 1+225 நா.உறுப்பினர்களும் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளார்கள். தன்னோடு பேச வருமாறு பிரதமர் இராசபக்ச விடுத்த வேண்டுகோளை ஆர்ப்பாட்டக்காரர்கள் நிராகரித்துள்ளார்கள்.

காட்சிகள் அசுர வேகத்தில் மாறிக் கொண்டிருக்கின்றன. நாளை என்ன நடக்கும் என்பதை யாராலும் எதிவுகூற முடியாது இருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் கூறலாம். இதுவரை காலமும் நகமும் தசையும் போல, இரத்தமும் தசையுமாக இருந்த இராசபச்ச குடும்பத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுகிறது.

# கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு சசிகலாவிடம் ஐந்தரை மணி நேரம் தனிப்படை போலீஸார் விசாரணை



கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக சசிகலாவிடம் தனிப்படை போலீஸார் அடுக்கடுக்கான கேள்விகளை கேட்டு ஐந்தரை மணி நேரம் விசாரணை நடத்தினர். இன்றும் விசாரணை தொடர்கிறது.தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா 2016ல் காலமானார். அவருக்கு சொந்தமான கோடநாடு எஸ்டேட்டில் 2017 ஏப்ரல் 24ம் தேதி மர்ம நபர்கள் புகுந்து அங்கிருந்த விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் ஆவணங்களை கொள்ளையடித்தனர்.

இதை தடுக்க முயன்ற காவலாளி ஓம்பகதூர் கொலை செய்யப்பட்டார்.இது தொடர்பாக போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டனர். ஜெயலலிதாவின் கார் ஓட்டுநர் கனகராஜிடம் விசாரணை நடத்தவிருந்த நிலையில், அவர் சாலை விபத்தில் மரணமடைந்தார். இது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியது.கோடநாடு வழக்கில் தொடர்புடைய சயான் என்பவரும் குடும்பத்துடன் சாலை விபத்தில் சிக்கினார். இதில் அவரது மனைவி, மகள் உயிரிழந்தனர். தொடர்ந்து கோடநாடு பங்களாவில் கணிணி ஆபரேட்டராக இருந்த தினேஷ்குமாரும் தற்கொலை செய்து கொண்டார்.

அடுத்தடுத்து நடந்த விபத்து, கொலை, தற்கொலை சம்பவங்களால் கோடநாடு வழக்கில் பரபரப்பு ஏற்பட்டது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு கோடநாடு வழக்கு மீண்டும் தீவிரமடைந்தது. மேற்கு மண்டல ஐஜி ஆர்.சுதாகர், கோவை சரக டிஐஜி முத்துசாமி ஆகியோரது நேரடி மேற்பார்வையில் நீலகிரி மாவட்ட போலீஸார் அடங்கிய தனிப்படைகள் ஏற்படுத்தப்பட்டன. கனகராஜின் சகோதரர் தனபால், அவரது உறவினர் ரமேஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கோடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜன், சசிகலாவின் உறவினரும், தனியார் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர்களில் ஒருவருமான விவேக் ஜெயராமன், அதிமுக முன்னாள் எம்எல்ஏ ஆறுக்குட்டி, அவரது மகன், உறவினர் மகன், நேர்முக உதவியாளர் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதுவரை 200க்கும் மேற்பட்டவர்களிடம் நேரடியாகவும், மறைமுகமாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.இதைத் தொடர்ந்து சசிகலாவிடம் விசாரணை நடத்த தனிப்படை போலீஸார் முடிவு செய்தனர்.

அதன்படி, ஐஜி சுதாகர் தலைமையில் நீலகிரி எஸ்.பி ஆசிஸ்ராவத், ஏடிஎஸ்பி கிருஷ்ணமூர்த்தி, டிஎஸ்பி சந்திரசேகரன், பெண் காவல் ஆய்வாளர் ஒருவர் என 8 பேர் கொண்ட தனிப்படை போலீஸார் நேற்று காலை 10.55 மணிக்கு சென்னை தி.நகரில் உள்ள சசிகலா வீட்டுக்கு சென்று விசாரணை நடத்தினர். அப்போது, சசிகலாவின் வழக்கறிஞர் செந்தூர் பாண்டியன் உடனிருந்தார்.நீங்கள் சிறையில் இருந்த நேரத்தில் கோடநாடு எஸ்டேட்டில் கொலை, கொள்ளை சம்பவம் நடந்தது. அதுபற்றி எப்போது உங்களுக்கு தெரியவந்தது? கொலை செய்யப்பட்ட காவலாளி ஓம்பகதூர், தற்கொலை செய்துகொண்ட கணினி ஆபரேட்டர் தினேஷ்குமார் ஆகியோரை உங்களுக்கு தெரியுமா? இந்த கொலை தொடர்பாக உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா? இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகளை நீங்கள் பார்த்தது உண்டா? என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர்.

கோடநாடு எஸ்டேட் வாங்கியது எப்படி, அங்கு எத்தனை பேர் வேலை பார்க்கின்றனர், எந்தெந்த பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் வைக்கப்பட்டுள்ளது என்பன போன்ற கேள்விகளையும் கேட்டுள்ளனர். மேலும், கோடநாடு எஸ்டேட்டில் காணாமல் போனதாக கூறப்படும் பத்திரங்கள், ஆவணங்கள், ஆபரணங்கள் குறித்தும் கோடநாடு எஸ்டேட்டில் கொள்ளைபோன சில ஆவணங்கள் சென்னை தி.நகரில் உள்ள ஓட்டல் ஒன்றில் சிக்கியது எப்படி என்றும் கேட்டுள்ளனர்.

முக்கியமான சில கேள்விகளுக்கு சசிகலா பதில் அளித்துள்ளார். அவர் அளித்த பதில்கள் வீடியோவிலும் எழுத்து மூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.காலை 10.55 மணிக்கு தொடங்கிய விசாரணை மாலை 5.20 மணிவரை நீடித்தது. மதிய உணவு இடைவேளை தவிர்த்து சுமார் ஐந்தரை மணி நேரம் விசாரணை நடந்தது. சசிகலாவிடம் தொடர்ந்து 2வது நாளாக இன்றும் விசாரணை நடத்த உள்ளனர்.செய்தியாளர்களிடம் சசிகலா கூறும்போது, ''நாளையும் (இன்று) விசாரணை நடக்க உள்ளதால் விசாரணை முடிந்த பிறகு அதுகுறித்து பேசுகிறேன்'' என்றார். விசாரணையின்போது சசிகலா வீட்டு முன்பு அவரது ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர். இதனால், அப்பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் 2 நாள் பயணமாக இந்தியா வருகை தொழிலதிபர் கவுதம் அதானியுடன் சந்திப்பு

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் 2 நாள் பயணமாக நேற்று குஜராத் வந்தடைந்தார். அங்குள்ள மகாத்மா காந்தியின் சபர்மதி ஆசிரமத்தை அவர் பார்வையிட்டார். இன்று டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்துக்கு நேற்று வந்தார். 2 நாள் பயணமாக அகமதாபாத் விமான நிலையம் வந்த அவரை மாநில ஆளுநர் ஆச்சார்ய தேவ்விரத், முதல்வர் பூபேந்திர படேல் மற்றும் உயர் அதிகாரிகள் விமான நிலையத்துக்கே சென்று வரவேற்றனர்.

மேலும் விமான நிலையத்திலிருந்து அவர் தங்கியுள்ள ஓட்டல் வரையிலான 4 கி.மீ. தூரத்துக்கு மேள, தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரிட்டன் பிரதமர் ஒருவர் குஜராத் வந்தது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.பின்னர் மகாத்மா காந்தியின் சபர்மதி ஆசிரமத்துக்கு சென்ற அவர், அங்கு சுமார் 30 நிமிடங்கள் இருந்தார். அப்போது, காந்தி பயன்படுத்திய ராட்டையை சுற்றிப் பார்த்தார்.முன்னணி தொழிலதிபர்கள் பலரை சந்தித்து, இரு நாடுகளுக்கிடையிலான தொழில், வர்த்தக



தொடர்புகள் பற்றி ஆலோசனை நடத்த பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் திட்டமிட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக, அதானி குழுமத்தின் தலைவர் கவுதம் அதானியை போரிஸ் ஜான்சன் நேற்று சந்தித்துப் பேசினார்.அதானி அளித்த விருந்துஇதுகுறித்து கவுதம் அதானி தனது ட்விட்டர் பக்கத்தில், ''குஜராத் மாநிலத்துக்கு முதல் முறையாக வந்துள்ள பிரிட்டன் பிரதமருக்கு எங்கள் தலைமை அலுவலகத்தில் விருந்து அளித்து கவுரவித்தோம். புதுப்பிக்கத்தக்க, பசுமை எச்2 மற்றும் புதிய எரிசக்தியை நோக்கமாகக் கொண்டுள்ள பருவநிலை மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான திட்டத்தை ஆதரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். பாதுகாப்பு மற்றும் ஏரோஸ்பேஸ் தொழில்நுட்பத் துறையில் பிரிட்டன் நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளோம்'' என பதிவிட்டுள்ளார்.

பின்னர் பஞ்சமஹால் மாவட்டம் ஹலோல் நகரில் உள்ள ஜேசிபி தொழிற்சாலையை போரிஸ் ஜான்சன் பார்வையிட்டார். அப்போது, மாநில முதல்வர் புபேந்திர படேல் உடன் இருந்தார். இதையடுத்து, காந்தி நகரில் உள்ள குஜராத் பயோடெக்னாலஜி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார். பின்னர் அந்நகரில் உள்ள புகழ் பெற்ற அக்சர்தாம் கோயிலை அவர் பார்வையிட்டார். பிரதமருடன் இன்று சந்திப்புகுஜராத் பயணத்தை முடித்துக் கொண்ட போரிஸ் ஜான்சன் நேற்று இரவு டெல்லி புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் பிரதமர் நரேந்திர மோடியை இன்று சந்தித்துப் பேச உள்ளார்.

இருதரப்பு உறவை பலப்படுத்துவது, தாராள வர்த்தக ஒப்பந்தம்(எப்டிஏ), இந்தோபசிபிக் விவகாரத்தில் ஒத்துழைப்பை பலப்படுத்துவது, பாதுகாப்பு தொடர்பான உறவை பலப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரிகிறது.

# அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸின் பாதுகாப்பு ஆலோசகராகிறார் இந்திய வம்சாவளி பெண்



அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸின் பாதுகாப்பு ஆலோசகராக, அமெரிக்க போர் கப்பலின் கமாண்டராக பணியாற்றிய இந்திய வம்சாவளி பெண் சாந்தி சேதி நியமிக்கப் பட்டுள்ளார்.

அமெரிக்காவின் நெவடா மாகாணத்தில் உள்ள ரெனோ நகரில் பிறந்தவர் சாந்தி சேதி. இவரது தாய் கனடாவைச் சேர்ந்தவர். தந்தை இந்தியாவிலிருந்து கடந்த 1960களில் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தவர். சாந்தி சேதி கடந்த 1993ம் ஆண்டில், அமெரிக்க கடற்படையில் சேர்ந்தார். கடந்த 2010 முதல் 2012ம் ஆண்டு வரை யுஎஸ்எஸ் டெகடர் என்ற அமெரிக்க போர் கப்பலின் கமாண்டராக பணியாற்றினார்.

இந்தியா வந்த, அமெரிக்க போர் கப்பலின் முதல் பெண் கமாண்டரும் இவர்தான்.தற்போது அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸின் செயலாளராகவும், பாதுகாப்பு ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க துணை அதிபர் அலுவலகத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தொடர்பான பணிகளில் சாந்தி சேதி ஒருங்கிணைந்து செயல்படுவார். கமலா ஹாரீஸுக்கு பாதுகாப்பு தொடர்பான புதுமையான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்குவார். அமெரிக்க இதழ் ஒன்றுக்கு சாந்தி சேதி கடந்த ஆண்டு அளித்த பேட்டியில், ''கடற்படையில் இருந்த அனுபவம், தன்னை குறைத்து மதிப்பிடக் கூடாது, தனது லட்சியத்தை மறைக்கக் கூடாது என்பதை கற்றுக் கொடுத்துள்ளது.

நாம் நாமாக இருந்து வெற்றி பெறவேண்டும். மற்றவர்களை போல் இருக்க முயற்சிக்க கூடாது'' என கூறியுள்ளார்.

# GRATEFUL AWARDS AND ACHIEVEMENTS!






RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE

SHAN THAYAPARAN TEAM
BROKER
WWW.SHAN123.COM



**THANU** THAYAPARAN
SALES REPRESENTATIVE



**VIKI** VELAUTHAN
SALES REPRESENTATIVE



**JEY** NADARASAH
SALES REPRESENTATIVE



**ANITA** QUAYE
SALES REPRESENTATIVE

RE/MAX இல் இலிருந்து இந்த மதிப்புமிக்க Diamond Award 2021, Top Team Award 2021, மற்றும் Top Producer Award 2021 அடைய எனக்கு உதவிய எனது Team, loyal clients, Mortgage Brokers, lawyers, family, friends மற்றும் well wishers அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

வீடு வாங்க / விற்க நினைக்கிறீர்களா? நாங்கள் Ontario வில் உள்ள அனைத்து வீடுகளையும் விற்கவோ / வாங்கவோ உரிமை பெற்றுள்ளோம்.



எங்களை தொடர்பு கொண்டு எமது சேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

- Free Market analysis
- Free Staging
- Free Home inspection report
- Free Home warranty
- Free Marketing
- Mortgage loans

**Shan Thayaparan**
Broker
416-567-7675
info@shan123.com
www.teamshan123.com

**Real Estate Simplified with Team Shan**

TeamShan123 | teamshan | shan-thayaparan

GRAND OPENING OF THE NEW MARKHAM - THORNHILL CAMPAIGN OFFICE

LOGAN KANAPATHI, INCUMBENT MPP, CANDIDATE, MARKHAM – THORNHILL



You're Invited
Campaign Opening!

170 Duffield,
Markham

Saturday
April 23 from 12-2pm

ONTARIO PC

Authorized by the Markham-Thornhill PC Riding Association



Carefirst Family Health Team



புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



நீதி மற்றும் அதற்கான பரிகாரம் ஆகியவற்றைப் பெற போராடும் தமிழ் சமூகத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் போராட்டத்தில் நானும் ஒரு பங்காளியாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். ஸ்காபுறோவில் தமிழ் சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்பவும், தமிழ் இனப்படுகொலைக் கல்விச் சட்டத்தை ஆதரிப்பதற்காகவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன் மாகாண அரசாங்கம் சார்ந்த எந்த உதவிக்கும் எனது அலுவலகமும் உங்களுக்காக திறந்தே உள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்..

இங்ஙனம்,

அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்

ஸ்கார்பரோ-அஜின்கோர்ட்

-----------------

My best wishes to the Tamil Community in its struggle to attain justice and redress. I am honoured to be part of your struggle. I am also thrilled to work with you to build the Tamil Community Centre and support the Tamil Genocide Education Act.

My office is also available for any help.

Aris Babikian, MPP

Scarborough-Agincourt



ONTARIO

**Aris Babikian**

MPP / DÉPUTÉ

SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**

207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6

**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca



STEELES PODIATRY CLINIC


கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE






உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

இந்தியா செய்திகள் India News

# இந்தியாவில் வறுமை அளவு குறைந்துள்ளதாம்?

## உலக வங்கி தகவல்

இந்தியாவில் 2011 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் வறுமையின் அளவு 12.3 விழுக்காடு குறைந்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் 22.5 விழுக்காடாக இருந்த வறுமையின் அளவு, 2019 ஆம் ஆண்டு 10.2 விழுக்காடாக குறைந்துள்ளதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நகர்ப்புறங்களை விட ஊரகப் பகுதிகளில் வறுமை அளவு அதகம் குறைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுகுறு விவசாயிகளின் வருமானம் 10 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளதாக உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பன்னாட்டு பணநிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தியாவில் கிட்டத்தட்ட வறுமை ஒழிக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெயலலிதாவை சிகிச்சைக்காக வெளிநாட்டிற்கு அழைத்து செல்லாதது ஏன்?

## - அப்பல்லோ மருத்துவர்கள் வாக்குமூலம்

வெளிநாடுகளுக்கு இணையாக சிகிச்சை வழங்கப்பட்டதால் ஜெயலலிதாவை வெளிநாடு அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் எழவில்லை என ஆறுமுகசாமி ஆணையத்தில் அப்பல்லோ மருத்துவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர். ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஆறுமுகசாமி ஆணையத்தில், ஜெயலலிதாவின் உறவினர்கள், பாதுகாவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் என சுமார் 150க்கும் மேற்பட்டோர் ஆஜராகி வாக்குமூலங்களை அளித்துள்ளனர். ஆறுமுகசாமி ஆணைய தரப்பும், சசிகலா தரப்பும் தன் தரப்பு விசாரணையை நிறைவு செய்துள்ளனர். அப்பல்லோ தரப்பு வழக்கறிஞர்கள் அப்பல்லோ மருத்துவர்களிடம் இன்று மறு விசாரணை மேற்கொண்டனர். அப்பல்லோ மருத்துவர்கள் கிரிநாத், விஜயசந்திர ரெட்டி, பாபு ஆபிரகாம் மற்றும் ஸ்டான்லி மருத்துவர் நந்தகுமார் ஆகியோர் ஆணையத்தில் ஆஜராகி வாக்குமூலங்களை அளித்துள்ளனர். ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை முறைகள் குறித்து அப்பல்லோ வழக்கறிஞர்கள் மருத்துவர்களிடம் கேள்வி எழுப்பி வாக்குமூலங்களை பதிவு செய்தனர்.



அப்போது நீதியரசர் ஆறுமுகசாமி குறுக்கிட்டு ஜெயலலிதாவை சிகிச்சைக்காக வெளிநாடு அழைத்துச் செல்ல வேண்டிய சூழல் இருந்ததா என கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அப்பல்லோ மருத்துவர் கிரிநாத், வெளிநாடுகளுக்கு இணையான சிகிச்சை முறைகள் அப்பல்லோ மருத்துவமனையில் இருப்பதாகவும், கடுமையாக உழைக்கக்கூடிய மருத்துவர்கள் இருப்பதாலும் அதற்கான அவசியம் எழவில்லை என வாக்குமூலம் அளித்தார்.

# கடந்தவையும் கடப்பவையும் (28)

**- உமா மோகன் -**

*அக் கல்லூரிக்குள் புகுவதன் முன்*
*அங்கு இருப்பதற்கு உகந்த இடம் - கிட்டவாய்*

*ஒட்டி நின்றால் இலகுவென்று கல்லூரிக்கு - முன்*
*நீட்டுக்குப் போகும் ஒழுங்கைக்குள் கிடைத்தது - அவ்வீடு*

*நிழல் தரும் மரங்கள் நிறைந்த*
*நவீன நாற்சதுர வீடு அது - நடுவில்*

*குட்டி முற்றமும் ஒரு வாசனைப்பூமரமும்*
*எட்டிப் பின்புறம் பார்த்தால் அங்கு*

*எத்தனையோ விளாமரங்கள் நெருக்கமாக - அங்கு*
*நித்திரையைக் குழப்பும் புகையிரதத் தண்டவாளமும்*

*மொத்தம் மூன்றுபேர் கொண்ட அவ்வீட்டில் - வந்தவர்*
*அத்தனை பேரும் போயிறங்க - அன்றைய*

*பூசையை முடித்தவராய் வெளியில் வந்தார் - சிவனின்*
*யோசனையோடு இருக்கும் பக்தர் அவர் - கூடவே*

*பதினைந்து வயதிற்கு உள்ளிருக்கும் அழகிய*
*சிறுமியவள், நீட்டுப் பாவாடை சட்டையோடு - அவள்*

*நேராக வகிடெடுத்து கட்டியுள்ளாள் ஒற்றைப்பின்னல்*
*தாராளமாகச் சிரிக்கும் அவளுக்கு முத்துப்பற்கள்*

*வரிசையாய் மேலும் அழகு செய்ய - கழுத்தில்*
*தெரிந்தது கறுப்புக் கயிறு ஒன்று - அவள்*

*யார் என்று புரியவைக்கும் அடையாளம்*
*பேர் சொல்லும் பணக்காரர் ஆனாலும் - அதுவே*

*அவர் வீட்டு வேலையாளின் சீருடை - அன்று*
*பலர் வீட்டில் பணிப்பெண்கள் அவ்வாறே*

*மாலை நேரம் ஆகிவிட்டால் தன்*
*வேலைகளை முடித்துவிட்டு வந்திடுவாள்*

*பார்த்துவிட்டு பத்திரிகை கொடுத்தனுப்பும் பெரியவர் - அதை*
*எடுத்துவரும் சாட்டிலே எங்களோடு வந்திருப்பாள் - தனக்கும்*

*படிப்பதற்கு ஆசையென்று பலதடவை சொல்லிடுவாள் - அப்போ*
*எடுக்கவில்லை அவள் கதையை பெரிதாக*

*தந்தைதாய் அனுப்பிவைக்க இங்கு தான்*
*வந்தேன் என விம்மியும் அழுதிடுவாள்*

*பெற்றவர் வைத்த பெயர் உச்சரிக்க*
*உற்றவர் ஒருவரும் இல்லை என்பாள் - சிவனை*

*உச்சரிப்போர் அவள் பெயரைத் தம்போல்*
*அச்சனோடு ஒத்ததாக ஆக்கி விட்டார்*

*இத்தனைக்கும் அவள் பெருந்தலைவர் போத்தி*
*கல்விக் கண்ணைத் திறந்த காமராசர் - ஏழைப்*

*பிள்ளைகள் யாவரும் பள்ளிக்குத் துள்ளிப்போக*
*மத்தியான உணவினை வழங்கியவர் - அவர்களுக்காய்*

*இலவசப் பள்ளிகளை உருவாக்கியவர் - இதை*
*உலகிற்கும் காட்டியவர் அவரே என்கிறார்கள்*

*அத்தகைய பரம்பரையில் வந்தவள் - எமக்கு*
*எத்தனையோ சொன்னாள் விளங்கவில்லை விளக்கமும் இல்லை*

*இன்றோ அது வலிக்கிறது, ஏன்??? - அதை*
*முன்னே நின்று பார்க்கவில்லை அனாலும்...*

(தொடரும்)

# நடிகர் விஷால் மதம் மாறினாரா? அவரின் பதிவால் ரசிகர்களிடையே குழப்பம்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக இருக்கும் விஷால், மதம் மாறினாரா என்று ரசிகர்கள் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். நடிகர் விஷால், "வீரமே வாகை சூடும்" படத்திற்குப் பிறகு, "லத்தி" என்ற படத்தில் நடித்து வருகிறார். அறிமுக இயக்குனர் வினோத் இயக்கி வரும் இப்படத்தில், விஷால் போலீசாக நடிக்கிறார். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி வைரலானது.

இதற்கிடையே, அண்மையில் நடிகர் விஷாலின் தங்கை ஐஸ்வர்யாவுக்கு குழந்தை பிறந்தது. இந்த தகவலை விஷால் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருந்தார். அதில், "மீண்டும் மாமா ஆனதில் மிக்க மகிழ்ச்சி. இதுக்கு மேல என்ன வேணும்?. எனது தங்கை ஐஸ்வர்யாவுக்கு குழந்தை பிறந்துள்ளது. குழந்தையும், பெற்றோரையும் கடவுள் ஆசிர்வதிக்கட்டும். இன்ஷா அல்லாஹ்" என பதிவிட்டிருந்தார். விஷாலின் இந்த பதிவை பார்த்த ரசிகர்கள் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்து வந்தாலும், அவர் மதம் மாறிவிட்டாரா? என்று குழம்பி வருகிறார்கள்.


**இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா**
**பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்**

காலம் : 23-04-2022 (சனிக்கிழமை)
இடம் : Scarborough Village Theatre
3600 Kingston Road (At Markham road) Scarborough

நேரம் : மாலை 3.00 மணி - 5.00 மணி வரை
கனடா வாழ் இணுவில் மக்களை இக்கூட்டத்திற்கு வருகை தந்துகலந்து சிறப்பிக்குமாறு பணிவன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:
416-286-4780 416-430-0422 416-438-2463

இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்

**கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'**

நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை **416 732 1608** என்னும் WHATSAPP இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

www.uthayannews.ca UTHAYAN உதயன்



## இலங்கைச் சிறப்பிதழில்

பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.

தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com



## தலை நிமிர வைத்த தமிழர்கள்

2.5.2022 முதல் 7.5.2022 வரை தினமும்


10 AM UK TIME
7 PM SYDNEY TIME
2.30 PM INDIA, SRI LANKA



உரை நிகழ்த்துகிறார்

ஞானத்தமிழ்ச் செல்வர்
டாக்டர் வே.சங்கரநாராயணன்

MEDITATION FOR
WORLD PEACE & HARMONY
ZOOM ID: 816 7104 9231
PASS CODE: 5151



2.5.2022 வள்ளுவர்
3.5.2022 கம்பர்
4.5.2022 இளங்கோ அடிகள்
5.5.2022 பாரதியார்
6.5.2022 பாரதிதாசன்
7.5.2022 கண்ணதாசன்



# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

CR PLAN — ALL DEBT SOLUTIONS

**0% வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**
**வசந்தி சிவராஜா - 416-616-3077**

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# “தமிழுக்கும் அமுதென்று பேர்” என்று முழங்கிய பாவேந்தர் பாரதிதாசனுக்கு இன்று நினைவுதினம்

புதுச்சேரியில் பிறந்து பெரும் புகழ் படைத்த பாவலர், “கனகசுப்புரத்தினம்” என்னும் இயற்பெயர் கொண்ட பாரதிதாசன் ஆவார். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால், “பாரதிதாசன்” என்று தன் பெயரை மாற்றிக் கொண்டார். எழுச்சி மிக்க எழுத்துகளால், புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் பரவலாக அழைக்கப்படுபவர். இவர் குயில் என்னும் (கவிதை வடிவில்) ஒரு திங்களிதழை நடத்தி வந்தார்.

1891 ஏப்ரல் 29ந் தேதி புதுவையில் செங்குந்தர் கைக்கோள முதலியார் மரபில், பெரிய வணிகராயிருந்த, கனகசபை முதலியார் - இலக்குமி அம்மாள் தம்பதியருக்குப் பிறந்த கனகசுப்புரத்தினம், சிறு வயதிலேயே பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும், தமிழ்ப் பள்ளியிலேயே பயின்ற காலமே அதிகம். பதினெட்டு வயதிலேயே காரைக்கால் அரசு கல்லூரித் தமிழாசிரியரானார். சிறு வயதிலேயே சிறுசிறு பாடல்களை, அழகாகச் சுவையுடன் எழுதித் தன் தோழர்களுக்குப் பாடிக் காட்டுவார்.

நண்பர் ஒருவரின் திருமணத்தில், விருந்துக்குப் பின், சுப்பிரமணிய பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடினார். பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். அப்பாடலே, அவரைப் பாரதியாருக்கு அறிமுகம் செய்து வைத்தது.

புதுவையிலிருந்து வெளியான தமிழ் ஏடுகளில், “கண்டழுதுவோன்”, “கிறுக்கன்”, “கிண்டல்காரன்”, “பாரதிதாசன்” எனப் பல புனைப் பெயர்களில் எழுதி வந்தார்.

தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டராகவும் விளங்கினார். மேலும் அவர் திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாகக் கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினை தன் பாடல்கள் மூலம் பதிவு செய்தார்.

பெரும் கவிஞராக உயர்ந்த பாரதிதாசன், அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக, 1954-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் தமிழக சட்டமன்றத்திற்கு பின்பு போட்டியிட்டபோது தோல்வி அடைந்து விட்டார்.

1946 ஜூலை 29-இல் அறிஞர் அண்ணாவால்,



கவிஞர் “புரட்சிக்கவி” என்று பாராட்டப்பட்டு, ரூ.25,000 வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவராக இருந்த பாரதிதாசன், அவரது மானசீக குருவாக சுப்ரமணிய பாரதியாரைக் கருதினார். பாரதியிடமிருந்து பாராட்டுகள் பெற்றதோடு மட்டுமல்லாமல், அவரது நட்பும் கிடைத்தது. அன்றுமுதல், அவர் தனது இயற் பெயரான கனகசுப்புரத்தினம் என்பதைப் “பாரதிதாசன்” என்று மாற்றிக் கொண்டார்.

பாரதிதாசன் எழுதிய புகழ் பெற்ற சில வரிகள்:

“எங்கள் திருநாட்டில் எங்கள் நல்லாட்சியே”..
புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்..
தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்..
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!..

பாரதிதாசனின் மனைவி பெயர் பழநி அம்மையார். 1920ஞல் இவர்கள் திருமணம் நடந்தது.

1964 ஏப்ரல் மாதம் 21-ஆம் தேதி பாரதிதாசன் இயற்கை எய்தினார். அவரது மரணத்திற்குப் பின் ஐந்து ஆண்டுகள் கழித்து 1969-ல் அவரது “பிசிராந்தையார்” நாடகத்திற்காக அவருக்கு “சாகித்ய அகாடமி விருது” வழங்கப்பட்டது. இவருடைய படைப்புகள் தமிழ்நாடு அரசினரால் 1990-ல் பொது உடைமையாக்கப்பட்டன.

திராவிட இயக்கத் தலைவர்களுள் முதன்முதலாகத் திரைப்படத்துறைக்குள் நுழைந்தவர் பாரதிதாசனே ஆவார். 1937-ஆம் ஆண்டில் திரைப்படத் துறைக்குள் நுழைந்த பாரதிதாசன் தனது இறுதிநாள் வரை அத்துறைக்குக் கதை, திரைக்கதை, உரையாடல், பாடல், படத்தயாரிப்பு எனப் பல வடிவங்களில் தனது பங்களிப்பை வழங்கிக்கொண்டு இருந்தார்.

இவற்றுள் பாண்டியன் பரிசு, முரடன் முத்து, மகாகவி பாரதியார் ஆகிய படங்களைத் தானே சொந்தமாகத் தயாரிக்கும் முயற்சியில் தனது இறுதிக்காலத்தில் ஈடுபட்டு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி படத்தயாரிப்பை கைவிட்டார். பாரதிதாசன் திரைப்படத்திற்கென தானே பல பாடல்களை இயற்றினார். இவர் வெவ்வேறு சூழல்களில் இயற்றிய பாடல்கள் சிலவற்றை வேறு சிலர் தத்தம் படங்களில் பயன்படுத்திக்கொண்டனர்.


MURALI BUS LTD. 29 years


416.455.3514
56 SEATER COACH BUS WWW.MURALIBUS.CA
Canada & US Anywhere • Aiport Service On Time


T2
Cuba சுற்றுலா *All Inclusive*
குளிர் காலத்தை விட்டு வெப்பமான கால நிலையில் 7 நாட்கள் சுற்றுலா
May 13th (7 Days)
விமானச்சீட்டு Hotel
24மணி நேரமும் உணவு வகைகள் (Bar)
கிராமப்புற சுற்றுலா, புளியமரம், நாவல் மரம்
வாழை இலையில் சாப்பாடு, உடன் ஆட்டிறைச்சி, உடன் மீன், குதிரை வண்டியில் பவனி, இளநீர்
(Home to Home) - உங்கள் வீட்டு வாசலில் இருந்து உங்கள் வீடு வரை (Not Free). உங்கள் சொந்தச் செலவுகளுக்கு நீங்களேபொறுப்பு)
ஒருவருக்கு $1400 மட்டுமே.
*2 people per room

T3
Rajarajeswary Temple & Pitsburg S.V. Temple
May 21 & 22 (2 Days) $260
*Including Hotel - 4 people per room


T4
Montreal Tour and Val Morin Temple
தேர் திருவிழா
July 16 and 17th
Saint Joseph Church - Lunch Buffet
Premium Outlet Shopping
$225
(4 people in a room)


T5
EAST COAST
* Mont Tremblant
* Longest covered bridge
* Reversing Falls
* Magnetic Hill
* Hopewell Rocks
* Peggy's Cove
* Swiss Airflight Crash Scene
* Maritime Museum
* Parliament Building (Charlottetown)
* Historical Place (Charlottetown)
* Potatoe Farm
* Beach
July 1st - 7th
4 Province Tour
$990 (each person)
(4 மாகாணங்கள்) *Quebec *Nova Scotia *New Brunswick *Prince Edward Island (P.E.I)


T6 SOON!
New York, Washington DC, Pittsburgh
4 நாட்கள் சுற்றுலா


முன்பதிவு செய்தல் அவசியம். தொடர்புகளுக்கு அழையுங்கள்
Murali 416.455.3514 | muralitaran@outlook.com
Vaccination is mandatory (at least 2 doses)


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# யாழ்ப்பாணத்து நல்லூரின் பெருமையும் நல்லூரான் மகிமையும்



தெற்கு வீதி இராஜகோபுரம் வடக்கு வீதி இராஜகோபுரம் பொற்கூரை

இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு பிரதேசம் நல்லூர். இந்தப் பிரதேசத்திற்கான அரச நிர்வாக கட்டமைப்புக்குள் தனியானதொரு பிரதேச செயலகம் இங்கு இயங்கி வருகிறது. யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புகளில் ஒன்றாக நல்லூர் பிரதேச சபை அமைந்துள்ளது. 1960ஆம் ஆண்டிலிருந்து 1989 வரையிலான காலப்பகுதியில் நல்லூர் தனியானதொரு பாராளுமன்றத் தொகுதியாகவும் இருந்தது. இப்போது இது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேசம் பலவகையிலும் சிறப்புப்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. யாழ்ப்பாணத்தை தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலப்பகுதியில் குறிப்பாக 1215ஆம் ஆண்டிலிருந்து 1619 வரையில் நல்லூர் இராசதானியாக விளங்கிய பெருமைக்குரியது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவந்த பின்னர், யாழ்ப்பாண நகரின் கரையோரப்பகுதிக்கு தங்கள் ஆட்சிப் பரிபாலன பணிமனையை மாற்றிக் கொண்டதாக வரலாறு சொல்கிறது. தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்து நினைவுகளையும் வரலாற்றுக் கதைகளையும் சொல்லும் ஒருசில கட்டடங்களும், கட்டட எச்சங்களும் தொல்பொருள் மரபுரிமை சின்னங்களாக நல்லூர் பிரதேசத்தில் இப்போதும் காணப்படுவது வரலாற்றுச் சிறப்பாகவே அமைந்துள்ளன. இவற்றுள் மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு கற தோரண நுழைவாயில் மற்றும் சங்கிலியன் அரண்மனையின் கட்டட அத்திவாரம், யமுனா ஏரி போன்றவைகள் குறிப்பிடத்தக்கன.

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சின்னத்தம்பிப் புலவர், சரவணமுத்துப் புலவர் போன்ற அறிஞர் பெருமக்கள் தோன்றிய பிரதேசமும் நல்லூர்தான். அறிஞர் பெருமக்கள் மட்டுமல்ல ஞான பரம்பரையொன்றை தோற்றுவித்த பெருமையும் நல்லூருக்குண்டு. யாழ்ப்பாணத்து சித்தர் பரம் பரையில் முதல்வராகப் போற்றப்படும் கடையிற் சுவாமிகள் நடமாடிய புண்ணிய பூமியாக நல்லூர் விளங்குகிறது. இவரது சீடரான செல்லப்பா சுவாமிகள் நல்லூர் தேரடியில் வாழ்ந்தவர். அவரது ஞானஉபதேசம் பெற்று சீடரான யோகர் சுவாமிகள் நல்லைக் கந்தன் ஆலய புண்ணிய பூமியில் நடமாடியவர். தன் ஞானகுருவை மட்டுமல்ல நல்லைக் கந்தனையும் போற்றிப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். பின்னாளில் வாழ்ந்த குடைச் சுவாமிகளும் நல்லூர் கந்தனின் புனித பூமியில் பாதங்களை பதித்தவர். இத்தகைய ஞானபரம்பரையினரின் திருப்பாதங்கள் பதிந்த பெருமைக்குரியது நல்லூர்.

நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபமும், அங்குள்ள நாவலர் சிலையும், நாவலர் கலாசார மண்டபமும் இன்றும் நாவலர் பெருமானின் நினைவைமீட்டிக் கொண்டிருக்கும் சின்னங்களாக முக்கியத்துவம் பெறுகின்றன. இன்னொரு நினைவுச் சின்னமான அரியாலையிலிருந்து நல்லூர் பிரதேசத்தை ஊடறுத்து யாழ்ப்பாண நகரத்தை சென்றடையும் நாவலர் வீதி, யாழ். குடாநாட்டின் மிகநீண்டதூர வீதியாக பிரபலம் பெறுகிறது.

இலங்கையில் முதலாவதாக தோற்றம்பெற்ற சைவ ஆதீனமாக பெருமை பெறும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும், 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உதயமான யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனமும் நல்லூரிலேயே அமைந்திருப்பதும் சிறப்புக்குரியது. நல்லூர் கந்தன் ஆலயத்திற்குப் பின்னால், ஆலய மேற்கு வீதியில் நல்லை ஆதீனத்தின் எழில்மிகு கட்டடம் காட்சி தருகிறது. இலங்கையிலுள்ள பெரும் இந்துமத அமைப்புகளுள் ஒன்றான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய பணிமனை, இலங்கை சின்மயா மிஷனின் வடபிரதேச நிலையம், திவ்ய ஜீவன சங்கம், துர்க்காதேவி மணிமண்டபம், கம்பன் கோட்டம் போன்ற சமய மற்றும் கலை, கலாசார நிறுவனங்கள் பல நல்லூர் பிரதேசத்திலிருந்தே சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன. பாரதநாட்டின் இலங்கைக்கான யாழ். துணைத் தூதரகமும் நல்லூரிலேயே இயங்கிக் கொண்டிருப்பதும் இன்னொரு சிறப்புக்குரியது. நல்லூர் முத்திரைச்சந்தி அருகே யாழ்ப்பாணத் தமிழ் மன்னனான சங்கிலியனின் உருவச்சிலை கம்பீரமாகக் காட்சிதருவதும் நல்லூரின் பெருமைக்கு சான்றாகும்.

கடந்த போர்க்கால நிலைமைகளுக்குப் பின் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், தனது தலைமைப் பணிமனையையும், ஏனைய உப செயலகங்களையும் நல்லூர் பிரதேசத்தில் அமைத்திருப்பதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இந்த செயற்பாடானது, தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தின்போது நல்லூர் பிரதேசம் இராசதானியாக விளங்கியிருப்பதை மீளவும் நினைவுபடுத்தும் வகையில் இருப்பதாகவே சொல்லத் தோன்றுகிறது.

நல்லூர் பிரதேசத்திலுள்ள பல கோவில்கள் பழந்தமிழ் மன்னர்களது ஆட்சியுடன் தொடர்புபட்டதான வரலாற்றுப் பெருமைக்குரியது என ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நல்லூர் கந்தசுவாமி ஆலயம், இதற்கு கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோவில், தெற்கில் கைலாசநாதர் கோவில், மேற்கே வீரமாகாளி அம்மன் கோவில், வடக்கில் சட்டநாதர் கோவில் என்பனவற்றை காவல் அரண்களாக்கி அரச ஆட்சிப் பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டதாக வரலாறு சொல்கிறது. போர்க்காலத்தின்போது அரசர்கள் இந்த ஆலயங்களில் தங்கள் ஆயுதங்களை வைத்து வழிபட்டுச் சென்றிருப்பதாக வரலாற்றுப் பதிவுகளிலிருந்து அறிய முடிகிறது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குப் பின்னால் அமைந்துள்ள
நல்லூர் சிவன் கோவிலும் இன்னொரு வகையில் சிறப்புப் பெறுகிறது.

நல்லூர் பிரதேசத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் வேலவனுக்கு இங்குள்ள ஏனைய ஆலயங்களை விட தனித்துவமான மகிமை இருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். நல்லூர் பிரதேசத்தில் சிறியது, பெரியது என பெருமளவு ஆலயங்கள் அமைந்திருக்கும் நிலையில், ஒவ்வொரு ஆலயமும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூலமூர்த்தியின் பெயரைக் குறிப்பிட்டுத்தான் அறிமுகம் செய்து கொள்வது வழக்கம். ஆனால், நல்லூர் கந்தப் பெருமானை மட்டும் “நல்லூரான்” என்று குறிப்பிட்டால் போதுமானது. மேலதிக விளக்கம் எதுவுமே தேவையில்லை.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வரலாற்றுப் பதிவுகளை நோக்கும்போது, ஆலயம் ஸ்தாபிக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பான சரியான தகவல்களை வரலாற்று ஆய்வாளர்களால் பெறமுடியாமலிருப்பதாகவே தெரிகிறது. எனினும், இந்த ஆலயம் யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர் காலத்தில் தோற்றம் பெற்றதாக தெரியவருகிறது. ஆரம்பத்தில் நல்லூர் முத்திரைச் சந்தியை அண்மித்த பகுதியில் ஆலயம் அமைந்திருந்ததாக சொல்லப்படுகிறது. அந்தக் காலப்பகுதியில் அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக ஆலயம் சேதமடைந்ததாகவும், அந்தப் போரின் போது வெற்றிபெற்று யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றிய மற்றுமொரு தமிழ் மன்னன் பிராயச்சித்தமாக ஆலயத்தை புனரமைப்பு செய்தான் என்றும் வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 1505ஆம் ஆண்டு இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றி ஆட்சி செலுத்துவதற்கு பல வருடங்களுக்கு முன்னதாகவே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என கருதுவதற்கு இடமுண்டு. ஏனெனில், இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியின் போது இந்து ஆலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டு மத வழிபாட்டுக்கும் தடை ஏற்படுத்தப்பட்டது என்ற தகவல் வரலாற்று நூல்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

போர்த்துக்கேயருக்குப் பின் இலங்கையில் ஏற்பட்ட ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப் பகுதியில், இந்துமத வழிபாட்டு செயற்பாடுகளில் சிறிது தளர்வு ஏற்பட்டது. இவ்வேளையிலேயே இப்போதுள்ள இடத்திலிருக்கும் முருகப்பெருமான்



ஆலயம், 1734ஆம் ஆண்டில் இரகுநாத மாப்பாண முதலியாரால் சிறிய கோவிலாக ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு சொல்கிறது. இவரே ஆலய பரிபாலனத்தையும் மேற்கொண்டு வந்தார். இவரது வழிவந்த சந்ததியினரே அன்று தொடக்கம் இன்றுவரை ஆலயத்தை சிறப்பாக நிர்வகித்து வருகின்றனர். இப்போது அமைந்துள்ள இடத்திற்கு முன், இதற்கு அண்மையிலுள்ள வெவ்வேறு இரு இடங்களில் ஆலயம் அமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்ததாக வரலாற்றுத் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது.

நல்லூர் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்துக் கோவில்களில் காலத்துக்குக் காலம் மகோற்சவங்கள் நடைபெற்று வந்தாலும், நல்லூர் கந்தனின் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் வடபகுதியிலுள்ள அடியார்கள் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியிலும், அதற்கு மேலாக வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்து மக்களும் விரதமிருந்து முருகப்பெருமானை மனதாரப் போற்றி வழிபாடு செய்வது வழமையாகும். வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த நம்மவர்களும்,
தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல்வாதிகள், பிரமுகர்கள் உட்பட சிங்கள மக்களும் நல்லூர் மகோற்சவகாலத்தின்போதும் ஏனைய நாட்களிலும் ஆலயத்திற்கு வருகைதந்து முருகப்பெருமானை தரிசித்து செல்வதும் வழமையான ஒரு நிகழ்வாக இடம்பெற்று வருகிறது. நல்லூரானைப் போற்றி பழந்தமிழ்ப் புலவர்கள் பலர் பாமாலைகளை சூட்டியிருக்கிறார்கள். சித்தர் பரம்பரையில் வந்த யோகர் சுவாமிகள் தனது நற்சிந்தனைப் பாடல்கள் பலவற்றில் நல்லைக் கந்தனைப் போற்றித் துதித்திருக்கிறார்.

***(தொடர்ச்சி 26ம் பக்கம்)***

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 35
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

முன்னேறிச் செல்லும் கால்கள்
முட்களுக்(கு) அஞ்சி டாது!
நின்றாளும் சிங்க மென்றும்
நரியிடம் கெஞ்சி டாது!
உன்னுள்ளம் வேகம் கொண்டால்
உடைபடும் தடைகள் யாவும்!
உன்கைகள் ஓங்கி நின்றால்
உன்தோளின் கீழே வானம்!

அறிவுதான் அணையா ஜோதி
அறிவைநீ ஏற்று ஏற்று!
அறிவில்நீ அறிவாய் நீதி
அதனைநீ போற்று போற்று!
குறிலது நெடிலில் பாதி;
கவிஞன்தன் கூற்று கூற்று!
குறிலாகக் குறுகி டாதே;
நெடிலாக உன்னை மாற்று!



(25ம் பக்கத் தொடர்ச்சி)

# யாழ்ப்பாணத்து நல்லூரின் பெருமையும் நல்லூரான் மகிமையும்

தனது பாடல் வரிகள் பலவற்றில் "நல்லூரான்" என்ற சொல்லைப் பிரயோகித்து இருப்பதை காணமுடிகிறது. "நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி" என்பதுடன், "நல்லூரான் திருவடியைப் பாடு" என்று சொல்லும் அவர், "நல்லூரான் கிருபை வேண்டும், வேறென்ன வேண்டும்?" என்கிறார். "கடல்சூழ் கவினிலங்கை கார்சூழ் நல்லூரான் தொடுக்கும் வல்வேலைத் துதி" என்று இன்னொரு வெண்பா பாடலிலும் நல்லூர் கந்தனைப் போற்றுகிறார். "நல்லூரான் திருவடியைப் பாடு, நாமே நாம் என்று சொல்லி நாடு" என்றும், "நல்லூரான் திருப்பாதம் காப்பு - அடடா நமக்குக் குறைவில்லை நல்ல வாக்கு" என்றெல்லாம் நல்லூர் கந்தன் புகழ்பாடும் யோகர் சுவாமிகள் "எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே" என்றும், "நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு - அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" என்றும் நல்லூரான் மகிமையைச் சொல்லும்போது, வேறு சான்று எதுவுமே தேவையில்லை.

அலங்காரக் கந்தனாகப் போற்றப்படும் சிறப்பு நல்லூரானுக்கு உண்டு. மகோற்சவ காலங்களில் கந்தப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக வெவ்வேறு அலங்காரங்களுடன் வீதியுலாவரும் காட்சி பக்திபூர்வமானது. முருகப் பெருமானுக்குரிய சாத்துப்படியும் வீதியுலாவரும் வாகனமும் விதம்விதமான சோடனையுடனான அலங்கரிப்பில் அமைந்திருக்கும். சில முக்கிய உற்சவங்களின் போது வீதியுலாவரும் முருகப் பெருமானின் அலங்காரத்துடன் இணைந்த நிறங்களிலான வஸ்திரங்களையே மகோற்சவத்தை நடத்திவைக்கும் குருமார்களும் அணிந்திருப்பார்கள். இதற்கும்மேலாக நல்லூர் கந்தன் ஆலயமும் அலங்காரச் சிறப்பினையும், ஓர் அழகுப் பாரம்பரியத்தையும் கொண்டு விளங்குகின்றது. ஆலயத்திலும் அதன் சூழலிலும் நிலவுகின்ற தூய்மை, ஆலய நித்திய நைமித்திய பூசை ஆராதனைகளில் நேரந்தவறாமை, ஆலய முகாமைத்துவச் சிறப்பு, குருமார்கள் தொண்டர்கள் வழிபடுவோர் ஆகியோரின் ஒத்துழைப்பு ஒழுங்குமுறைகள் என்பன அழகுக்கு அழகு செய்வனவாக அமைந்துள்ளதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

இங்கு தினந்தோறும் ஆறு காலப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. மகோற்சவ காலத்தில் காலை, மாலை என இருநேர திருவிழாக்கள் நடைபெறுகின்றன. திட்டமிடப்பட்டு குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்கு, ஆலயத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கடிகாரத்தின் மணி ஒலிக்கவும் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகும். இதுபோலவே மகோற்சவ காலங்களிலும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு சகல கருமங்களும் ஆரம்பமாகி நடைபெறுவது வழக்கமாகும். உபயகாரர்களின் அல்லது முக்கிய பிரமுகர்களின் வருகையை எதிர்பார்த்து பூசைகள், கிரியைகள், உற்சவங்கள் என்பன பிற்போடப்படும் அல்லது காலதாமதம் செய்யும் வழக்கம் இந்த ஆலயத்தில் முற்றாகக் கிடையாது. இங்கு பேணப்பட்டு வரும் நேரமுகாமைத்துவ செயற்பாடானது, இலங்கையிலுள்ள ஏனைய ஆலயங்களில் நடைமுறைப்படுத்தப்படுவது குறைவு அல்லது முற்றாகவே இல்லை என்றுகூட சொல்லலாம்.

இப்போது இந்து ஆலயங்களில் பல்வேறு கட்டணங்களில் பலவகையான அர்ச்சனைகள் செய்யப்பட்டு வருகின்றபோது, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அன்றுமுதல் இன்றுவரை அர்ச்சனைக் கட்டணமாக ஒரு ரூபாய்தான் பெற்றுக் கொள்ளப்படுகிறது. அர்ச்சனைச் சீட்டில் ஒரு ரூபாய் என்றுதான் குறிக்கப்பட்டிருக்கும். அடியார் ஒருவர் பத்து, இருபது, ஐம்பது அல்லது நூறு ரூபா கொடுத்து அர்ச்சனை செய்ய விரும்புகிறார் என வைத்துக்கொள்வோம். ஆலய அலுவலகத்தில்
விரும்பிய பணத்தைக் கொடுத்து அர்ச்சனை சீட்டைக் கேட்டால் அவரது பணத்தின் பெறுமதிக்கு ஏற்றவகையில் (ஒரு ரூபாவுக்கு ஒன்று என்ற ரீதியில்) சீட்டுகள் வழங்கப்படும். இதுவே இங்குள்ள நடைமுறையாகும்.

இலங்கையிலுள்ள பல வர்த்தக நிறுவனங்கள் தங்கள் விளம்பர செயற்பாடுகளின்போது நல்லைக் கந்தன் ஆலய முகப்பை பயன்படுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. இலங்கை அரசு 2013ஆம் ஆண்டில் இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களை பெருமைப்படுத்தும் வகையில் அந்தந்த மாவட்டங்களின் சிறப்புக்குரிய பொதுச் சின்னம் தாங்கியதாக பத்து ரூபா பெறுமதியான வெள்ளி நாணயக் குற்றிகளை வெளியிட்டிருந்தது.
இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய நாணயக் குற்றியில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முகப்பு பொறிக்கப்பட்டமையானது நல்லூரான் பெருமைக்கு இன்னுமொரு சான்று என்றுதான் சொல்லவேண்டும். கந்தபுராண கலாசாரம் மேலோங்கியிருப்பதாக சிறப்பித்துச் சொல்லப்படும் யாழ்ப்பாணத்து சமயப் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும், ஆலயம் சிறப்புப் பெறுகிறது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் நிர்வாகச் சிறப்பு ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் துணையாகவிருக்கிறது. மாப்பாண முதலியார் பரம்பரையினரின் சிறப்பான பரிபாலன செயற்பாடுகளினால் காலத்துக்குக் காலம் புனருத்தாரண வேலைகளும், திருத்தப் பணிகளும், புதிய வடிவமைப்பு செயற்திட்டங்களும் ஆலயத்திற்கு அதிசிறப்பான நிலையை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. 1964ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேர், அலங்கார வளைவுகளுடன் அமைந்த வகையிலான ஆலய நுழைவாயில், புதிதாக அமைக்கப்பட்ட வசந்த மண்டபம் என்பன கடந்தகால செயற்பாடுகளுள் சிலவாகும். ஆலயத்தின் தெற்குவீதியில் புதிதாக அமைக்கப்பட்ட நவதள இராஜகோபுரம் 2011ஆம் ஆண்டு மகோற்சவ காலத்தின் போதும், ஆலய வடக்கு வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட நவதள குபேரவாசல் இராஜகோபுரம் 2015ஆம் ஆண்டு மகோற்சவ காலத்தின் போதும் மகா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு ஆலய தீர்த்தக் கேணியின் நான்கு பக்கங்களிலுமுள்ள படிக்கட்டுகள் திருத்தியமைக்கப்பட்டு, பிறநாட்டு மாபிள் கற்களால் அழகுபடுத்தப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சண்முக சுவர்ண சபா மண்டபம் 2018ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு விமானத்திற்கு (தூபி) தங்கக் கலசத்துடன் இணைந்த பொற்கூரை அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் மூலம் இலங்கையில் பொற்கூரை வேயப்பட்ட முதலாவது கோவிலாக நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பெருமை பெறுகிறது.

அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக மகோற்சவ நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நேரடியாக அஞ்சல் செய்து வருகின்ற பெருமையைப் பெறும் ஒரேயொரு இந்து ஆலயமாக நல்லூர் கந்தசுவாமி கோவில் விளங்குகிறது. ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தேர், தீர்த்த நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நேர்முக வர்ணனையாக வழங்கி வந்துள்ளது. கடந்தகால நெருக்கடியான போர்க்காலச் சூழ்நிலைகளின்போதும், அப்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் பணிப்பாளராக கடமையாற்றிக்கொண்டிருந்த வி.என். மதிஅழகன் அவர்களது ஏற்பாட்டில் ஆலய தேர், தீர்த்த நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, பூங்காவன நிகழ்ச்சியையும் இலங்கை வானொலி நேர்முக வர்ணனையாக வழங்கியமை ஒரு வரலாற்றுப் பதிவாகவே அமைந்துள்ளது. நவீன தொழில்நுட்ப மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத அன்றைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த நேர்முக அஞ்சல் செயற்பாடு ஏராளமான நேயர்களால் பெரிதும் வரவேற்றுப் போற்றப்பட்டது. இதுவும் நல்லூரான் மகிமைக்கு ஒரு சான்று என்றுதான் சொல்லவேண்டும்.

நல்லைக் கந்தன் ஆலய வரலாற்றுப் பதிவுகளை மீள்நோக்கிப் பார்க்கும்போது, கடந்த காலங்களில் குறிப்பாக போர்க்காலச் சூழ்நிலையின் போதும், கொரோனா கிருமித் தொற்று மேலோங்கியதால் ஏற்பட்ட முடக்க காலத்தின்போதும் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ரத்துச் செய்யப்பட்டதாகவோ அல்லது பிற்போடப்பட்டதாகவோ தகவல் இல்லை. திட்டமிட்டபடி குறிக்கப்பட்ட தினங்களில், குறிக்கப்பட்ட கால அட்டவணையின் பிரகாரம் ஆலய உள்வீதியில் அனைத்து உற்சவங்களும் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டிருப்பது ஒரு சாதனைக்குரிய விடயமாக போற்றப்படுகிறது.

இங்கு வருடந்தோறும் ஆடி அமாவாசை தினத்திலிருந்து ஆறாவது நாள் கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் நடை பெறுவது வழக்கம். இவ்வருட மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பத்தாவது நாளாகிய ஆகஸ்ட் 11ஆம் திகதி மாலை மஞ்சம் உற்சவமும், 18ஆம் திகதி மாலை அருணகிரிநாதர் உற்சவமும், 19ஆம் திகதி மாலை கார்த்திகை உற்சவமும், 21ஆம் திகதி மாலை கைலாச வாகனம் உற்சவமும், 22ஆம் திகதி மாலை வேல்விமானம் (தங்கரதம்) உற்சவமும், 23ஆம் திகதி காலை தெண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா), அதேதினம் மாலை ஒருமுகத் திருவிழாவும், மறுநாள் 24ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும் நடைபெறவிருக்கின்றன. 24ஆவது நாளாகிய ஆகஸ்ட் 25ஆம் திகதி காலை இரதோற்சமும் 25ஆவது நாளாகிய ஆகஸ்ட் 26ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று, மறுநாள் 27ஆம் திகதி மாலை பூங்காவன உற்சவத்துடன் நல்லூரானின் இவ்வருட மகோற்சவப் பெருவிழா நிறைவுபெறும்.

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் - நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி."

(சிவயோக சுவாமிகள்)

- ஊரெழு அ. கனகசூரியர்

# நான் உங்கள் நண்பன்

***** ***** ***** ***** *****

- கவிஞர் தியாரூ

ஏழை ஒருவன் குளிர்காய
என்னை விறகாய் நான்தருவேன்!
எரிந்து முடிந்து சாம்பலின்மேல்
ஃபீனிக்ஸ் போலே நானெழுவேன்!

விரல்கள் தேடும் நேரத்தில்
வீணை யாக நான்வருவேன்!
உயிரில் கலந்து தித்திக்கும்
தேனார் இசையை நான்தருவேன்!

உழைத்துப் படுக்கும் பாட்டாளி
உடலை வருடும் காற்றாவேன்!
வறண்டு கிடக்கும் வாழ்வினிலே
வளமார் இன்ப ஊற்றாவேன்!

ஏங்கும் நெஞ்சம் இளைப்பாற
என்னை நிழலாய் நான்விரிப்பேன்!
தூங்கும் விழிகள் சுகம்காணத்
தோளில் ஏந்தி நான்சுமப்பேன்!

அன்பு செய்வார் கைகளுக்குள்
அணிலைப் போலே நானிருப்பேன்!
நன்றி மறவார் காலடியில்
நேச மலராய் தேன்சுரப்பேன்!

ஒன்று சொல்வேன் உலகத்தீர்!
உங்கள் நண்பன் நானென்பேன்!
இன்று இந்தக் கணத்தினிலே
இனிதே வாழ்தல் வாழ்வென்பேன்!



## ஈழத்து சிறப்ப மலருக்கான கட்டுரை.

## ஈழ இலக்கியப்போக்கில் திருகோணமலை கலை இலக்கியம்

# ஒரு வரலாற்றுப்பதிவு



**- கலாபூஷணம், திருமலை நவம்**

ஈழத்தின் கிழக்கு கரையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வனப்புடன் கூடிய நகரம் திருக்கோணமலை. மிக நீண்ட வரலாற்றையும் இலக்கிய மற்றும் சமூகத் தொன்மையும் கொண்ட திருகோணமலை வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட மிக முக்கியம் வாய்ந்த பிரதேசமாகவும் வடக்கு கிழக்கு மக்களின் பூகோள நடுநாயகமாகவும் விளங்கிவருகிறது.

கிழக்கு மக்களின் வாழ்க்கை முறைகளையும், வடக்கு மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் இணைக்கும் பாலமாக விளங்கிவரும் திருக்கோணமலைப் பிரதேசம், பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக அதன் பூகோள அமைப்புக்கள், கலாச்சாரங்கள் வாழ்வு முறைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. திருமலை நாகரீகமும் மெகாஹஞ்சதாரோ நாகரீகமும் ஏறக்குறைய ஒரே காலத்தவை என வரலாற்று ஆய்வாளர்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

திருக்கோணமலைப் பிரதேசத்தின் முக்கிய அடையாளங்களாக் காணப்படுபவை கோணேசர் ஆலயம், கன்னிய வெந்நீருற்று, துறைமுகம், கந்தளாய்க்குளம், வெருகலம்பதி, தம்பலகமம்கோணேசர் ஆலயம், கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம், வில்கம் விகாரை, முத்து விளையும் கிண்ணியா, நிலாவெளி போன்ற இன்னோரன்ன அடையாளச் சின்னங்களிலிருந்து உருவாகியதே இப்பிரதேசத்தின் தொன்மைமிகு இலக்கியங்களும், கலைகளும், மரபுகளும், வரலாறுகளுமாகும்.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே போற்றப்பட்டுவரும் கோணேசர் ஆலயத் தொன்மங்களிலிருந்துதான் திருகோணமலை மண்ணுக்கான கலையும், இலக்கியமும் முகிழ்விடத் தொடங்கியதை முன்னைய கால புராணங்கள் இதிகாசங்கள், மற்றும் கல்வெட்டு ஆதாரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

தோன்மையான கோணேசர்மரபை விளக்கும் அதன் புகழ்பாடும் புராணங்களான தட்ஷண கைலாசபுராணம், திரிக்கோணாசல புராணம், வாயு புராணம், கோணேசர் கல்வெட்டு திருகோணமலை அந்தாதி கோணேசர் கல்வெட்டு என்பவற்றுடன் சோழர் பாண்டியர் கால கல்வெட்டுக்கள் என்றவகையில் பெரியகுளக்கல்வெட்டு, மாங்கணாய்க் கல்வெட்டு, பளமோட்டைக் கல்வெட்டு, கந்தளாய்க் குளக்கல்வெட்டு (16ற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள்) மூலம் இச்செய்தியை அறியக்கூடியதாகவுள்ளது.

சிங்கை செகராஜசேகர மன்னன் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பண்டிதராசர் எனும் புலவரால் இயற்றப் பெற்ற தட்ஷிண கைலாசபுராணம், கவிராசர் எனும் புலவரால் இயற்றப் பெற்ற கோணேசர் கல்வெட்டு மற்றும் திரிகோணாசலபுராணம், திருகோணாசலவெண்பா, திருக்கரசை புராணம் ஆகிய மரபுவழி இலக்கியங்கள் திருக்கோணேஷ்வரத்தின் பெருமைகளை எடுத்துக்கூறுபவை. இவை 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதை பல ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளின் மூலம் நிறுவியுள்ளனர். 17 ஆம் நூற்றாண்டை திருமலை இலக்கியத்தின் எல்லையாகக் கொண்டாலும் இவற்றின் தோற்றம் முன்னைய காலத்திலிருந்தே தொடங்குகிறது.

18ம் நூற்றாண்டில் திருகோணமலையில் எழுந்ததாகக் கருதப்படும் திருக்கரைசைபுராணம், சித்திரவேலாயுதர் காதல், கோணமலை அந்தாதி என்பன முன்னைய காலப் புராணங்களின் தொடர்பரம்பரைப் பாடுகளின் பிறப்புக்களாக, திருமலையிலுள்ள ஆலய வரலாறுகளையும் அவை சார்ந்த முறைகளையும், சம்பவங்களையும், நம்பிக்கை மற்றும் மரபுகளையும் எடுத்து சொல்பவையாக காணப்படுகின்றன.

புராண இதிகாச இலக்கியங்கள் தோன்றிய 17ம், 18ம் நூற்றாண்டை தொடர்ந்து மறுமலர்ச்சி நூற்றாண்டென கூறப்படும் 19ம் நூ ற்றாண்டின் மாற்றங்கள், இலக்கிய வளர்ச்சிகள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியதைவிட திருகோணமலைப்பிதேசத்தின் கலை இலக்கியப்போக்கிலும் சமூக மரபு சார்ந்த விடயங்களிலும் கனதியான மாற்றங்களை கொண்டு வந்ததற்கு பல ஆதாரங்களுண்டு.

எனவேதான் 19ம் நூற்றாண்டின் மாற்றங்கள் நேரடியாகவே திருகோணமலைப்பிரதேசத்தில் கொண்டுவந்துள்ளது. இந்த மாற்றங்களையும் வளர்ச்சியையும் உடனடியாக தெரிந்துகொண்டவர்களாக திருக்கோணமலை அறிஞர்களாகிய திரு. தி.த.கனகசுந்தரம்பிள்ளை, அவருடைய சகோதரரான பண்டிதர் தி.த. சரவணமுத்துப்பிள்ளை ஆகியோரை குறிப்பிடலாம்.

19 நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய மாற்றம் இவர்களிடமிருந்துதான் ஆரம்பிக்கிறது என்று கூறக்கூடிய அளவுக்கு இவர்களுடைய பணி காணப்படுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டை ஈழத்தவர்களின் காலம் என சுட்டிக்காட்டும் அளவிற்கு இவர்கள் இருவருடைய இலக்கியப்பணியும் ஏனைய ஈழத்து தமிழ் அறிஞர்களின் பங்களிப்பும் முக்கியம் பெற்று காணப்படுகிறது.

நவீன வரவுகள் எனப்படும் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், மெல்லிசை எனும் வடிவங்கள் தமிழகத்தில் காலூன்றத் தொடங்கிய அதே காலப்பகுதியில் திருக்கோணமலையிலும் அவை வளரத் தொடங்கியதற்கு ஆதாரமாக தமிழின் மூத்த நாவல்களான பிரதாப முதலியார் சரித்திரம், (1879) கமலாம்பாள் சரிந்திரம் (1896) எழுந்த அதே முன்பின்னான காலப்பகுதியில் திருகோணமலை அறிஞர்கள் ஆக்கித் தந்தவையே ஊசோன்பாலந்தை (1891), மோகனாங்கி (1895) ஆகிய இரு நாவல்களும்.

திருக்கோணமலையைச் சேர்ந்த எஸ். இன்னாசித்தம்பி, பண்டிதர் சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் இவ்விரு நாவல்களையும் படைத்துள்ளனர்.

தமிழின் மூத்த நாவல்களான பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் ஆகிய நாவல்கள் போலவே திருக்கோணமலை அறிஞர்களால் எழுதப்பட்ட இவ்விரு நாவல்களும் சரித்திர சான்றுடைய பாத்திரங்களையும் சம்பவங்களையும் வைத்து பின்னப்பட்டுள்ளது. கல்கி, அகிலன் சாண்டிலியன் போன்ற இலக்கிய வல்லுனர்கள், சரித்திர நாவல்களை எழுதுவதற்கு முன்பே திருக்கோணமலையை சேர்ந்த அறிஞர்கள் சரித்திர நாவல்களை எழுதியது ஆச்சரியம் தருகின்ற வரலாற்று ஆதாரங்களாகும். தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல் என்ற பெருமையை மோகனாங்கி பெறுகிறது.

ஊசோன்பாலந்தை என்ற நாவலானது போர்த்துக்கீச நெடுங்கதையொன்றை ஆதாரமாகக் கொண்டதாகவும், அதே போன்று தஞ்சை திருச்சி நாயக்கர் பரம்பரையை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்ட வரலாற்று நாவலாக மோகனாங்கி நாவலும் காணப்படுகிறது.

இவ்விரு நாவல்களும் எழுந்த காலத்திலிருந்து சுமார் 60 வருட காலம் திருகோணமலையில் நாவல் எழுவதற்கரிய வாப்பில்லாமல் போய்விட்டதோ என்னவோ இந்த இடைவெளியை நிரப்பியவர் வ.அ. இராசரத்தினம் இவர் 1956ம் ஆண்டு எழுதிய கொழுகொம்பு என்ற நாவலே மோகனாங்கி நாவலுக்குப்பின் திருமலையில் எழுந்த நாவலாகும்.

மூதூர் கிராமிய மணம் கமழும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் ஆதாரமாக வார்த்து வ.அ. கொழுகொம்பு நாவலைப் படைந்துள்ளார். "எனது கிராமத்து மாந்தர்களை கதாபாத்திரமாககொண்டு என்னால் படைக்கப்பட்ட முதல் நாவல் இதுதான். அதுவே அதன் பெருமை என அவர் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்பு வ.அ. எழுதிய துறைக்காரன் (1959) வெளிவந்துள்ளது. வ.அ. ஐந்து நவால்களையும் மூன்று குறுநாவல்களையும் ஈழத்து இலக்கழயத்துக்கு தந்துள்ளார்.

பண்டிதர் தி.த.சரவணமுத்துப்பிள்ளை பரம்பரையில் வந்த ந.பாலேஸ்வரிஎன்பார் 1966 ஆம் ஆண்டு சுடர்விளக்கு என்னும் நாவலை படைத்ததுடன் நாவல் இலக்கியத்தின் புதிய பிரவாகமாக பாலேஸ்வரி பார்க்கப்பட்டார். இவர் 12 நாவல்களுக்கு மேல் எழுதி சாதனைப் படைத்த பெண் படைப்பாளி ஆவார். இவருக்குப்பின் 1973ல் க.அருள்சுப்பிரமணியம் எழுதிய அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்ற நாவல் திருகோணமலை எழுத்தாளர்களை தேசிய நிலைக்கு கொண்டு சென்றது.

திருக்கோணமலையில் நவீன தமிழ்க்கவிதை போக்கொன்று முளைக்கொள்ளத் தொடங்கிய காலம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இந்த முனைப்புக்கு காரணமாக இருந்தவர்கள் பலர். வே. அகிலேசபிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை, தம்பையாப்பிள்ளை, தி.த.பண்டிதர் சரவணமுத்துப்பிள்ளை, தம்பலகமம் அ.அழகக்கோன், மா.முத்துக்குமாரு புலவர், சட்டம்பி தம்பையா, சு.தம்பையாபிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் மரபுவழி இலக்கிய வல்லுனர்களாக இருந்த போதிலும் நவீன போக்கை ஆதரித்தவர்களாக காணப்பட்டார்கள்.

மறுமலர்ச்சிக் கவிதை மரபொன்று பாரதியுடன் பிறப்பெடுத்த காலத்தில் வடக்கே நாவற்குழியூர் நடராஜன், அ.ந.கந்தசாமி, சோ. நடராஜா மஹாகவி போன்றவர்கள் நவீக கவிதைகளை எழுதிய அதே சமச்சீரான காலப்பகுதியில் கிழக்கில் நவீன போக்குக்கு அமைவாக கவிதை எழுதியவர்களில் கிண்ணியாவைச் சேர்ந்த அண்ணல் (1930-1974) பிரதானமானவராக கணிக்கப்படுகிறார்.

1945ம் ஆண்டு முதல் தன்னையொரு கவிஞராக அடையாளப்படுத்திக்கொண்ட அண்ணல் எழுதிய கவிதைகள் 1964ல் அண்ணல் கவிதைகள் என்ற தலைப்பில் வெளியிப்பட்டது. வரது கவிதைகளில் தமிழ்த் தாகமும் வாலிப கனவுகளும் சமய நெறிகளும் விரவிக்காணப்பட்டன. காணப்பட்டன. அதே காலப்பகுதியில் தர்மு சிவராமு என்ற கவிஞரின் வருகை (1939-1997) தமிழ் நவீன கவிதைப் போக்கை புதிய பரிமாணத்துக்கு கொண்டு சென்றது.

கவிஞர் அண்ணலைத் தொடர்ந்து சற்று பிந்திய காலத்தில் திருக்கோணமலைக் கவிராயர் (1930 -1990) தாமரைத்தீவான், கழகப்புலவர் பெ.பொ. சிவசேகரம், கவிஞர் ஈழவாணன் போன்றவர்களின் வருகை திருக்கோணமலையின் நவீன கவிதைக்கு வளம்சேர்க்க தொடங்கியது.

இவர்களில் தாமரைத்தீவானின் பங்களிப்பு கணிசமான முக்கியத்துவம் கொண்டதாக மதிக்கப்படுகிறது. 1932ல் ஆலங்கேணிக்கருகிலுள்ள தாமரைக்கேணியில் பிறந்த தாமரைத்தீவான் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை எழுதிக்கொண்டேயிருக்கிறார். 1992 இவரது கீறல்கள் என்ற கவிதைத்தொகுதி முதல் முதல் அச்சு வடிவம் பெற்றது தொடர்ந்து (புதிய) எட்டுத்தொகை கவிதைத்தொகுதி வரை. சுமார் 50 மேற்பட்ட கவிதை தொகுதிகள் வெளிவந்துள்ளன. பாரதி பாரதிதாசன் வள்ளுவன் கம்பன் மற்றும் சங்க இலக்கியங்களின் கருத்துக்களை அள்ளித்திரட்டி அழகுமிளிர பாடுவதில் வல்லவரான தீவான் நையாண்டிக்கருத்துக்களை நறுக்கு தெறித்தாற்போல் பாடவல்லவர். மரபுக் கவிதைகள் மீது பற்றுக்கோடும் ஆற்றலும் கொண்ட தாமரைத் தீவான் கவிதைகளில் தமிழ்ப்பற்றும் சமூக தரிசனமும் பரவிக் கிடக்கும்.

திருக்கோணமலை பிரதேசத்தின் ஆரம்பகால சிறுகதைத்துறையின் வளர்ச்சியை நோக்கின் ஈழத்தின் வடக்கே சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன், சிவபாதசுந்தரம் போன்றோர் (1930ம் ஆண்டுக்குப்பின்) இவ் வடிவத்தை ஈழத்துக்கு அறிமுகம் செய்தபோதும் அத்தகையதொரு முயற்சிகள் இதே காலப்பகுதியில் திருக்கோணமலையில் மேற்கொள்ளப்பட்டதற்கு ஆதரமெதுவமில்லை.

1950ம் ஆண்டுக்குப்பின் ஈழத்து சிறுகதை முன்னோடிகள் என்ற வகையில் செ.கணேசலிங்கம் டொமினிக்ஜீவா, கே.டானியல், எஸ்.பொ.இநீர்வை பொன்னையன் போன்றோர் சிறுகதைத்துறைக்குள் நுழைந்த காலத்தில் திருக்கோணமலையின் சிறுகதை முன்னோடியாக திகழ்கிறார். வ.அ.இராசரத்தினம். (1925-2001) இவரை ஈழத்தின் புதுமைப்பித்தன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு திருமலையின் சிறுகதை வரலாறு இவரிடம் இருந்துதான் ஆரம்பமாகிறது. 1948ம் ஆண்டு தினகரனில் வெளிவந்த மழையால் இழந்த காதல் சிறுகதை மூலம் இத்துறைக்குள் நுழைந்த வ.அ. தோணி (1962) என்ற தனது அற்புதமானபடைப்பின் மூலம் திருகோணமலைப்பிரதேச இலக்கியப்படைப்புக்களை உலகத்தரத்துக்கு கொண்டு சென்றார் என்று கூறப்படுகிறது.

இவருக்கு பின்னைய தலைமுறையாக திருக்கோணமலையில் தர்மு சிவராமு, ந.பாலேஸ்வரி, க.சா.அரியநாயகம், தி.அரியநாயகம், த.பி. சுப்பிரமணியம் ராயப்பு போன்றோர் இத்துறைக்கு வளம் சேர்க்க வந்தார்கள். இதில் தர்மு சிவராமு ஒருசில சிறுகதைகளை எழுதியபோதும் அவரின் நாட்டம் கவிதைத்துறையாகவே இருந்தது. இதேவேளை பின்னாளில் தினபதி சிந்தாமணி பத்திரிகைளின் பிரதம ஆசிரியராக பணிபுரிந்த திருகோணமலையில் பிறந்த எஸ்.டி. சிவநாயகம் சுதந்திரனில் 1952 எழுதிய சோமாவதி எனும் சிறுகதை (28.12.1952) திருகோணமலையை அடையாளப்படுத்தும் இன்னொருசிறுகதையாக அமைந்து.

ந.பாலேஸ்வரி இலக்கியப்பிரவேசம் அவர் 1957ல் தினகரன் பத்திரிகையில் எழுதிய தெய்வம் என்ற சிறுகதையுடன் இலக்கியப்பணி ஆரம்பமாகிறது. இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி 1973ல் சுமைதாங்கி என்ற தலைப்பில் வெளிவந்தது. தெய்வம் பேசுவதில்லை (2000) இவரது இரண்டாவது தொகுதியாகும்.

திருக்கோணமலையின் நவீன நாடக மரபுகள், நாவல்துறை போல் சற்று மாறுபட்ட முறையில் 19ம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றது.

மரபுவழித் தன்மை கொண்ட கூத்துக்களும், விலாசங்களும் மிக நீண்ட காலமாக திருக்கோணமலை பிரதேசத்தில் வளர்ந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். குறிப்பாக 18ம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்தே கிராமப்புறங்களிலும், நகரமையப் பகுதியிலும் ஆடப்பட்டு வந்துள்ளதை பல்வேறு ஆதாரங்களின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

**(தொடரும்...)**

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 52)*


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

இதற்கு வானதி 'நான் பொன்னியின் செல்வரைப் பார்க்கப் போகிறேன் அவரிடம் தான் நான் செல்வேன்' என்றாள். அவவேளை சோதிடர், 'எல்லோரும் வெளியேறுங்கள்' என்று பீதியுடன் சொன்னார். அப்பொழுது காவேரிக் கரை உடைந்து நீர் வெள்ளம் சுவரைப் போல் நகர்ந்து வருவதைக் கண்டனர். உடனே சோதிடரைப் பின் தொடர்ந்தனர். எல்லோரும் சென்று அம்மன் கோவில் மண்டபத்தின் மீது ஏறிக் கொண்டனர். அப்பொழுது வானதி மட்டும் தண்ண ீரில் விழுந்து விட்டாள் அவளை வெள்ளம் அடித்துச் சென்றது. அவள் சோதிடர் வீட்டுக் கூரையை எட்டிப் பிடித்து அதில் மிதந்து கொண்டிருந்தாள். சோதிடர் சீடர் படகு கொண்டு வந்து அவளைக் காப்பாற்றுவான் என்று எண்ணி எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் அவனை நீண்ட நேரமாகக் காணவில்லை குந்தவை பெரும் மனக் கலக்கம் கொண்டாள். சோதிடர் வீட்டின் கூரையும் நகர்ந்து செல்லத் தொடங்கியது. குந்தவை பதட்டத்துடன் 'திருமலை உன்னால் வானதியைக் காப்பாற்ற முடியுமா?' என்றாள். அதற்கு திருமலை, 'தேவி அபாயமான நேரம் நிதானம் வேண்டும் உதவி செய்கிறேன் உயிரைக் காக்கிறேன் என்று சொல்லி சிந்திக்காது செயலில் இறங்குவது மடமை. இந்த சூழலில் செய்யக் கூடிய காரியத்தை செய்யலாம் செய்ய முடியாத காரியத்திற்கு பொறுமை காக்க வேண்டும் தேவி தாங்கள் யாவும் அறீவீர்' என்றான்.

அப்பொழுது பூங்குழலி 'அதோ படகு வருகிறது ஆனால் அவன் வரும் வேகத்தில் வானதியைக் காப்பாற்றுவது என்பது பொய். எனக்கு அனுமதி கொடுங்கள் நான் நீந்திச் சென்று படகை விரைவாக அடைந்து வானதியைக் காப்பாற்றுகிறேன்' என்றாள். அதற்கு குந்தவை 'நீ படகு எடுத்துச் சென்றால் வானதி உன்னுடன் வரமாட்டாள்' என்றாள். அப்பொழுது சோதிடர் 'தேவி கொடும்பனார் இளவரசியின் ஜாதகப் பிரகாரம் அவருக்கு இன்று பெரிய கண்டம் வர வேண்டும் இளவரசி பிழைப்பாள் நான் சொல்லி இருப்பதெல்லாம் நிறைவேறும் என் சோதிடம் பலிக்கும்' என்றார். அவ்வேளை பூங்குழலி வெள்ளத்தில் பாய்ந்து படகை நோக்கி நீந்தத் தொடங்கினாள்.

நாகை பட்டனத்தில் இருந்து புறப்பட்ட இளவரசர் அருள்மொழிவர்மர் திருவாரூர் வந்தடைந்தார். அங்குள்ள மக்கள் அவருக்கு இராஜரீக வரவேற்பு அளித்தனர். மக்கள் திரள் திரளாக வந்தார்கள் அங்குள்ள வீடுகளின் முகப்புகள் யாவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சோழர் மாளிகையும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இளவரசருக்கு மட்டுமன்றி அவருடன் வரும் திரளான மக்களுக்கும் சோழ மாளிகையின் அதிகாரிகள் விருந்தளித்தார்கள் திருவாரூர் மக்களின் அன்பை நினைத்து பெருமிதம் கொண்டனர். ஆனால் தஞ்சை செல்வதன் முக்கியத்துவத்தை நினைத்து வருத்தம் கொண்டனர். தஞ்சைக்கு மேற்கே பலமான மழை பெய்த படியால் காவேரியிலும் கொள்ளிடத்திலும் அவற்றின் கிளை நதிகளிலும் பெரு வெள்ளம் வந்து பல இடங்களில் கரை உடைத்துக் கொண்டதாகவும், எங்கும் ஒரே வெள்ளக் காடாக உள்ளதால் தஞ்சை பயணம் தடைப்பட்டிருப்பதால் எப்படி என் தந்தையைப் பார்ப்பது? பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளின் சூழ்ச்சி பழுவேட்டரையர்களின் அநீதியான நடவடிக்கை அனைத்தையும் எப்படி வெளிப்படுத்துவது? என்று எண்ணினார். எந்தத் தடை வந்தாலும் நாளை தஞ்சை புறப்பட்டே ஆக வேண்டும் என்று எண்ணி யானைப் பாகனை அழைத்தார். யானைப் பாகன் அங்கு இல்லை படகோட்டி முருகையன் அங்கு வந்தான். இளவரசர் காலில் வீழ்ந்து வணங்கி தன் துயரத்திற்கான காரணத்தையும் கூறினான். 'நாகை பட்டினத்தில் என் மனைவியின் கூக்குரலால் தாங்கள் வெளிப்பட்டீர்கள் பின்னர் நான் என் மனைவியிடம் இருந்து பிரிந்து விட்டேன். திருவாரூர் வந்து சேர்ந்து அவளும் இங்கு வந்திருக்கலாம் என்று எண்ணி அவளைத் தேடினேன் அப்பொழுது இளவரசர் ஏறிவந்த யானையின் யானைப் பாகனையும், என் மனைவியையும் தெரு சந்தின் முனையில் கண்டேன். அங்கு இன்னுமொரு மனிதனும் அவர்களுடன் இணைந்து கொண்டான் அவன் மந்திரங்களை உச்சரித்தான் இவர்கள் ஊரைத் தாண்டி வாய்க்கால் வயல் வரப்புகள் வழியாக சென்று ஒரு மயானத்தை அடைந்தனர். அந்த மந்திரவாதி யானைப் பாகனை நோக்கி, உன் யானைக்கு மதம் பிடிக்கும் என்று பயம் காட்டினான். அதனால் யானைப் பாகன் பயந்து நான் செய்ய வேண்டியது என்ன என்றான். அதற்கு மந்திரவாதி உனக்கு மந்திரித்த கவசம் தருகிறேன் அதை அணிந்து போ அங்குசத்தை கொண்டு போகாதே எனக் கூறினான்' என்றான் முருகையன். ஆழ்ந்து சிந்தித்தார் இளவரசர். இது பாண்டிய ஆபத்துதவிகளின் சதியா? அல்லது பழுவேட்டரையர்களின் உத்தேசமா? எப்படி இதில் இருந்து தப்பி தஞ்சை செல்வது என்றபடி துக்கத்தில் மூழ்கினார். மறுநாள் காலை பயணத்திற்கு ஆயத்தம் செய்தார் யானையருகில் வந்தார் மதம் பிடிக்கும் எந்த அறிகுறியும் யானையிடம் காணப்படவில்லை. 'எனவே யானைப் பாகன் எங்கே?' என்று கேட்டார் அவனும் பெரும் சனக் கூட்டம் வழிவிடவே அங்குசத்துடன் வந்தான். யானையின் தும்பிக்கையைத் தொட்டான். உடனே யானை அவனை சுழற்றி தூரத்தில் எறிந்தது மக்கள் பீதி கொண்டு யானைக்கு மதம் பிடித்து விட்டது என்று கத்திக் கொண்டு சிதறி ஓடினர். இளவரசர் 'இவன் உண்மையாக யானைப் பாகன் அல்ல ஏதோ சூழ்ச்சி செய்ய வந்திருக்க வேண்டும் அதனால் தான் யானை அவனை தூக்கி எறிந்தது சனங்கள் சிதறி ஓடுகிறார்க்ள நான் தஞ்சைக்குப் போக வேண்டும் இந்த சந்தர்ப்பத்தில் நான் என்ன செய்ய முடியும்' என்றபடி தாவி யானை மீது ஏறினார். அதன் காதில் ஏதோ சொன்னார் யானை பிய்த்துக் கொண்டு கிளம்பியது பிளிறிக் கொண்டு விரைவாக நடந்தது. பின்னர் ஓடியது நாம் சந்தர்ப்பங்களைத் தேடிப் போக வேண்டும் அல்லது வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும் இல்லை சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். இவை வெற்றியின் பாதைக்கு எம்மைக் கொண்டு சேர்க்கும் முயற்சி! வெற்றியை பெற்றுத் தரும். யானை ஓடியது தஞ்சைச் சாலை நோக்கி ஓடியது. அப்பொழுது இளவரசர் மக்கள் தன்னைப் பின் தொடராமல் இருக்கும் பொருட்டு வட மேற்குத் திசையில் திருப்பினார். பழையாறை கண்டு தம் தமக்கை குந்தவையைப் பார்துவிட்டுப் போகலாம் என்று எண்ணினார். வயல்கள், வரம்புகள், வாய்க்கால்கள், நதிகள் அவற்றின் உடைப்புக்கள் யாவற்றையும் கடந்து யானை ஜாம் ஜாம் என்று சென்றது. இளவரசரும் உற்சாகம் கொண்டார். சாதிக்க பிறந்த நான் சாதித்தே ஆக வேண்டும் என்பது போல் உணர்ந்தார். முருகையன் இளவரசர் யானையில் ஏறிப் புறப்படும் மட்டும் அங்கு நின்றான். பின்னர் யானைப் பாகன் தூக்கி எறியப்பட்ட இடத்திற்கு விரைந்து சென்றான். அந்த யானைப் பாகன் மாளிகைக்கு சற்றுத் தூரத்தில் நாடெங்கும் புகழ் பெற்ற கமலாலயம் என்னும் தடாகத்தில் இருந்து வெளியே வந்தான். முருகையனும் அவனை அடையாளம் கண்டு கொண்டான். நேற்று இரவு தன் மனைவியுடனும் இளவரசரின் யானைப் பாகனுடனும் உரையாடிய மந்திரவாதி கோபத்துடன் 'எங்கே யானைப் பாகன் எங்கே என் மனைவி? என்று கத்தினான். அதற்கு மந்திரவாதி பதில் சொல்லவில்லை யானைக்கு மதம் பிடித்து உனக்கு பைத்தியம் பிடித்தது என்று கூறி நழுவிச் சென்றான். அவனைத் தேடிக் கொண்டு முருகையன் சென்றான் இறுதியாக இளவரசியின் யானைப் பாகனைக் கண்டு பிடித்தான். அவன் தன்னை இவர்கள் கட்டிப் போட்டுவிட்டு அங்குசத்தை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள் என்று கூறினான். பின்னர் மாளிகைக்கு திரும்பி வந்து மக்களிடம் நடந்தவற்றை சொன்னார்கள் மக்கள் ஆத்திரத்துடன் பழுவேட்டரையர்களைத் திட்டினர்.




யானை மீது சென்றது இளவரசரே அவர் மதம் பிடித்த யானையிடம் இருந்தது எங்களைக் காப்பாற்றவே அதில் சென்றிருக்க வேண்டும் அவருக்கு யானைகளுடனான பரிட்சயத்தையும், பழகும் வித்தையும் புரியும் அதனால் எம்மைக் காப்பாற்றினார்' என்றான். வானதி சோதிடர் வீட்டுக் கூரையைப் பிடித்துக் கொண்டு காவேரி நதியில் நுழைந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டும், சில சமயம் வேகமாக அடித்துக் கொண்டும் நீர் சுழல்களில் சுற்றிச் சுற்றியும் சென்றாள். இதே வேளை பூங்குழலி சோதிடர் சீடருடன் படகு வலித்துக் கொண்டு வானதியைத் தேடினாள். வானதி இப்படி சுற்றி சுழன்ற போது ஒரு படகு வருவதைக் கண்டாள். அது பூங்குழலியாய் இருக்கலாம் தனக்காக குந்தவை அவளை அனுப்பிருப்பாள் என்று நினைத்தாள் ஆனால் அவளுக்கு எத்தனை கர்வம் இளவரசர் மேல் எத்தனை உரிமை கொண்டாடுகிறாள். அவர் உயிரைக் காப்பாற்றியது உண்மை தான் ஆனால் உரிமை கொள்வது நியாயமா? இப்பொழுது என்னைக் காப்பாற்ற வருகிறாள் அதற்கு இடம் கொடுத்தால் அவள் கர்வம் அதிகரிக்கும் சோதிடர் கூறியது போல் இளவரசருக்கு பல கண்டங்கள் உண்டுதான். ஆனால் அவர் அந்தக் கண்டங்களில் இருந்து தப்பி உலகை ஆழ்வார் என்று எண்ணியபடி சுற்றுமுற்றும் பார்த்தாள். அந்த இடம் திருநல்லம் என்று தெரிந்து கொண்டாள் இவ்விடமுள்ள சோழர் மாளிகையில் கண்டராதித்தர் மனைவி செம்பியன் மாதேவியை சந்திக்க நான் என் அக்கா குந்தவையுடன் வந்ததுண்டு அங்குள்ள அந்தத் தோட்டத்தில் அன்று நடந்த சம்பவம் மனதைவிட்டு நீங்காது உள்ளது! அது மறக்க முடியாத நிகழ்வானது. அந்தநாள் ஞாபகம் அவள் நெஞ்சில் வந்துபோனது. கொடும்பனார் இளவரசி வானதி குந்தவையுடன் தங்கியிருப்பதற்கு சோழவள நாடு வந்தாள். அவள் சோழ நாட்டின் நீர்வளம் கண்டு திகைத்து நின்றாள். இந்த நீர் வளத்தால் நிறைந்திருந்த இயற்கை அழகைக் கண்டு குதூகலித்து கூத்தாடினாள். வண்ண வண்ண தாமரை மலர்கள் மலர்ந்திருக்க அதன் இலைகளில் நடனமாடும் தண்ணீர் குமிழ்கள் கண்டு தானும் குதித்து நின்றாள். கமல மலர்களையும், அல்லிப் பூக்களையும் சுற்றி கருவண்டுகள் சுழன்று ஆடிப் பாடி பரவசம் அடைவதைக் கண்டு பொழுது போவது தெரியாது பார்த்துக் கொண்டிருப்பாள் வானதி. இவள் குந்தவை பிராட்டியுடன் திரு நல்லம் சென்றிருந்தாள். அங்கு குந்தவையும், செம்பியன் மாதவியும் பேசிக் கொண்டிருக்கும் போது வானதி அந்த மாளிகையை ஒட்டிய தோட்டத்தில் சென்று பறவைகளின் இனிய இசையையும், பூக்களையும் கண்டு களிப்படைவாள். இலுப்பை பூக்களின் நறுமணம் இதமான மனநெகிழ்வை தந்தது. சற்றுத் தூரத்தே ஆற்று வெள்ளம் அந்த ஆற்று வெள்ளத்தில் செந்நிற மேனி கொண்ட ஆடவன்! வாலிப வயதில் வனப்பு மிக்க தோற்றம் கண்டு கவரப்பட்டாள். கண்கள் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அச்சம், மடம், நாணம் அவள் கண்களின் முன் நின்றது. அப்பொழுது அவள் கண்கள் மேலே பார்த்தது. 'ஐயோ ஐயோ' என்று கத்தினாள். அந்த வாலிபன் ஓடிவந்து அவள் முன்னின்றான். அவள் மேலே பார்த்துக் கொண்டு நின்றாள். அவனும் மேலே பார்த்தான் அங்கு ஒரு பறவைக் கூடு அதில் இரு குஞ்சுகள். அதற்கருகில் ஒரு காட்டுப் பூனை, குஞ்சுகளைக் கொன்று தின்று விட ஆயத்தமாக இருந்தது. தாய்ப் பறவையும், தந்தைப் பறவையும் அந்த பூனையை எதிர்த்துப் போராடின. அதைக் கண்டு நிலத்தில் உள்ள கல் ஒன்றை எடுத்து குறி பார்த்து பூனையை தாக்கினான் அந்த வாலிபன். காட்டுப் பூனை பாய்ந்தோடியது ஆனாலும் பறவைக் கூடு ஆட்டம் கண்டது.

அந்தரத்தில் தொங்கியது வானதியின் பார்வை அகலவில்லை அனுதாபம் கொண்டு நின்றாள். அந்த வாலிபனோ 'பெண்னே இங்கே நில் குருவிக் குஞ்சு விழுந்தால் உன் சேலைத் தலைப்பால் பிடித்துக் கொள் இதோ ஒரு நொடியில் திரும்பி வருகிறேன்' என்று கிளம்பிப் போனான். மரங்கொத்திப் பறவைகள் பீதியுடன் அலறிக் கொண்டிருந்தன. நடந்து சென்ற வாலிபன் யானை மீது வந்தான். யானையில் இருந்தபடி பறவைக் கூட்டை சரி செய்தான் தாய்ப் பறவையும், தந்தைப் பறவையும் மகிழ்ச்சி கீதம் பாடின. மனநிறைவுடன் அந்த பெண் எங்கே என்று தேடினான். அப்பொழுது அவள் குளத்தின் படிக் கட்டில் அமர்ந்திருந்தாள். கலகல என்று சிரித்தாள். அப்பொழுது அந்த வாலிபன் அங்கு சென்று, 'என்ன இத்தனை பலமான சிரிப்பு' என்றான். அதற்கு அவள் 'பூனையோடு சண்டையிட யானை மேல் வந்தாய் அல்லவா?' என்றாள். அதற்கு அந்த வாலிபன் 'உன் கூக்குரலால் புலியோ என்று பயந்துவிட்டேன்' என்றான். 'அது என்ன புலிக் கொடி பறக்கும் சோழ நாட்டின் புலியைக் கண்டு என்ன பயம் நீ பாண்டிய நாட்டவளா?' என்றான். 'சரி நீ யார்?' என்றான் அந்த வாலிபன். வானதி, 'அது உனக்கு எதற்கு யானைப்பாகா மரியாதையாகப் பேசு' என்றாள் மீண்டும் 'யானைப் பாகா என்னை உன் யானையில் ஏற்றிப் போகிறாயா?' என்று கேட்க அவனும் 'உன்னை ஏற்றிக் கொள்கிறேன் என்ன கூலி தருவாய்?' என்றான். அதற்கு வானதி 'என் பெரியப்பாவிடம் சொல்லி உனக்கு கொடும்பனார் அரண்மனையில் யானைப் படைக்கு சேனாதிபதியாக்கச் சொல்கிறேன்' என்றாள். 'ஓகோ கொடும்பானார் இளவரசியா தாங்கள்? தங்கள் கொடும்பனார் அரண்மனையில் கொட்டாரத்தில் எத்தனையோ யானைகளும், யானைப் பாகன்களும் இருக்கிறார்கள் நான் எதற்கு?' என்று கூறி நடந்து சென்றான். இந்தச் சம்பவம், அவன் தோற்றம் வானதியின் உள்ளத்தில் பதிந்து விட்டது. அரண்மனைப் பெண்கள் எல்லோரும் இளவரசரை காண மிக்க ஆவல் கொண்டிருந்தனர். சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டனர். வானதியும் அவரைக் காண ஆவலாக இருந்தாள். ஆனால் சந்தர்ப்பம் உருவாகவில்லை அவள் பழையாறை வரும் நேரங்களில் அவர் அந்தப்புரம் வருவதில்லை இதனால் பொன்னியின் செல்வரைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை தன் தமக்கையை பார்த்துவிட்டு பொன்னியின் செல்வர் திருநல்லம் விட்டுப் புறப்பட்டு போகின்ற போது அன்று அரண்மனை மாடத்தில் நின்று பொன்னியின் செல்வரைப் பார்க்க நேர்ந்தது. அவள் கண்களை நம்ப முடியவில்லை தான் யானைப் பாகன் என்று எண்ணி அதிகாரத் தொனியில் ஏய் யானைப் பாகா! என்று அழைத்த அந்த வாலிபன் இளவரசர் அருள்மொழிவர்மர்! பக்கத்தில் நின்ற பெண்களை பலமுறை கேட்டுத் தெரிந்து கொண்டாள். உலகை ஆளப் பிறந்த அவரிடமா நான் இப்படி கீழ்தனமாக நடந்து கொண்டேன்? என்று அவமானம் அடைந்தாள். இதைப் பற்றி அவர் குந்தவையிடம் சொல்லவில்லை சொல்லிருந்தால் அவர் என்னிடம் கேட்டிருப்பார். அதில் ஒரு ஆறுதல் என்றைக்காவது ஒரு நாள் நான் அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அல்லாவிட்டால் என் உயிரை விட்டு விட வேண்டும். இளவரசரைக் காணும் பொழுதெல்லாம் ஓடி ஒளித்துக் கொண்டாள். பொன்னியின் செல்வர் ஈழத்திற்கு புறப்படும் போது குந்தவையின் தோழியர் எல்லோரும் தீபம் ஏற்றி நின்றனர் அப்பொழுது வானதியும் அங்கு நின்றாள். இளவரசர் அவள் அருகில் வந்ததும் அவள் பேச்சற்று விழுந்தாள். பொன்னியின் செல்வர் உலகை ஆள்வார் என்று பலரும் நம்பினர். அதை என் பெரிய தகப்பனார் பூரிவிக்கிரமகேசரியும் நம்பினார்.

*தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---







**சமர்ப்பணம்**

கொரோனா வைரஸ்சின்
கொடுந்தொற்றுக் காலங்களில்
சக மனிதர்களின் உயிர் காக்க போராடி
தமது இன்னுயிர்களை அர்ப்பணித்த
பல்லாயிரக்கணக்கான
மருத்துவர்க்கும், துணை
மருத்துவர்க்கும், செவிலியர்க்கும்,
அனைத்து மருத்துவத் துறை
சகல ஊழியர்களுக்கும்.

---

வாழ்தல் இனிது.

இடர்கள் இன்றி நோய்கள் இன்றி நீண்ட காலம் வாழ்தல் இனிது.

கனக்கும் செல்வமும் நூறு வயதும் வேண்டிய பாரதிக்கு கிடைத்தது வறுமைத் துயரும் குறைந்த ஆயுளுந்தான்.

ஆனாலும் மக்கள் மனங்களில் பாரதி சாகாது வாழுகிறான்.

எல்லோரும் போல நீண்டகாலம் வாழவே நானும் ஆசைப்படுகிறேன். போய்ச் சேர்ந்துவிடும் எண்ணம் இப்போதைக்கு இல்லை.

மரணவாசலின் திறப்பை நான் என்னோடு ஒளித்து வைத் திருக்கிறேன்.

மரணம் இயற்கையின் நியதி என்ற புரிதல் எனக்கும் இருக்கிறது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் என்னும் கொலையாளியுடன் போர்புரிந்துவரும் ஒரு நெருக்கடியான சூழலில் என் இதயத்துடன் நான் பேசும் இந்தச் சிறிய நூல் இலங்கை கலா லயம் பதிப்பகத்தின் முயற்சியால் வெளிவருகிறது.

யுத்த காலத்தில் பிறரைப்போல மரண விளிம்புகளில் இருந்து பலமுறை தப்பிய நான் என் இதய நோயிலிருந்தும் இன்றுவரை பலமுறை தப்பிப் பிளைத்திருக்கிறேன். 1991ம் ஆண்டிலிருந்து இன்றுவரை பன்னிரண்டு முறை கடுமையான தாக்கங்களுக்கு உள்ளாகி மீண்டெழுந்திருக்கிறேன்.

மருத்துவ விஞ்ஞானமும் அதன் உயர் தொழில்நுட்பமும் என்னை இன்றுவரை வாழ வைத்திருக்கின்றது. எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை என்பதால் இதனை இவ்வாறு உறுதியாகச் சொல்ல முடியும்.

2020.ல் 98 வீதம் அடைப்பு கண்டுபிடித்து சிகிச்சை பெறப்பட்டது வரையான எனது இதயத்தின் கதையை முகநூல் நண்பர்களுடன் சிறுகச் சிறுக நான் பகிர்ந்து கொண்டேன்.

வாசிப்போர்க்கு ஓர் எச்சரிக்கையாகவும் பாதுகாப்பதற்கு ஓர் உந்து சக்தியாகவும் எனது அனுபவங்கள் இருக்கவேண்டும் என்பதுவே என் எண்ணம். முகநூலில் தொடராக வந்து கொண்டிருந்த வேளையில் அவுஸ்திரேலியாவிலிருந்து அக்கினிக்குஞ்சு இணையத் தளத்தில் இத்தொடரை விரும்பி வெளியிட்ட யாழ். எஸ். பாஸ்கர் அவர்களுக்கும் நான் இவ்வேளையில் நன்றி சொல்ல வேண்டும்.

முகநூலில் பதிவு செய்யப்பட்டவை இங்கு தொகுக்கப்பட்டு சிறிய நூலாக வருகிறது. இதனைத் தொகுப்பதற்கும் நூலாக்குவதற்கும் உழைத்தவாகளை இங்கு நினைப்பது எனது கடமையாகும்.

தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வுநிலை முகாமையாளர் க. கமலசேகரம், நீண்டகால நண்பர், பொறுப்பினைக் கையளித்தால் போதும், தன்னை அர்ப்பணித்துச் செய்து முடிக்கும் பண்பாளர்.

சட்டத்தரணி சோ. தேவராஜா, பல்கலைக்கழகத்திலிருந்து தொடரும் ஆத்மார்த்தமான நட்புக்குரியவர், பொதுவுடைமைத் தத்துவத்தில் நம்பிக்கையோடு உழைத்து வருபவர், எனது முகநூல் பதிவுகளை நூலுருவாக்க வேண்டும் என்று முனைப்பாய் நின்றவர்.

இலங்கை வங்கி ஓய்வுநிலை உதவி முகாமையாளர் அழ. பகீரதன், அளவான பேச்சும் அமைதியான சுபாவமும் அதிக செயற்திறனும் கொண்ட நண்பர்.


அட்டை ஓவியத்தினை வழங்கிய ஓவியர் ரி. சவுந்தர் அவர்கள், முற்போக்குச் சிந்தனையாளரும் சமூக சமத்துவத்துக்காய் உழைத்த செயற்பாட்டாளரும் ஆகிய திரு. தங்கவடிவேல் மாஸ்டரின் மகன் என்று மட்டுமே அறிந்திருந்தேன். ஓவியர் சவுந்தர் அவர்களை நான் நேரில் கண்டு பழகியதில்லை. அவருடன் முகநூல் நட்பு மட்டுமே. முகநூலில் அவரது உயிர்ப்பான ஓவியங்களையும் சிறந்த கட்டுரைகளையும் குறிப்பாக இசை சார்ந்த கட்டுரைகளையும் கண்டு நான் வியந்ததுண்டு. அவரிடம் என் நூலுக்கு முகப்பு ஓவியம் ஒன்று வேண்டும் என்று கேட்டபோது மறுப்பின்றி குறுகிய காலத்துள் வழங்கியமைக்கு நான் என்றும் அவருக்குக் கடப்பாடுடையேன்.

அணிந்துரை வழங்கிய இதய மருத்துவர் நடராஜா கங்காகரன் அவர்களை - கண்ணன் என்றுதான் நாம் அழைப்போம். அவரது சிறு பராயம் முதல் என்னை அவரும் அவரை நானும் அறிவோம். அவரது தந்தையார் திரு. நடராஜா பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த காலங்களில் நான் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தராகக் கடமையாற்றி இருக்கிறேன். நான் கொழும்பில் முதலில் மாரடைப்புக்கு ஆளான போது என்னை தமது இல்லத்தில் வைத்து பராமரித்த தலைவர் நடராஜா குடும்பத்தையும் சிறப்பாக அவரது துணைவியார் யோகம்மா அவர்களையும் இந்த வேளையில் நான் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

சிரேஷ்ட இதய நிபுணரான டாக்டர் கங்கா மருத்துவத் துறையின் இணைப் பேராசிரியராகவும், பிராந்திய மருத்துவ இயக்குநராகவும் பொறுப்பான உயர் பதவி-களோடு தனது மருத்துவப் பணியினை ஆற்றிவருகின்றார். மேலும் டாக்டர் கங்கா தற்போது அவுஸ்திரேலியாவின் வட எல்லையில் வாழும் பூர்வீகக் குடிகளின் சுகாதார நல மேம்பாட்டுக்காக பல்வேறு சேவைகளை வழங்கி வருவதனை நாம் சிறப்பாக இங்கு குறிப்பிட வேண்டும். அவரது அணிந்துரை இந்த நூலுக்குப் பெருமை சேர்க்கின்றது. அவருக்கும் எனது நன்றி. அதனைத் தமிழாக்கம் செய்த சட்டத்தரணி திரு. ச. ஜேசுநேசனுக்கும் நன்றி.

மேலும் இந்நூலினை அழகுற அச்சிட்ட ஜே. எஸ். பிறின்ரேஸ் நிறுவனத்தினர்க்கும், மொறிஸ் லிகான் அவர்களுக்கும், எனது கலை இலக்கிய முயற்சிகளுக்கு என்றும் துணையாக இருக்கும் தேசிய கலை இலக்கிய பேரவைக்கும், ஊக்கம் தந்த முகநூல் நண்பர்கள் அனைவருக்கும், அத்துடன் எனது ஆக்கங்களுக்கு என்றும் துணைநிற்கும் என் குடும்பத்தினருக்கும் எனது இதயம் நிறைந்த நன்றி.

இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால்தான் என்ன?
இது என் இதயத்தை நான் கேட்கும் கேள்வி.
என் கேள்வியின் நியாயங்களை இதனை வாசிக்கும்போது
நீங்களும் புரிந்து கொள்ளுவீர்கள் என்று நினைக்கிறேன்.
என் இதயம் இப்போது உங்களின் கைகளில்.



**வயிரமுத்து திவ்வியராஜன்**

றொறொன்ரோ, கனடா.
(416) 832-5230
thiviyarajah@yahoo.com

01

## உயிர் ஓசை

இப்போதெல்லாம் உன் போக்கு ஒரு விதமாய் இருக்கிறது. உன்னோடு வாழ்ந்தது போதும் என்று நினைத்தாயோ?

என் இதயமே நீ அவசரப்பட்டு என்னை விட்டு போய்விடவும் கூடும். அப்படி நீ போய் விட்டால் உன் கதையைச் சொல்வதற்கு வேறை ஆரும் இல்லை.

அதனால் உன்னைப்பற்றி நான் இப்போதே சொல்லி விடுவது நல்லது.

அம்மாவின் கருவறையில் நாலைந்து மாதங்களில் ஒரு சிறு பொட்டுப் புள்ளியாய் நீ உருவாகினாய்... ஐந்தாறு மாதங்களில் உன் 'டப் டிப்' தாளம் கேட்கத் தொடங்குகிறது.

அதுவே உன் இயக்கம். இந்தப் பிரபஞ்சத்தில் உன் இயக்கம் தொடங்கியது.

இயக்கம். மாறா இயக்கம்.

சராசரி ஒரு நிமிடத்தில் 60 தொடக்கம் 100 வரையான தாளம்.

ஒரு மணித்தியாலத்தில் 6000 வரையான தாளம்.

ஒரு நாளில் 144,000 வரையான தாளம்.

ஒரு ஆண்டில் 52,560,000 வரையான தாளம்.

இத்தனை ஆண்டுகளும் இடைவிடாது ஒலித்து வரும் அந்தத்தாளம் ஓர் இனிமையான தாளம். ஆனால் இப்போதெல்லாம் நீ ஏன் தாளம் மாறி ஒலிக்கிறாய் என்பதுதான் இப்போதுள்ள என் கவலை.

என் நினைவு தெரிந்த வரையில் நினைத்துப் பார்க்கிறேன்.

ஆறேழு வயதிருக்கலாம். உயிர் போவது போல் ஒரு நெஞ்சு வலி வந்து போகும்.

'அம்மா' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு இருக்க அம்மா பதறிப் போய் ஓடி வந்து தன் நெஞ்சோடு உன்னை அணைத்து நெஞ்சைத் தடவி விடுவதும் அதன் பின் உள்ளிச் சாறு வைத்து தருவதும் அதன் பின் கொஞ்ச நேரத்தில் அந்த வலி மறைந்து போவதும் நினைவில் வருகிறது.

சின்னஞ்சிறு வயதில் ஒளிச்சு பிடிச்சு விளையாடுதல், கிளித்தட்டு மறித்தல், வண்டிச் சில்லு உருட்டுதல், கிட்டி அடித்தல், மீன்களைப் போல் நீந்துதல், பூவரசுகள் வேப்ப மரங்களில் குரங்குகள் போல தாவித் திரிதல் என்று எல்லா விளையாட்டுக்களிலும் நீ ஆனந்தப்பட்டாய்.

விளையாட்டுத் தோழர்களுடன் போட்டி என்று வந்து விட்டால் வெற்றி வீரனாகி ஆனந்தம் தந்தாய் என் இதயமே.

கல்வியிலும் கலைத் திறன்களிலும் உடல் உழைப்பிலும் களைப் பின்றி இயங்கிய இதயம் நீ. அவ்வப்போது வெற்றிகளைக் கண்டு குதூகலித்தாய். தோல்விகளைக் கண்டு சில வேளை துவண்டு போனாய்.

ஆனாலும் நம்பிக்கையோடு உன் இனிய தாளத்தை ஒலித்துக் கொண்டே இருந்தாய்...

ஆண்டுகள் போக பருவங்கள் மாறுவது போல நீயும் உன் பருவங்களில் மாற்றங்களைக் காட்டினாய்.

இதயமே... நீ அப்போது இளம் பருவத்தில் - அந்த விடலைப் பருவத்தில் நுழைகின்றாய்.

இயற்கையை ரசித்தது போல எதிர்ப்பால் இதயங்களை அதிகம் ரசிக்கத் தொடங்கினாய்... ம்ம்...

பிறகென்ன...

---

02

## காதல் செய்வீர்

இதயமே, விடலைப் பருவத்தை நீ எட்டிய அந்தப் பொழுதுகளில் இவள்தான் அவள்தான் என்று சொல்ல முடியாத வகையில் சராசரி இதயங்களைப் போலவே அங்கலாய்த்த இதயம்தான் நீயும்.

ஆசையோடு பார்ப்பதும் கதைப்பதும்...
மீண்டும் காண வேண்டும் என்று நினைப்பதும் கண்டபோது ரசிப்பதுமாய்...
ரசித்தபின் அதை நினைப்பதும்...
நினைவினில் சுமப்பதுமாய்...
பாடசாலை வாழ்வும் கல்லூரி வாழ்வும் கடந்து போயின.

*காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம்*
*கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்*
*காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம்*
*கானம் உண்டாம் சிற்ப முதற் கலைகள் உண்டாம்*
*ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே*

பாரதியின் கவிதையில் பெரு விருப்பு கொண்டிருந்தாலும் பல்கலைக்கழக வாழ்வில் துணையாய் ஒருத்தியைத் தெரிந்திடும் துணிவிருந்தும் வீட்டின் சுமைகளால் நீ தவிர்த்து விட்டாய்.

வேலைத்தளங்களிலும் இதே கதைதான். சிங்களத்துச் சின்னக் குயில்கள் சில விரும்பினாலும் இதயமே உன்னை வென்றது ஓர் நடனக்கலை நங்கையின் இதயம்தான்.

பாடல், ஆடல் என ஆனந்தித்தாய்.

அடுத்த கட்டம் அப்பனாதலும் அம்மையாதலும்தானே.

துணையின் வயிற்றில் முதற் கருவில் உருவான சின்னஞ் சிறு இரட்டை இதயங்கள் மருத்துவர் தவறால் தவறிப்போக இதயமே நீ துவண்டு போனாய்...

தசாப்தங்கள் பல கடந்தும் ஆறாத் துயர். நெருப்புலையில் இட்ட இரும்புத் துண்டத்தினை இதயச் சுவரில் அறைந்து வைத்ததுபோல இன்னும் இருக்கிறது.

எங்கள் குடும்பம் செழிக்க வந்த முதல் இரட்டைக் குழந்தைகளை நாம் இழந்தோம்.

10 மாதங்கள் வயிற்றில் சுமந்தவள் அந்த இரட்டைக் குழந்தைகளைக் கண்ணாலும் காணவில்லை.

இரு குழந்தைகளும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு இறந்து கிடந்த காட்சியை யாழ் பொது வைத்தியசாலையின் அறையில் ஒரு தந்தையாய் நான் மட்டும் பார்த்துக் கதறினேன்.

அழுதுகொண்டு என் மனையாளின் கண்ணீரைத் துடைத்தேன்.

அந்த மருத்துவரைக் காசோடு போய் கண்டு கதைக்கும் காரியம் (Doctor's Private Consultation) அறிமுகமான காலம் என்பதைப் பின்னாலேயே தெரிந்து கொண்டோம்.

அதன் பின் அந்தத் துயரை எல்லாம் துடைத்துக் கொண்டு வாழ்வின் சங்கீதமாய் கீதம் பிறந்தாள்.

அந்த ஆனந்தத்தின் தொடர்ச்சியாய் ஆறாண்டுகளில், இசைத்திடும் இனிய கீர்த்தனமாய் கீர்த்தனன் பிறந்தான்.

குழந்தைகளின் வளர்ச்சியில் ஆனந்தம் யுத்த காலம்.
உயிர் பிடுங்கும் கொடிய பொழுதுகள்...
மரணங்கள்
உயிர் அச்சுறுத்தல்கள்
பாதுகாப்புத் தேடிய ஓட்டங்கள்...
பதுங்கல்கள், ஒழிப்புக்கள்
அவலங்கள், துயரங்கள்
தாக்கங்கள்,
இதயமே எல்லாவற்றையும் உறுதியாக நீ தாங்கிக் கொண்டாய்.
கருணை இதயம் நீ, காதல் இதயம் நீ, கடமை இதயம் நீ.

அதே வேளை மலை குலைந்தாலும் நிலை குலையா - வைரம்போல் உறுதி கொண்ட திடமான இதயமும் நீயேதான்.

ஆனால் உனக்கு திடீர் என என்ன நடந்தது?

**(தொடரும்...)**

மலேசிய மடல்

# இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் இளையராஜா??

## காய் நகர்த்தும் பாஜக-மோடி



நக்கீரன்


**கோ**லாலம்பூர், ஏப்.20:



2014 முதல் இந்தியாவின் பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி, 2024 பொதுத் தேர்தலில் மீண்டும் வென்று, மூன்றாவது முறையாக பிரதமராகி சாதனை புரிய நினைக்கிறார்.

இதற்கு ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கம் செலுத்தும் பாஜகவும் இசைவு தெரிவித்து விட்டதாகவேத் தெரிகிறது.

இந்தியாவை ஓர் இந்து நாடாக மாற்ற வேண்டும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் சிந்தாமல் சிதறாமல் நிலைபெற வேண்டும் என்பதுதான் பாஜக-வின் அடிப்படை உயிர்மூச்சு. இந்த இரு அம்சங்களையும் பார்ப்பனர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மோடி கச்சிதமாக கடந்த எட்டு ஆண்டுகளாக நிறைவேற்றி வருகின்ற நிலையில், ஒரு பெரிய அரசியலை பொதியவைத்து இன்னும் ஒரு சில மாதங்களில் இளையராஜாவை இந்தியாவின் அடுத்தக் குடியரசுத் தலைவராக்குவதற்கான முயற்சி முன்னெடுக்கப்படுவதாகத் தெரிகிறது.





சின்ன வயதிலேயே ஆர்.எஸ். எஸ். என்னும் ராஷ்டிரீய சுய சேவை சங்கத்தில் இணைந்து பயிற்சி பெற்ற மோடி, ஆர்.எஸ்.எஸ். கொள்கை-சிந்தனைக்கு தன்னை அற்பணித்தவர். அதனால்தான், இந்திய ஒன்றிய அரச வேலைவாய்ப்புகளில் பொருளாதார அடைப்படையில் பின்தங்கிய உயர்சாதிக் குடும்பங்களுக்கு 10% இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார் மோடி.

நேருவிடம் வாதாடி, பெரியாரின் போராட்டத்தை துருப்புச் சீட்டாகக் கொண்டு சமூகநீதி அடிப்படையில் இடஒதுக்கீட்டு சட்டத்தை உருவாக்கியவர் அண்ணல் அம்பேத்கர். அவரின் சிந்தனைக்கும் அவர் உருவாக்கிய சட்டத்திற்கும் வேட்டு வைக்கும் விதமாக உயர்சாதி மக்களில், அதாவது பிராமண குடும்பங்களில் 8 இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெரும் (ஏழைக்?) குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்வி-வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிப்பதற்காக மறைமுக ஒத்தாசை-ஒத்துழைப்பு வழங்கும்பொருட்டு மோடி அரசு தீட்டிய சட்டம்தான் பொருளாதார அளவில் பின்தங்கி உள்ள உயர்சாதியினருக்கு 10% இட ஒதுக்கீடு. இப்படி மோடி சட்டம் இயற்றி இருப்பது, அம்பேத்கரின் கொள்கைக்கு அடியோடு முரணானது.

ஆனால், இசை அமைப்பாளர் இளையராஜாவோ, மோடி, அம்பேத்கரைப் போன்ற தலைவர் என்கிறார் அம்பேத்கர் இன்று உயிருடன் இருந்திருந்தால், மோடியைப் பாராட்டி இருப்பார் என்று இளையராஜா சொல்லி இருப்பது பச்சையான இன துரோகம் அப்பட்டமான தமிழ்த் துரோகம்.

நலிந்த சமுதாயத்தைச் சேர்ந்த இளையராஜா, எப்படியோ தட்டுத் தடுமாறி அண்ணன் பாவலர் வரதராசன் மூலம் மேடை கண்டு, இசை அறிந்து, அப்படியே கோடம்பாக்கத்திலும் சாதித்துவிட்டார்.

அதனால், பொருளாதார கட்டமைப்பு என்பது இளையராஜாவைப் பொறுத்தவரை வலுவாக அமைந்துவிட்டது. இப்பொழுது அவருக்குத் தேவை, மேல்தட்டு மக்களைப் போன்ற பாவணையும் தோற்றமும்தான்.







தான் குடியிருக்கும் வீட்டில் இருந்து கோடம்பாக்கத்திற்கோ அல்லது இசையமைக்கும் மையத்திற்கோ அன்றாடம் பயணிக்கும் இளையராஜா, சென்னை நகர வீதிகளில் எத்தனையோ குடும்பங்கள் சாலையோரத்து குடிசையிலோ அல்லது கூடாரத்திலோ வசிப்பதைக் கண்டிருக்க முடியும்.

அப்படிப்பட்ட மக்களை அடையாளம் கண்டு, அவர்களின் குடியிருப்புக்கு ஏதாவது செய்வதற்கு மனம் வராத இளையராஜா, திருச்சி திருவரங்கத்தில் பள்ளிகொண்ட கோலத்தில் ரங்கநாதன் என்னும் பெயரில் திருமால் கொலுகொண்டிருக்கும் ஆலயத்தில் 14 அடுக்குகொண்ட புதிய கோபுரம் எழுப்பப்பட்டபோது, அதில், 11-ஆவது அடுக்குக்காக 11 லட்ச ரூபாய் கொடுத்தவர் இளையராஜா.

இளையராஜாவுக்கும் அந்த வைணவ தலத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஆனாலும், தன் பெருமையைக் காட்டிக்கொள்வதற்காக அப்படி செய்த இளையராஜாவை, அந்தக் ஆலயத்தின் கருவறைக்குள் விடுவார்களா?

இளையராஜா அவ்வாறு முயன்றால், அங்கிருக்கும் பார்ப்பன குருக்கள்களும் மற்ற பரிவாரத்தினரும் விரட்டி அடிப்பார்கள்.

அதைப்போல, காஞ்சி சங்கர மடத்திற்கு லட்சக் கணக்கில் நிதி அளித்தபொழுது, பிராமணர்கள் பேசுவதைப் போல பேச முயன்று, அவர்களின் இளப்பமான பார்வைக்கு ஆளானார் இளையராஜா.

இவ்வாறெல்லாம், தான் பிறந்து வளர்ந்த பண்ணைப்புர சூழலையும் சொந்த மக்களையும் மறந்து, அக்கிரகாரத்தின் பக்கம் தன் பார்வையை இளையராஜா செலுத்தத் தொடங்கி நீண்டகாலம் ஆகிறது.

இல்லாவிட்டால், தன் அம்மாவிடன் நினைவிடத்தையே சமஸ்கிருத வகுப்பு நடத்த அனுமதி அளிப்பாரா?

சம்பாதிக்க மட்டும் "அன்னக்கிளி உன்னைத் தேடுதே" என தமிழ்ப் பாடலும் தமிழ் மொழியும் தேவை சம்பாதித்தபின் வீட்டிலும் வீட்டு பூசனை அறையிலும் வாழ்க்கை முறையிலும் சம்ஸ்கிருதத்திற்கு முட்டுக் கொடுப்பது?

இது, தமிழன்னைக்கும் தமிழ் இனத்திற்கும் இளையராஜா செய்யும் பச்சையான துரோகம்.

இப்படிப்பட்ட இளையராஜாவைத்தான் மோடி இப்போது நாடி இருக்கிறார்.


மோடி பொதுவாக ஆள் பிடிப்பதில் வல்லவர் அதனிலும் மேலாக, பொய்யான பிம்பத்தை கட்டமைப்பதிலும் இணைய தகவல் சாதனைத்தை பிரச்சாரத்திற்காக வகையாகப் பயன்படுத்துவதிலும் மிகமிக தேர்ந்தவர்.

ஆனால், தமிழ் நாட்டில்தான் அவரின் முயற்சி எதுவுமே பலிக்கவில்லை ஆரம்பத்தில் தமிழக மக்களைப் பற்றி, குறிப்பாக வாக்காளர்களைப் பற்றி ஓர் இளப்பமான பார்வையும் மோடிக்கு இருந்தது எம்ஜிஆர், ஜெயலலிதா போன்ற திரை நட்சத்திரங்களின் பின்னால் அணிதிரளும் இந்தக் கூட்டத்தை எளிதில் வளைத்து விடலாம் என்ற எண்ணமும் இருந்தது.

அதன் அடிப்படையில்தான், 2014 பொதுத் தேர்தலின்போது தமிழ் நாட்டுக்கு பிரச்சாரத்திற்கு வந்த மோடி, நடிகர் விஜய்யை சந்தித்தார். அதன் நோக்கம் பலவாக இருந்தாலும், தலையாய நோக்கம், விஜய்யின் திரை ரசிகர்களைக் கவர்வதுதான்.

நட்சத்திர நாயகர் விஜய்யை சந்தித்தும் அதிரடி நாயகன் விஜயகாந்துடன் கூட்டணை அமைத்தும் ஒன்றும் ஆகவில்லையே என்று குழப்பம் அடைந்து, கடைசியில், தமிழ் நாட்டின் திராவிட-சமூகநல அரசியலுக்கு ஏற்ப காய் நகர்த்த ஆரம்பித்தார் மோடி.

அதன் வெளிப்பாடாகத்தான் இல.கணேசன் என்ற உள்ளூர் பிராமணத் தலைவர், ஆர்.எஸ்.எஸ். வகுத்த பெருந்திட்டத்தின்படி ஒரிஸாவில் இருந்து தமிழகத்துக்கு குடிபெயர்ந்த பார்ப்பன குடும்பத்தைச் சேர்ந்த எச்.ராஜா போன்ற தலைவர்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த தமிழிசை சௌந்தரராஜன், அருந்ததி சமுதாயத்தை சேர்ந்த எல். முருகன், ஆர்.எஸ்.எஸ். நிதி உதவியால் ஐ.பி.எஸ். அதிகாரியான அண்ணாமலை போன்றவர்களைக் கொண்டு தலைகீழாக நின்றுபார்க்கிறாது பாஜக.







மேலும், திமுக துணைப் பொதுச் செயலராக இருந்த வி.பி.துரைசாமி, தனக்கு நாடாளுன்ற மேலவை உறுப்பினர் பதவி கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் இருந்த நேரம் பார்த்து அவரின் சாதிக்காரனான எல்.முருகனை வைத்து பாஜக-விற்கு இழுத்தது அதன் தலைமை. சமூக நீதி மலர்ந்துள்ள தமிழகத்தின் மண்வாசனைக்கு ஏற்ப காய் நகர்த்த ஆரம்பித்தது பாஜக-வும் மோடி உள்ளிட்ட அதன் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும்.

அப்படி இருந்தும் தமிழகத்தில் பாஜக வளர முடியவில்லை.

காரணம் இதுதான் செய்வதெல்லாம் அப்பட்டமான தமிழ் துரோகம்!.

தமிழக மாணவர்கள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், வேளாண் குடிமக்கள், மீனவர்கள், வணிகர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு தமிழர்களுக்கும் கேடு விளைவித்துக் கொண்டு, சமஸ்கிருத மொழியை செல்லப் பிள்ளையைப் போல வளர்ப்பது, தமிழ் மொழியை சவலைப் பிள்ளை நிலைக்கு தள்ளுவது அப்படியே விவசாய நிலங்களை அழிப்பது என துணிந்து துரோகம் செய்துகொண்டே தேர்தல் பிரச்சார நேரத்தில் மட்டும் தமிழர்கள் தொன்மையான குடியினர் என்பது தமிழை செம்மொழி என்பது மேடையில் மட்டும் வணக்கம் தெரிவிப்பது என்றெல்லாம் பம்மாத்து வேலைகளைச் செய்தால், எப்படி தமிழர்கள் இந்தக் கட்சியை நம்புவார்கள்?.





திருக்குறளையும் திருவள்ளுவர் சிலையையும் மறைத்துவிட்டு, மேடையில் மட்டும் ஏதாவது ஒரு திருக்குறளை சொல்வது, ஐநா மன்றத்தில் கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் வரியை ஒப்பிப்பது, தமிழ் நாட்டுக்குரிய நிதியைக் கொடுக்காமல் நிர்மலா சீத்தாராமனைவிட்டு நாடாளுமன்றத்தில் ஔவையாரின் ஆத்திச் சூடியை சொல்ல வைப்பது; அம்பேத்கரின் கொள்கைக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டே அவரின் சிலைக்கு மாலையிடுவது என்றெல்லாம் கூத்துக்களை மட்டும் நடத்திக் காட்டினால் எப்படி தமிழர்கள் நம்புவார்கள்?

இப்பொழுது, பாஜக-விற்கும் மோடிக்கும் உண்மையிலேயே அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# தென்னிலங்கை போராட்டக்காரர்களுக்கு தமிழ் தாய்மார்களிடமிருந்து ஒரு செய்தி



அரச படைகளினால் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி கோரி இடைவிடாத போராட்டத்தை முன்னெடுத்து வரும் வடக்கு கிழக்கில் தமிழ் தாய்மார்கள் புத்தாண்டிலும் தமது பிரச்சாரத்தை கைவிடவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தொடர் போராட்டத்தின் 1881ஆவது நாளான புத்தாண்டு தினத்தன்று, வவுனியாவில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், இத்தருணத்தில் தமிழ் மக்கள் நீதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனின், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளனர்.

சிங்கள இளைஞர்களின் போராட்டங்களில் தமிழ் இளைஞர்கள் கலந்து கொண்டாலும் ஒற்றையாட்சியை மேலும் பலப்படுத்தும் வரையில் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை என அரச படையினரால் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

"கொழும்பில் சிங்கள இளைஞர்களின் போராட்டங்களில் தமிழ் இளைஞர்களும் இணைந்து கொள்வதால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. இது ஒற்றையாட்சியை பலப்படுத்தும்" என வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் எம்.ஆர்.ஜே.குமார் தெரிவித்துள்ளார்.

"கொழும்பில் உள்ள சிங்கள, தமிழ் மக்கள் ஒற்றுமையாக உள்ளனர், எனவே இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்களில் இருந்து விடுபடவே இதனை மேற்கொள்கின்றார்கள்".

நிதி நெருக்கடி மற்றும் உணவுப் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"இலங்கையின் எதிர்காலத்தை சர்வதேச நாணய நிதியம், அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானிக்கும். இலங்கையின் எதிர்காலம் அவர்களின் கைகளில் உள்ளது. தமிழ் மக்களுக்கான சுதந்திர நிர்வாக அலகுக்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நாடுகளுடனும் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்".

மலேசிய மடல்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு துயர வரலாறு!

## 31 நாள் உண்ணாநோன்பிருந்து மண்ணுக்காக உயிர்துறந்த மக்களைப் பெற்ற மகராசி



**நக்கீரன்**

**கோ**லாலம்பூர், ஏப்.20

ஒன்றல்ல் இரண்டல்ல் பத்து பிள்ளைகளைப் பெற்றெடுத்த மகராசி ஒருவர், 31 நாட்கள் தொடர்ந்து உண்ணாநிலை மேற்கொண்டு, கடைசியில் தன் இன்னுயிரை பிறந்த மண்ணுக்காக ஈகம் செய்தார்.

அவர்தான் அன்னை பூபதி.

தான் இழுத்த இழுப்பிற்கு இசைவு தெரிவிக்க மறுத்த பிரபாகரனையும் அவர் தலைமையேற்று வழிநடத்திய விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் நசுக்குவதற்காக அமைதிப் படை என்ற பெயரில் ரஜீவ் காந்தி இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பினார்.

அந்த இராணுவம், வியட்நாமில் அமெரிக்க இராணுவம் மேற்கொண்டதைப் போல தமிழ்ப் பெண்களின் மானத்தையும் கற்பையும் சூறையாடியதால், இலங்கை மண்ணில் இருந்து, குறிப்பாக தமிழ் ஈழத்திலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தி 1988 மார்ச் 19-ஆம் நாள் அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி சார்பில் நோன்பு தொடங்கிய பூபதியம்மாள், 31 நாட்கள் வரை வைராக்கியத்துடன் இருந்து ஏப்ரல் 19-இல், 56 வயதில் உயிர் துறந்தார்.







ஈழத் தமிழர் வரலாற்றில் ஏப்ரல் 19-ஆம் நாள், மறக்க முடியாத நாள் அதனால்தான் இன்றைய தினத்தை "தமிழீழப் பற்றாளர் நாள்" என ஆண்டுதோறும் தமிழீழ தாயகத்தில் அனுசரிக்கப்படுகிறது.

**நக்கீரன் -** Nakkeeran
013-244 36 24

(30ம் பக்கத் தொடர்ச்சி)

# இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் இளையராஜா??

## காய் நகர்த்தும் பாஜக-மோடி

அண்மையில் நடைபெற்ற 4 சட்டமன்றத் தொகுதிகள், ஒரு நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் பாஜக தோற்றுவிட்டது.

இத்தகைய சூழலில், 2024 மார்ச்-ஏப்ரல் மாதங்களில் அடுத்தப் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. இப்பொழுதே, பாஜக சாயமும் மோடியின் பகட்டுக் காரியங்களும் வெளுக்க ஆரம்பித்துவிட்டன.

என்னதான், பகட்டாக உடுத்திக் கொண்டு, மேடையில் நாலாபுறமும் திரும்பிக்கொண்டே வானத்தை வளைப்பதைப் போல பேசினாலும், நலிந்த மக்களும் அடித்தட்டு தொழிலாளர்களும் இந்த மோடி பேசிக் கொண்டே இருக்கிறாரேத் தவிர, தங்களின் இன்னல்தீர ஒன்றும் வழியில்லையே என்று சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர்.

ஒருவேளை, ஆட்சியை இழக்க நேரிட்டால், இனியொரு முறை தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கமுடியாது என்பதையும் கடந்த 10 ஆண்டுகளாக மேற்கொண்ட இந்துத்துவ கட்டமைப்பும் ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கமும் சிதறிவிடுமே என்பதையும் உணர்ந்து, அதனால் எழுந்த கலக்கத்தில் ஆழ்ந்துள்ள பாஜகவும் மோடியும் இன்னும் இரண்டொரு மாதங்களில் நடைபெற உள்ள குடியரசுத் தலைவர் தேர்தலை அதற்கு வகையாகப் பயன்படுத்திக் கொள்ள திட்டம் தீட்டியுள்ளதாகத் தெரிகிறது.

தற்பொழுது 14-ஆவது குடியரசுத் தலைவராக இருக்கும் ராம்நாத் கோவிந்த் (இராமநாத கோவிந்தன்) உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த தலித் சமுதாயத்தவர். இதற்கு முன், இவர் ஆளுநராக இருந்தபோது, ஒரு கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டவர். ஆனாலும், "இரப்பர் முத்திரை"ப் போன்ற குடியரசுத் தலைவர் பதவியை பாஜக இவருக்குக் கொடுத்தபோது, மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

அதையடுத்து,

பாருங்கள்.. பாருங்கள்.. ,

நாட்டோரே, நல்லோரே,

முதலில் ஒரு அப்துல் கலாம், இப்பொழுது ராம்நாத் கொவிந்த் என சிறுபான்மை சமுதாயத்தினருக்கு நாட்டின் உயர் பதவியைக் கொடுத்து அழகு பார்ப்பது நாங்கள்தான் என்று பிரச்சாரம் மேற்கொண்ட பாஜக, அந்த வரிசையில் இப்பொழுது, நாட்டின் தென் பகுதியைச் சேர்ந்த தலித் சமுதாயத்தினரும் திரைப்பட பாடல்-இசைத் துறை மூலம் இந்தியா முழுதும் நன்கு அறியப்பட்டவரும் ஆர்.எஸ்.எஸ். மனப்பான்மை கொண்டவருமான இளையராஜாவுக்கு அந்தப் பதவியைக் கொடுத்து, நாட்டில் உள்ள சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வரிசையாக நாட்டின் உயர்பதவியை அளிக்கும் ஒரேக் கட்சி பாஜக-தான் என்று டமாரம் அடித்துக் கொண்டு, அதன் மூலம் சிறுபான்மையினர் மற்றும் தலித் சமுதாய வாக்குகளை தேசிய அளவில் அறுவடை செய்யவும் குறிப்பாக, தமிழ் நாட்டில் அதன்மூலம் பேரளவில் தேர்தல் அரசியல் லாபம் அடையலாம் என்றும் புதுடில்லி கணக்கு போடுவதாகத் தெரிகிறது.

ஏற்கெனெவே மேல்தட்டு மோகம் கொண்டு அலையும் இளையராஜாவுக்கு பதவி மோகத்தையும் நுகர வைத்தால் அவர் ஒதுக்கியா விடுவார்?

அதனால்தான், மனசாட்சி என்ற ஒன்றே இல்லாத பாஜக-வினரைப் போல, அம்பேத்கரும் மோடியும் ஒன்று என்று இளையராஜா கூவியிருக்கிறார்.

இந்து சமயத்தின் சாதிக் கொடுமையும் தீண்டாமை பெருங்கொடுமையும் தாங்க முடியாமல் பௌத்த சமயத்திற்கு மாறியவர் அம்பேத்கர்.

பள்ளி நாட்களில் ஊர்ப் பொது குளத்தில் இறங்கி குளித்துவிட்டார் என்பதற்காக மராட்டியத்தைச் சேர்ந்த சித்பவன பார்ப்பனர்கள் கங்கை நதியில் இருந்து 108 குடங்களில் தீர்த்த நீரைக் கொண்டு குளத்துக்கு தீட்டு கழித்த கொடுமைக்கு ஆளானவர் பாபாசாகிப் அண்ணல் அம்பேத்கர்.

இந்து மதத்தின் சனாதன கொள்கைப்படி பெண்களுக்கு சொத்துரிமையும் இல்லை சம்பாதிக்கும் உரிமையும் இல்லை.

இவை இரண்டையும் உடைக்கும் முகமாக சட்டம் இயற்றி பெண்களின் கல்விக்கும் வேலைவாய்ப்பும் வழியமைத்த அம்பேத்கர், பெரியாரின் வழி-காட்டுதலின்படி பெண்களுக்காக சொத்துரிமைச் சட்டத்தையும் இயற்றினார்.

இப்படி, காலமெல்லாம் இந்து சமய உயர்சாதிக்காரர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டே வாழ்ந்தவர் அம்பேத்கர். இந்த நிலை, அவரின் அரசியல் பயணத்திலும் தொடர்ந்தது.

இப்படிப்பட்ட அம்பேத்கர் இன்று உயிருடன் இருந்தால், உயர் சாதிக்காரர்-களின் நலனைக் காக்கவும் ஆர்.எஸ்.எஸ். கொள்கையை நிலைநாட்டவும் பாடுபடும் பாஜக-வின் கொம்பு சீவிய காளையான நரேந்திர மோடியைப் பார்த்து பாராட்டுவார் என்று இளையராஜாவால் எப்படி சொல்ல முடிகிறது?

சொந்த இனத்திற்கும் தாய்மொழிக்கும் துரோகம் செய்துவிட்டு மேட்டுக்குடி பக்கம் நாட்டம் செலுத்துவதுடன் சமஸ்கிருத பயிர் வளர்க்கும் இளையராஜாவை புதுடில்லி ராஜ்பவனத்து வாடையும் தொற்றிக் கொண்டது போலும்.

அதனால்தான், தமிழ் நாட்டுப் பக்கம் எப்போதும் திரும்பிப் பார்க்காத, எந்தக் கருத்தும் தெரிவிக்காத பாஜக தலைவர்ஜே.பி. நட்டாவே, இளையராஜாவுக்கு இன்று பாதுகாப்பு அரணாக மாறியுள்ளார்.

எல்லாக் கூத்தும் இன்னும் கொஞ்ச நாட்களில் வெட்ட வெளிச்சத்துக்கு வராமலா போகும்?

**நக்கீரன் -** Nakkeeran 013-244 36 24

# இவ்வார ராசிபலன்

## 22-04-2022 வெள்ளி தொடக்கம் 28-04-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** வாழ்க்கையில் முன்னேற்றம் தரும் வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். விரும்பியது நிறைவேறும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கை துணையால் வளம் பெருகும். பொருளாதாரம் மேம்படும். கடன் பாக்கிகள் வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. மனிதநேயம் மிகுதியாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உடல்நிலையில் கவனம் தேவை. சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் உண்டு. பழையக்கடன் தீரும். விபரீத எண்ணம் விலகும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். துணிவோடு செயல்படுவீர்கள். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோ'ம் குடிக்கொள்ளும். பெற்றோர் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1*

*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B*




**ரிஷபம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். உள்ளம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தன வரவுகள் தடைப்படும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சால் வீண் வம்பு அகலும். உடன்பிறப்பால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். உறவினர் ஒற்றுமை பலப்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

*வழிபட வேண்டிய தெய்வம்: வினை தீர்க்கும் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,8,5*

*அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S*




**மிதுனம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பாராட்டுக்கள் கிடைக்கும். உத்தியோக வாய்ப்புண்டு. மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. சந்தோஷம் அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். மங்கள செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர் உற்சாகம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். கலைத்துறை ஆர்வம் கூடும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். குதூகலமான எண்ணம் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். பாராட்டுகள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசையார்வம் கூடும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,6*

*அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J*




**கடகம்:** எதிர்ப்புக்களால் பொறுப்பு கிடைக்கும் வாரம். விறுவிறுப்பான காலம். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். பெண்களுக்கு கவனம் தேவை. தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. குடும்ப கௌரவம் உயரும். நாட்பட்ட நோய்களுக்கு தீர்வு கிடைக்கும். நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு உண்டாகும். மனைவி சச்சரவுகள் தீரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். பொருள் இழப்பு ஏற்படும். புதிய வேலை முயற்சி பலன் தரும். உல்லாசப் பயணம் இனிக்கும். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,2,1*

*அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X*




**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். விவசாயிகள் பயன்பெறும் வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடவும். தெம்பும், தைரியமும் கூடும். உடல் நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். விவசாயிகள் பயன் பெறுவர். சகோதர வழியில் கவனம் தேவை. தர்மச் சிந்தனை மேலோங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் லாபம் புரளும். செல்வாக்கு மேம்படும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவுகள் கூடும். ஆடம்பரப் பொருள் சேரும். பேரியோர்களின் ஆதரவுப் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனம் மகிழும். பதவி உயர்வு தாமதமாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,7,1*

*அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G*



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: **0091-9840160068 / 9940431377**




**கன்னி:** வகையான வாழ்வமையும் வாரம். உடல்பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதவியில் உயர்ந்த நிலை உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி நிலவும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். இரகசியம் காப்பது நல்லது. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆரோக்யம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சியில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பரால் இனிய செய்தி வந்தடையும். சுபவிரயம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புதியச் சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் திரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். கடன் வி'யத்தில் விடுதலைப் பெறுவீர்கள். செயல்களில் கவனமுடன் இருக்க வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். பிள்ளைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவுகள் ஏற்படும். நன்மைகள் அதிகமாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1*

*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I*




**துலாம்:** பெண்களால் ஆதாயம் சேரும் வாரம். வறுமைகள் அகலும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. திருப்தி அதிகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தந்தையின் உடல் நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பாதகமான சூழ்நிழைலகள் விலகும். குடும்ப மேன்மைகள் உருவாகும். உடல்சோர்வு நீங்கும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். வெற்றி வீடு தேடி வரும். முத்தான வாய்ப்பு பெருகும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6*

*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U*




**விருச்சிகம்:** முத்தான வாய்ப்பு பெருகும் வாரம். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகையால் பலன் உண்டு. பெற்றோர்களின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டாகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். ஆன்மீக சிந்தனை கூடும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். வேண்டாத நபர் விலகுவர். பழையக்கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். திருப்புமுனையான காலம். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தக தொழில் லாபம் தரக்கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,1,3*

*அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T*




**தனுசு:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப வளர்ச்சி கூடும். கௌரவமான காலம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். ஆரோக்யம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கணவன், மனைவி உறவு நீடிக்கும். மருத்துவச் செலவில் திருப்தி அடைவீர். மகான்களின் சந்திப்பு கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். பாதகம் விலகும். முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளிடத்தில் முன்னேற்றம் உண்டு. கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். வேண்டாத விஷயங்கள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மன சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாயில்தேடி வாய்ப்பு வரும். காரிய தாமதம் ஏற்படும். எதிர்கால எண்ணம் உதயமாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3*

*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V*




**மகரம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். போட்டிகள் குறையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்யம் கவனம் தேவை. வியாபாரத்தடை ஏற்படும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். சாதகமான காலம். கௌரவமான தருணம். கன்னிப் பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியிடம் பாராட்டு கிடைக்கும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். மரத்தொழில் லாபம் தரும். நன்மையான விஷயங்களை தொடர்வீர்கள். முதுகில் வலி வந்து நீங்கும். மனபயம் நீங்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2*

*அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K*

(தொடர்ச்சி 34ம் பக்கம்)

# ஈழத்துத் திருக்கோவில்கள் 994



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## பத்திரகாளி அம்பாள் ஆலயம்
## திருகோணமலை

அஞ்ஞாதவாசம் முடிந்து தங்களைப் பாதுகாத்த துர்க்கையைப் போற்றி ஒன்பது நாட்கள் வழிபாடு செய்தனர். பத்தாம் நாளாகிய விஜயதசமியன்று ஆயுதங்களைக் கையிலெடுத்துத் தேவியை வணங்கி, மீண்டும் தமது நாடேகினர். பஞ்ச பாண்டவர்கள் துர்க்கா நட்சத்திர மாலிகா துதி என்ற இருபத்தியேழு சுலோகங்களைக் கொண்ட துதியைப் பத்து நாட்களும் ஓதி, வழிபட்டுப் பல பேறுகளைப் பெற்றனர். இவ்வாறான பல கதைகளோடு வன்னிமரம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. வன்னிமரத்தினை நினைவுகூர்ந்து அன்னையின் அருளைப் போற்றும்வகையில், வன்னிமரக்கிளையொன்றை வாழைமரத்திலே கட்டிவைத்து பூசை செய்து வன்னி வாழைவெட்டு நடைபெறும். இவ்வாறு நடைபெறுவதையே வழக்கில் மானம்பு என அழைப்பர். வெற்றிகளையும், வளங்களையும் அருளவல்ல நவராத்திரி விரதத்தினை மாநோன்பு என்றே ஆதியில் அழைத்துள்ளனர். இச் சொல் பிற்காலத்தில் மருவி வாழைவெட்டன்று நடைபெறும் விழாவை மானம்பு என அழைக்கும் வழக்கமாக மருவியுள்ளது.

பத்திரகாளி அம்மன் ஆலயம் பல் வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதற்கு அன்னையின் அருளும், அன்னைமீது மக்கள் பயபக்தியுடன் செலுத்தும் ஆராத பக்தியுமே காரணமாகக் காணப்படுகின்றது. பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட கும்பவிழாவைப்போல, இளந்தலைமுறையினரையும் ஆலயவழிபாட்டில் ஈடுபடுத்தும் முக்கிய விரதமாகக் கேதாரகௌரி விரதம் அமைந்துள்ளது. சிவ விரதங்களுள் மிக முக்கியமான விரதமாக இவ்விரதம் கருதப்படும். கேதாரகௌரி விரதத்தின் பெயர் காரணமாகப் பலரும் இவ்விரதத்தினைச் சக்திவிரதம் என்றே எண்ணுகின்றனர். இமயமலைச் சாரலிலுள்ள கேதாரநாதர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள கேதாரேஸ்வரப்பெருமானை.

இத்தலத்து நாயகியாகிய கேதாரகௌரி அம்பாள் வழிபட்டு விரதமிருந்தமையால், இவ்விரதத்திற்குக் கேதாரகௌரி விரதம் எனப் பெயர் எறுபட்டது. இவ்விரதம் புரட்டாதி மாதம் விஜயதசமியன்று ஆரம்பித்து, ஐப்பசிமாத அமாவாசைத்திதியில் நிறைவுபெறும். இருபத்தியொரு நாட்களுக்கு அனுட்டிக்கப்படும் இவ்விரதம் திருகோணமலையிலுள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஏறக்குறைய நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இவ்விரதத்தின் பலனாக திருமணப்பேறு, மகிழ்ச்சியான இல்லறவாழ்க்கை, மகப்பேறு என்பன கிட்டுவதால், இவ்விரதத்தினைப் பெருந்தொகையானோர் வருடந்தோறும் அனுட்டித்து வருகின்றனர்.


பத்திரகாளியின் அருளையும் அற்புதங்களையும் உணர்ந்த சக்தி உபாசகர்கள், இவ்விரதத்தை அனுட்டிப்பதற்காக நாடெங்கிலுமிருந்து இவ்வாலயத்தை நாடிவருவர். ஒவ்வொரு வருடமும் சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் இவ்வாலயத்தில் கேதாரகௌரிவிரதத்தை அனுட்டிக்கக் கூடுவர். இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் தரிப்பதற்குரிய விரதநூலும், வகைக்கு இருபத்தியொன்றாக பழம், பாக்கு, வெற்றிலை, மஞ்சள், பூ, பலகாரம் என்பனவும், தேங்காய், விபூதி, குங்குமம், என்பனவும் அடங்கிய பூசைப்பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டு அலங்காரப்பூசை நடைபெறும். பூசை முடிவில் இவ்விரதத்திற்காக முன்னரே பதிவு செய்துகொண்டவர்களை அழைத்துப் பூசைப் பெட்டிகளை வழங்குவர். தனியாக விரதநூலை மட்டும் பெற்று இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களும் உண்டு. ஆலயத்தில் தங்கியிருந்து விரதம் அனுட்டிப்பவர்களுக்கு அடுத்தநாள் பாரணைப்பூசையும் செய்து அனுப்புவார்கள்.

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின் ஆனி உத்தரத் திருவிழாவும் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெற்று வருகின்றது. சிவராத்திரியைத் தொடர்ந்து நடைபெறும் கோணேசர் ஊர்வலத்தில், மாதுமை அம்பாள் சமேத கோணேசப் பெருமான் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஒருநாள் தங்கியிருப்பார். கோணேசப்பெருமான் இவ்வாலயத்திற்கு எழுந்தருளும்பொழுது ஆலய ஆதீனகர்த்தரும், அடியார்களும் பல்வேறு உபச்சாரங்களுடன் மங்கள வாத்தியங்கள் முழங்க வரவேற்று ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்து, பூசை முதலியன முடித்து, மாலையில் மங்கள வாத்தியங்கள் முழங்க வீதியுலாவிற்கு அனுப்பி வைப்பார்கள். இவ்விழாக்களோடு கும்பாபி'கம் நடைபெற்ற திதிக்கு வருடா வருடம் சங்காபிஷேகம் நடைபெறும். சங்காபிஷேகத்திற்கு முன்னுள்ள பத்து நாட்களும், இலட்சார்ச்சனை நடைபெற்ற மறுநாள் சங்காபிஷேகம் நடைபெறும். அம்பிகையின் ஆயிரத்தெட்டு நாமங்களை பீஜமந்திரத்தோடு உச்சரித்து ஐந்து சிவாச்சாரியார்கள் ஒரு நாளைக்கு இரண்டு தரம் பத்து நாட்களுக்கு அர்ச்சனை செய்து இலட்சார்ச்சனையை நிறைவு செய்வார்கள். பத்திரகாளி ஆலயத்திற்கென ஒரு சிரமதானப் பணிக்குழு இயங்கி வருகின்றது. இவ்வாலயம் சிறப்பாக இயங்குவதற்கு ஆதீனகர்த்தரின் செயற்பாடுகளும், சிரமதானப் பணிக்குழுவின் பணியும், மக்களின் பங்களிப்பும் பெரிதும் கைகொடுத்து உதவுகின்றது.

பத்ரகாளி அம்பாள் மீது ஆராத பக்திகொண்டு அன்னையின் புகழைப் பாடிப் பரவசமானோர் பலராகக் காணப்படுகின்றனர். திரு. வி. வேலாயுதபிள்ளை ஆசிரியர் மற்றும் திரு வே. அகிலேசபிள்ளை ஆகியோர் பத்திரகாளி அம்பாள் மீது திருவூஞ்சல் பாடல்களைப் பாடியுள்ளனர். இவ்வாறே திரு. வ.கோ. வேலுப்பிள்ளை வைத்தியர் அவர்கள் திருகோணமலைப் பத்திரகாளி அம்மன் காவியத்தையும், திரு மாசிலா சிவதாசன் அவர்கள் பத்திரகாளி திருக்குளிர்ச்சிக் கவிகளையும் பாடி அன்னையைப் போற்றியுள்ளனர்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட பத்தரிகாளி அம்பாள் திருவருளால் பல அற்புதங்கள் காலத்திற்குக் காலம் நடைபெற்று வருகின்றது. இக்காரணத்தினால் அம்பாளின் மீது பக்தர்களுக்குப் பயபக்தி ஏற்படுகின்றது. தமது துயர்களைத் தாயிடம் கூறி ஆறுதல் அடைவது போல உலகமாதாவாகிய அன்னை பத்திரகாளி அம்பாளிடம் கூறி, இவ்வூர் மக்கள் ஆறுதல் அடைவர்.

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments


உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

## இவ்வார ராசிபலன்

*(32ம் பக்கத் தொடர்ச்சி)*




**கும்பம்:** நன்மைகள் நாடி வரும் வாரம். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. சம்பள உயர்வு உண்டு. சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புக்கள் கூடும். வியாபாரம் செழிக்கும். சாதுர்யமான காலம். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். பணவரவு பெருகும். அற்புத வாய்ப்பு கிட்டும். குடும்ப பிரச்சனைகள் தீரும். தேவைகள் நிறைவேறும். உடல் வலியிலிருந்து விடுதலை அடைவீர். எதிர்ப்புகள் விலகும். மெத்தனப்போக்கு விலகும். பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். நினைத்த வி'யங்களில் வெற்றி நிகழும். பொன்னான நேரம் உங்களை வந்தடையும். பிள்ளைகளிடத்தில் உங்கள் அன்பு அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் வளம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**மீனம்:** உயர்வு பெறும் வாரம். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். கலைத்தொழிலில் கவனம் தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. நட்டமில்லாத நன்மை தரும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். குடும்ப வளர்ச்சி பெருகும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோ'ம் கூடும். மன அமைதி உண்டாகும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H

# பூர்ணிமா பாக்யராஜ் சுயசரிதை நூலை தமிழச்சி தங்கபாண்டியன் வெளியிட்டார்



நடிகை பூர்ணிமா பாக்கியராஜின் சுயசரிதை புத்தகத்தை தமிழச்சி தங்கபாண்டியன் வெளியிட ரம்யாகிருஷ்ணன் மற்றும் சினேகா பெற்றுக்கொண்டனர். நடிகை பூர்ணிமா பாக்கியராஜின் சுயசரிதை "தன்னை உணர்ந்தனள் தகைமை உயர்ந்தனள்" புத்தக வெளியீட்டு விழா சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவையில் நடைபெற்றது.

"தன்னை உணர்ந்தனள் தகைமை உயர்ந்தனள்" புத்தகத்தை சென்னை தெற்கு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வெளியிட, நடிகை சினேகா பிரசன்னா பெற்றுக்கொண்டார். இந்த புத்தகத்தின் ஆங்கில பதிப்பான "Aesthetics Recaptured" நூலை நடிகை ரம்யாகிருஷ்ணன் பெற்றுக்கொண்டார். "தன்னை உணர்ந்தனள் தகைமை உயர்ந்தனள்" புத்தகத்தை திருமகள் ராஜாராம் எழுதியுள்ளார். 'Aesthetics Recaptured' நூலை ஹேமாமாலினி குணாநிதி எழுதியுள்ளார். 20 தலைப்புகளுடன், 20 பகுதிகளாக இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

தமிழ் நூலின் திறனாய்வை ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் விஜயலட்சுமி இராமசாமி மேற்கொண்டார், ஆங்கில நூலின் திறனாய்வு பணியை ஏ மாத இதழின் தலைமை நிர்வாக அதிகாரி சுமதி ஸ்ரீநிவாஸ் செய்தார். இது பயோகிராபி இந்தியா பதிப்பகத்தின் முதல் புத்தக வெளியீட்டு விழாவாகும். பூர்ணிமா பாக்கியராஜ் தமிழ், மலையாளம், தெலுங்கு என்று பல மொழி திரைப்படங்களில் நடித்துள்ளார். பிரபல இயக்குனர் மற்றும் நடிகர் பாக்கியராஜின் மனைவியான இவர் திரைத்துறை பிரபலங்கள் ஆன சாந்தனு மற்றும் சரண்யாவின் தாயார் ஆவார்.





30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கனித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
My 123 Mini Library
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com




Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca





26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX
ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING



உதயம் 1359 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 22, 2022

# ரஸ்யா செல்வதால் எமக்கு எந்த ஆதாயமும் இல்லை என்கிறார்கள் ரஸ்யாவினால் தடை விதிக்கப்பட்ட கனடிய அரசியல் பிரமுகர்கள்





“ரஸ்யா செல்வதால் எமக்கு எந்த ஆதாயமும் இல்லை. எனவே நாம் எதற்கு அந்த நாட்டுக்குச் செல்ல வேண்டும். அந்த பைத்தியக்காரர்களின் தடை எம்மை ஒன்றும் செய்யாது“ இவ்வாறு தெரிவித்துள்ளார்கள், நேற்று ரஸ்யாவினால் தடை விதிக்கப்பட்ட கனடாவின் அரசியல் பிரமுகர்கள் பலர். இவர்களில் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களும் ஒருவர் என அறியப்படுகின்றது. கனடாவில் தற்போது பல்வேறு பதவிகளில் உள்ள முதல்வர்கள், நகர மேயர்கள், உளவுத்துறை மூத்த அதிகாரிகள் உட்பட பல எண்ணிக்கையிலான பிரமுகர்களுக்கு ரஸ்யா தடை விதித்து அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.
*(தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*

# கனடா வாழ் ‘குட்டிப் பாடகன்’ அஜீஸ் சிவகுமார் பாடியுள்ள திரைப்படப் பாடல் *“It's my kinda day”*



சூர்யா-ஜோதிகா தயாரிப்பில் அருண் விஜய் அவரின் மகன் ஆர்னவ் விஜய் மற்றும் அருண் விஜயின் தந்தை விஜயகுமார் என மூன்று தலைமுறை இணைந்து நடிக்கும் திரைப்படம் ஓ மை டொக்.

இந்தப் படம் செல்லப்பிராணியான நாய்க்கும் சிறுவனுக்கும் இடையில் நடக்கும் பாசப்பிணைப்பை பற்றிய படமாக இருக்கலாம் என எதிர்பாக்கப்படும் நிலையில், இந்த திரைப்படத்தில் இடம்பெறவிருக்கும் ***It's my kinda day*** என்ற பாடல் அண்மையில் யூடியூப்பில் வெளியாகி இலட்சக்கணக்கான பார்வையாளர்களை கடந்து வெற்றிநடை போடுகிறது. சூப்பர் சுப்பு வரிகளை எழுத, நிவாஸ் கே பிரசன்னா இசையமைத்திருக்கும் இப்பாடலை கனடா வாழ் ‘குட்டிப் பாடகன்’ அஜீஸ் சிவகுமார் பாடியுள்ளார். பின்னணிப்பாடகனாக உருவெடுத்திருப்பது மகிழ்வைத்தருவதாக குறிப்பிடும் கனடாவில் வசிக்கும் ஈழத்தமிழ் சிறுவனான அஜீஸ் தனது பெற்றோரின் ஒத்துழைப்புடனும் ஊக்குவிப்புடனும் இன்னும் பல பாடல்களை பாட விரும்புவதாகவும் தெரிவித்துளளார்.

The Association of Canadian Tamil Poets
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
ஏற்பாட்டில்...
தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் அ. தமிழரசி அவர்களின்
‘தேடல் சுகமானது’ மற்றும்
‘உடைத்தெழும் விதைகள்’
ஆகிய இரண்டு கவிதை நூல்கள்வெளியீட்டு விழா
இடம்: The Estate Banquet & Event Centre
430 Nugget Ave.
Scarborough, ON M1S 4A4
(Markham & Nugget சந்திப்பில்- கீழ்த்தளம்)
காலம்: 01-05-2022 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6:00
கவிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோர் அனைவரும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.
மேலதிக விபரங்களுக்கு: கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
(416) 272-5332 | (416) 732-8021 | (647) 224-8871





JRS College
of Business and Health Care Inc.
Start your Second Career with us!
FINANCIAL AID AVAILABLE!
PLACEMENTS AVAILABLE!
ZERO APPLICATION FEE!!
Programs starting soon:
-> Personal Support Worker
Starting April 25, 2022
-> Early Childhood Assistant
Starting April 25, 2022
-> Food Service Worker
Starting April 28, 2022
CONTACT US
416 292 2455
4168 Finch Ave E,
Scarborough, ON M1S 3V1





